ஜோதி

சித்திர சகிதமான மாதப் பத்திரிக்கை

சுடர் 2

கதிர் 7–12

(இரண்டாம் பகுதி)

1939௵ பிப்ரவரி௴ முதல்

1939௵ ஜுலை௴ வரை

பொருளடக்கம்

ஆசிரியர்

வெ. சாமிநாத சர்மா

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்,

47, 31வது வீதி, இரங்கூன்.

1939.

வாழ்வு, தாழ்வு, இன்பம், துன்பம், எல்லாம் தாய் நாட்டின் பொருட்டு

"ஜோதி"

இரண்டாவது வருஷ

வைஸ்ட் வால்யூம்

இரண்டு பகுதிகள்

விலை: ரூ. 4—8—0

ஜோதி பிரஸ், 47, 31வது வீதி, இரங்கூன்.

வந்தே மாதரம்:

"ஜோதி"

இரண்டாவது சுடர் இரண்டாம் பகுதி

பொருளடக்கம்

அரசியல

	கதிர்—பக்கம்
அந்நிய நாட்டுத் தூதர்களின் அந்தஸ்து	8 - 33
அமெரிக்காவின் யந்திர நாகரிகம்	12 - 66
அமெரிக்கா ஏன் தனது ஆயுத பலத்தைப் பெருக்குகிறது?	8 - 29
இந்தியாவிலிருந்து காப்பிக்கொட்டை ஏற்றுமதி	11 - 79
இந்தியாவிலிருந்து அரிசி எவ்வளவு ஏற்றுமதியாகிறது?	9 - 88
இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி	8 - 69
இந்தியாவில் விவசாய நிலங்களும் அவற்றினின்று கிடைக்கிற அரிசி ஏற்றுமதி விவரமும்	10 - 76
உலகத்தில் சமாதானம் ஏற்பட வழியென்ன?	7 - 25
உலகத்தின் மொத்த ராணுவச் செலவு	8 - 70
உலகத்தின் ஜனத்தொகை	8 - 103
உலக யுத்தமும் ருஷ்யாவும்	12 - 17
உலக வல்லரசுகளின் படை பலம்	9 - 90
ஏகாதிபத்தியம் என்றால் என்ன?	12 - 64
ஐரோப்பாவில் ஸ்பெயினுடைய ஸ்தானம் என்ன?	12 - 30
காங்கிரஸ் பிரசிடெண்டு தேர்தல்	8 - 38
காந்தி—போஸ் நிருபங்கள்	11 - 89
காந்தீயம்	12 - 13
காப்பிக் கொட்டையின் வரலாறு	11 - 77
கிராம வேலை—சில யோசனைகள்	10 - 13
கிரானடாவில் இந்தியர்கள்	10 - 53
சமஷ்டி அரசியல்	7 - 60
சமஷ்டி அரசியலில் சட்ட சபைகள்	12 - 94
சராசரி துணி உபயோகம்	7 - 83
சர்வ தேசப் பொதுவுடைமைக் கட்சியின் வேலைத் திட்டம்	12 - 80
சூயஸ் கால்வாய்	10 - 60
டேனிஸ் எங்கே யிருக்கிறது?	7 - 15
தக்ளியினால் உண்டாகும் சாதகங்கள்	10 - 57
தட்டில் செலவில்லாத நாடு	8 - 71
திரிபுரி காங்கிரஸ்	9 - 17
துருக்கிய ஜனக்கட்சியின் வேலைத் திட்டங்கள்	11 - 53
நாஜி கட்சியின் வேலைத் திட்டம்	10 - 17
நூல் இறக்குமதியும் உற்பத்தியும்	[illegible] - 59
பர்மியர்களின் கைத் தொழிலும் கல்வி யறிவும்	7 - 21
பருத்தித் துணி	10 - 63
பிரசாரம் செய்வோர் எத்தகையராயிருத்தல் வேண்டும்!	11 - 81

	இதழ்—பக்கம்
பிரிட்டனும் இந்தியாவும்	11 - 17
மஹாத்மாவின் உருவச்சிலை	8 - 11
முஸோலினியின் அன்றாட வேலை	10 - 81
மெமெல் எங்கே இருக்கிறது?	9 - 15
ருமேனியாவுக்குச் சாவு மணியா?	9 - 12
விஞ்ஞானமும் தேசிய வாழ்வும்	7 - 9
விவசாயிகள் கடன் தீர ஒரு வழி	7 - 54
வீழ்ந்துபட்ட அல்பேனியா	10 - 55
ஸ்பெயினின் தற்போதைய ராணுவபலம்	8 - 34
ஸ்விட்ஜர்லாந்து மத்தியஸ்தமாயிருக்க வேண்டியதன் அவசியம்	8 - 93
ஜெக்கோ ஸ்லோவேகியாவின் இன்றைய பொருளாதார நிலை	9 - 39
ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள்	10 - 30
ஜெர்மனியின் நோக்க மென்ன?	7 - 57
ஜெர்மானியர்கள் நினைப்பது என்ன?	10 - 65
ஜெர்மனியின் லாப மென்ன?	11 - 68

அன்றாட உலகம்

தினசரி நிகழ்ச்சிகள்	7 - 94, 8 - 87, 9 - 94, 10 - 93, 11 - 65, 12 - 98

இலக்கியம், கலை முதலியன

ஆன்ம சக்தி	8 - 31
ஊக்கமாக வேலை செய்	10 - 63
எத்தகைய கல்வி பெண்களுக்குப் போதிக்கப்பட வேண்டும்?	8 - 25
கண்ணன் திருவிளையாடல்	11 - 73
சாமுத் திரிகம்	8 - 99
சில ஜீவிய ஜந்துக்களின் வயது	8 - 96
சுதந்திர மொழிகள்	9 - 93
தமிழ் நாடும் திரைப்படமும்	9 - 33
தாழ்மையின் தகவுடைமை	12 - 87
திருக்குறளின் அமைப்பு	9 - 46
திருவிளையாடலின் ரகசியம்	12 - 85
நல்லொழுக்கம்	8 - 54
நாடும் நகரமும்	12 - 60
நான்கு வகை மனிதர்	11 - 63
பகழிக்கூத்தரின் பாடற் பணி	7 - 111
பிச்சைக்கார ராஜ்யம்	7 - 24
பிகூர்க்கு காட்சிகள்	7 - 32
புலவரை அரசராக்கிய சோழன்	10 - 90
பெரிய காரியங்களைச் சாதித்தவர்கள்	8 - 74
மனோதர்மம்	9 - 73, 10 - 33

	கதிர்—பக்கம்
மனிதனது சிறுமையும் பெருமையும்	11 - 85
மனிதனின் அந்தரங்க மாளிகை.	10 - 17
முயற்சியைக் கைவிடாதே	8 - 35
வார்தா கல்வித் திட்டம்	12 - 49
ஜூலியஸ் சீஸர்	7 - 49, 11 - 33

சரித்திரம்

ஆப்ரிக்காவின் அழகு	12 - 23
உலகத்திலுள்ள பணக்கார குடும்பம்	8 - 75
கோபால கிருஷ்ண கோகலே	7 - 42
சியாங்-கை-ஷேக்கின் ஒரு நாள் வாழ்க்கை	9 - 42
நவாப் சையித் முகம்மது பஹதூர்	12 - 58
பண்டித மதன் மோகன் மாளவியா	9 - 66
பண்டித விஷன் நாராயணதர்	10 - 50
பண்டைய மன்னர்கள்—அவர்களின் வரலாறு	11 - 44
புராதன இந்தியாவில் போக்கு வரவு சாதனங்கள்	9 - 35
புராதன எகிப்து	12 - 74
மஹாகவி பார்வி	8 - 66
மாஜி கெய்ஸர்	8 - 79
மொகலாய அரசாங்கம்	8 - 49
ரகுநாத நரசிம்ஹ முதோல்கர்	11 - 23
ராணி நூர்க்காவதி	7 - 45
ராஷ் பிஹாரி கோஷ்	8 - 39
விஜய நகரத்தின் வளமை	12 - 46
வென்றி மாலைக் கவிராயர்	7 - 69
ஜாவானியர்	11 - 25
ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்	10 - 22
ஸ்ரீ இராம சந்திரன் மகிமை	8 - 77

சிறு கதைகள்

கர்ம பலன்	10 - 31
கனவோ? நினைவோ?	11 - 69, 12 - 33
குமுதம்	7 - 84
சுமதியும் ரோஜாவும்	7 - 65
தடபுடல் கல்யாணம்	8 - 12
நல்ல புத்தி	8 - 60, 9 - 51, 10 - 43, 11 - 47, 12 - 52.
நாகரிகக் கல்வி	7 - 102
லஞ்சம்	7 - 37
விபரீத ஆசை	9 - 69

ஞானக்களஞ்சியம்

பெரியோர் மொழிகள் 7 - 29, 8 - 56, - 9 - 49, 10 - 40, 11 - 40, - 12 - 42

துலாக்கோல் (புத்தக விமரிசனம்)

அற்புத உலகம் .... 10 - 89
இளைஞன் கனவு .... 12 - 105
சில்பஸ்ரீ .... 7 - 101
சொற்பன உலகம் .... 7 - 100
தமிழர் யார்? .... 10 - 89
தான வ்ருதம் .... 12 - 103
திருவாரூர்ப்பள்ளு .... 7 - 101
நவ மணி மாலை .... 8 - 93
மரபுத் தொடர்கா வரிசை .... 10 - 89
மாதங்கிணி .... 8 - 97
மாயா விநோதினி .... 8 - 97
ரஜனி .... 10 - 87
லோகமான்ய பால கங்காதர திலகர் .... 10 - 88
விஜயா .... 12 - 102
ஸேவா ஸ்தனம் .... 10 - 87
ஜோதி வால பரமானந்த சுவாமிகள் சரித்திரம் .... 12 - 104

நமது நிருபர்களுடன்

ஆசிரியருக்கு வந்த கடிதங்களும் அவைகளுக்குப் பதில்களும் 7 - 90, 8 - 83, 9 89, 10 - 83

நமது நியாய சபை

தலையங்கம் .... ஒவ்வொரு கதிரிலும் முதற் பக்கத்தில்

பாடல்கள்

ஓங்கிக் கொட்டு பேரிகை .... 9 - 91
கைம் பெண் .... 9 - 80
தமிழ்த் தாத்தா .... 7 - 40
தமையனின் கடிதம் 8 - 10, 11 - 80, 12 - 72
தேனீ .... 8 - 65
மழை .... 10 - 27
வான் தரு இன்பம் .... 7 - 72

விஞ்ஞானம் (அறிவுத் துறை)

பூமி அடிவாய் அசைதல் என்றால் என்ன? .... 9 - 81
[illegible]ஷணம் என்றால் என்ன? .... 8 - 42
சப்தம் தகிக்குமா? .... 7 - 73
மின்சார உழவு .... 10 - 69

பிரசித்தி பெற்ற பெல்போன் கிராம
போன்களையே வாங்க வேண்டுமென்று
உறுதி கொள்ளுங்கள்

எல்லா மாடல்களும் கிடைக்கும்.

நாங்கள் பெல்போன் கிராமபோன்களுக்கு
ஸோல் டிஸ்ட்ரிப்யூடர்கள்.

எச். எம். வி., கொலம்பியா, டிவின்,
ஓடியோன், ஸன் முதலிவைகளுக்கு
ஏஜெண்டுகள்;

தமிழ், தெலுங்கு பாஷைகளிலுள்ள
பிலிம் ரிகார்டுகளும், செட் ரிக்கார்ட்டு
களும் எங்களிடம் கிடைக்கும்.



கல்கத்தா விலைக்கு எல்லா சங்கீத வாத்தியங்களும் அகப்படும்.

SEN BROTHERS & Co.

சென் பிரதர்ஸ் அண்ட் கோ.,

338, டல்ஹவுஸி தெரு, இரங்கூன்.

கலர்ப் படங்கள்

விற்பனைக்கு

'ஜோதி'யில் வெளியாகும் கலர்ப் படங்களை, தனியாகச் சட்டம் போட்டு மாட்டி வைக்கப் பல அன்பர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் சௌகரியத்தை உத்தேசித்து கலர்ப் படம் ஒன்று

ஒரு அணா விகிதம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

10 படங்கள் சேர்த்து வாங்குவோருக்கு 8 அணா.

தபால் சார்ஜ் தனி

மானேஜர்,

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி,
லிமிடெட்.

47, 31வது வீதி, இரங்கூன்,

அமிர்தாஞ்ஜனம்.

எல்லாவிதமான
நோய்களுக்கும்
கைகண்ட சஞ்சீவி

தலை வலி நெஞ்சு வலி முதுகு வலி பல் நோய்

கைகா லுளைச்சல்
கை கால் குளிர்ச்சி
வாய்வு நோய்கள்
பக்ஷவாதம்
செவி நோய்
வெட்டுக்காயம்
வயிறு உப்புசம்
இருமல் ஜுரம்

எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்

எங்கும் கிடைக்கும்.

படை மருந்து

எந்தவிதமான படையா யிருந்தாலும் ஆச்சரியப் படத் தக்க விதமாய் குணப்படுத்த வல்லது. மூன்று கலரில் லேபில் உள்ள "சூரியன்" மார்க் மருந்தைப் பார்த்து வாங்கவும்.

பற் பொடி

பல் சம்பந்தமான எல்லாவித வியாதிகளையும் குணப் படுத்திப் பல்லை பளிங்கென மினுரச் செய்து, வாய் நாற்றத்தையும் பல் வலியையும் போக்கி மகிழச் செய்வது.

சிரங்கு மருந்து

சரீரத்தைக் கெடுக்கும் சொரி சிரங்கு, மேகநீர் சம்பந்தமான ஆறுத புண் முதலிய கொடிய வியாதிகளை குணப்படுத்துவதில் நிகரற்றது.

போலி ஏமாறுதீர்கள் !

குறிப்பு:-- வியாபாரிகள் சிலர் வேறு மருந்துகளைக் கொண்டு அமிர்தாஞ்சனம் என்றுவிற்று வருகிறார்கள். ஆகையால் மோசம் போகாமல் அசல் அமிர்தாஞ்சனம் ஐந்து பாஷை அடங்கிய சீட்டையும் டப்பியையும் பார்த்து வாங்கி லாபம், குணமடையவேண்டுமென எச்சரிக்கை செய்கிறோம்.

அமிர்தாஞ்ஜனம்
லிமிடெட்,

மதராஸ், பாம்பே, கல்கத்தா,

பர்மா பிரதிநிதிகள்:—

கே. எஸ். என். மூர்த்தி,
94, மொகல் வீதி, இரங்கூன்.

உ ங் க ள் அ தி ரு ஷ் ட ம்

காந்தி ஜோசியரால் விவரிக்கப்படுகிறது.

எல்லாம் தலைவிதி என்று ஏமாற வேண்டாம். உங்களது எதிர் கால பலனை அறிந்து அதின்படி நடப்பதால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும். மானிட வாழ்க்கைக்கு சோதிடம் இன்றியமையாததாகும். நம்மால் எழுதப்படும் இப்பலன்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கும். ஆரோக்கியம், குடும்பம், வருமானம் அல்லது நஷ்டம், தொழில் வழி, பிரயாணம், பந்து, மித்திரர், விரோதி, வேஷக்காரர், அதிகாரி இவர்களினால் ஏற்படும் சம்பவங்கள், காதல் லாடிரீ ரேஸ் எதிர் பாராத லாபம் அதிருஷ்ட துரதிருஷ்ட நாட்கள் மற்றும் பல முக்கிய விஷயங்களேயும் மாதவாரி எழுதி அனுப்புகிறோம். கிரம பலன் ஏதாவது ஏற்படுமானல் அதற்கான படி பரிகாரமும் இதில் எழுதப்படும்.

சார்ஜ் விவரம்:—ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத ரூ 3-0-0
ஒரு வருஷப் பலன் வாராந்திரமாக ரூ 10-0-0
ஆரூடம் 5 கேள்விகளுக்குபதில் ரூ 1-0-0
வி. பி. தபால் சிலவு ரூ 0-6-0

குறிப்பு:—ஜாதக நகல் அல்லது ஜனன கால விவரம் இது தெரியாதவர்கள், முழுப் பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது தொழில் இவைகளை தெரிவிக்க வேண்டும்.

சென்னை பிரபல தேசிய தமிழ் தினசரி. சுதேசமித்திரன் 30-1-37ல் எழுதுவதாவது:—

“காந்தி ஜோஸ்யர் என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹநுமத் உபாசி ஸ்ரீமான் வி. கே. சடகோபாச்சாரியாரை, மித்திரன் நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ வாரம்பித்தது. இப்பொழுது மேற்படி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்து விட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரியாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்கு பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஜோதிஷ ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஹநுமத் உபாஸி,

வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி. S. இந்தியா.

கேரள சந்தன ஸோப்

அழகும் மணமும் பொருந்தியது.

எல்லோரும் விரும்புவது / எங்கும் கிடைக்கும்.

பர்மா சோல் ஏஜெண்டுகள்:— சிந்துராய் அண்கோ.,

375, டல்லவுஸி வீதி, இரங்கோன்,

ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 2 **பிப்ரவரி-1939** **கதிர் 7**

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	(தலையங்கம்)	1
விஞ்ஞானமும் தேசீய வாழ்வும்	பண்டித ஜவஹர்லால் நேரு	9
உலகத்தில் நடப்பதென்ன ?	(கார்ட்டூன்கள்)	17
பர்மியர்களின் கைத்தொழிலுங் கல்வியறிவும்	கு. கோ கிருஷ்ணன் B. Sc. (Hons)	21
பிச்சைக்கார ராஜ்ஜியம்	—	24
உலகத்தில் சமாதானம் ஏற்பட வழியென்ன ?	ஏ. எஸ்.	25
ஞானக்களஞ்சியம்	ரா. ஸ்ரீனிவாச ராவ்	29
பிறங்கு காட்சிகள்	(படங்கள்)	32
லஞ்சம்—சிறு கதை	சு. குருசாமி B. A.	37
தமிழ்த் தாத்தா !	வித்வான் எஸ். உமைதாணு பிள்ளை	40
கோபால கிருஷ்ண கோகலே	"ஒரு காங்கிரஸ் வாதி"	42
ராணி துர்க்காவதி	சொக்கலிங்கம் பிள்ளை	46
ஜூலியஸ் ஸீஸர்	வி. தேவாச்சாரியன்	49

விவசாயிகள் கடன் தீர ஒரு வழி	" வாதூலன் "	54
சமஷ்டி அரசியல்	கே. வி. ராமசுப்ரமண்யம் B. A., B. L.,	60
'டாமி'யும் 'ரோஜா'வும்	எஸ். ஆர்.	65
வென்றி மாலைக் கவிராயர்	சு. சோமசுந்தர தேசிகர்	69
வான் தரு இன்பம்	தேவி தாசன்	72
சப்தம் தகிக்குமா?	" விஞ்ஞானபோதகர் "	73
சராசரி துணி உபயோகம்	—	83
குமுதம்—சிறு கதை	எஸ். கிருஷ்ணன்	84
நமது நிருபர்களுடன்	—	90
அன்றாட உலகம்	—	94
துலாக்கோல்	(புஸ்தக விமரிசனம்)	100
நாகரிகக் கல்வி—சிறு கதை	" வருணன் "	102
பகழிக் கூத்தரின் பாடற் பணி	வ. மு. இரத்தினேசுவரையர்	111

ஜோதி

சுடர் 2 | பிப்ரவரி-1939 | கதிர் 7

தலைமை

இந்த இதழ் அன்பர்களின் கையில் போய்ச் சேருவதற்குள் திரிபுரி காங்கிரஸின் தலைவர் யார் என்ற விவரம் நிச்சயமாகத் தெரிந்து விடும். யார் தலைவராக வந்தாலும் அவருக்கு முன் கூட்டியே நாம் நமது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டி ஏற்பட்டிருப்பதையும், அபேட்சகர்களின் தேர்தல் அறிக்கைகள் பிறந்திருப்பதையும், குறித்த ஓர் அபேட்சகரையே ஆதரிக்க வேண்டுமென்று தலைவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகிப்பதையும் பார்க்கிற போது, உண்மையில் நமக்கு ஒரு வித மனச்சோர்வு ஏற்படுகிறது. 'இந்திய தேசியமே! நீ எத்திசை நோக்கிச் செல்கிறாய்?' என்ற கேள்வி நம்மை யறியாமலே நமது வாயினின்று வருகிறது.

திரிபுரி காங்கிரஸ் தலைவர், சுபாஷ் சந்திர போஸா, பட்டாபி சீதாராமய்யாவா என்பது நமக்கு முக்கியமல்ல. காங்கிரஸ் தலைமைப் பீடத்தில், இறந்து போன புனித ஆத்மாக்களின் நிழல் பட்டுக்கொண்டிருந்தாலுங் கூட அதற்கு நாம் வணக்கஞ் செலுத்துவோம். பதவிக்குத் தான் நாம் மதிப்புக் கொடுக்கிறோமே தவிர, அதிலே அமரும் தனி நபருக்கல்ல. அந்தத் தனி நபர், எவ்வளவு பெரிய மனிதரா யிருந்தாலும், எத்தகைய தியாகியா யிருந்தாலும், அந்தப் பீடத்திற்குரிய பொறுப்புடனும் பெருந்தன்மையுடனும் நடந்து கொள்ளா விட்டால், அவரைக் கீழே கைலாகு கொடுத்து இறக்கி விட தேச மக்களுக்கு உரிமையுண்டு. இப்பொழுது நாம் தெளிந்து கொள்ள வேண்டியது, பூரண சுதந்திரப் போராட்டத்திலே இறங்கி யிருக்கும் ஒரு தேசத்தின் தலைமைக்குப் போட்டி இருக்கலாமா, கூடாதா வென்பது தான்.

தலைவர் தேர்தலைப் பற்றிய சில விவரங்களை நேயர்களுக்குத் தெரிவித்து விட விரும்புகிறோம். கான் அப்துல் கப்பார் கான், மௌலானா அபுல் கலாம் அஸாத், ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா ஆகிய நால்வர் பெயர்களும்

முதலில் மாகாணக் கமிட்டிகளால் சிபார்சு செய்யப் பட்டன. இந்த நால்வரில் முதல் இருவரும் தங்கள் விருப்பமின்மையைத் தெரிவித்து விட்டார்கள். எனவே, பின்னிருவருக்கும் இப்பொழுது போட்டி நடைபெறுகிறது.

காங்கிரஸானது, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சைந்நிய மென்றும், அஃது ஒழுங்குக்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டுமென்றும் காந்தியடிகள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். இதில் ஜனநாயக தத்துவத்தின் பெயரால் ஒழுங்கு மீறி நடப்பதற்கு யாருக்குமே உரிமையில்லை. அந்த உரிமை வேண்டுவோர் ஸ்தாபனத்தை விட்டு விலகி விடுதல்தான் நல்லது. ஒழுங்குக்குக் கட்டுப் பட்டுச் செல்லும் சேனைக்குத் தலைவன் ஒருவனாகவே இருத்தல் முடியும். இந்தத் திருஷ்டி கொண்டு தான் நாம், காங்கிரஸ் தலைமைப் பதவியை நோக்குகிறோம்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், தமது அறிக்கையில் பின் வருமாறு கூறுகிறார்:—

இந்தியாவில், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடை பெறும் போராட்டமானது, மிகவும் கூர்மையாகிக் கொண்டு வருவதன் விளைவாக, புதிய எண்ணங்கள், புதிய லட்சியங்கள், புதிய பிரச்னைகள், புதிய வேலைத் திட்டங்கள் முதலியன தோன்றியிருக்கின்றன. ஆகையால், எல்லாச் சுதந்திர நாடுகளிலும் அநுஷ்டிக்கப் படுவது போல், இந்தியாவிலும் (காங்கிரஸ்) தலைவர் தேர்தல், போட்டி, குறிப் பிட்ட பிரச்னைகள், வேலைத் திட்டங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு நடை பெற வேண்டுமென்ற எண்ணத்துக்குப் பொதுஜன அபிப்பிராயம் வந்து கொண்டிருக்கிறது. இந்தப் போட்டியினால், தேசியப் பிரச்னைகள் சம்பந்தமான சிக்கலறுபடுவதோடு, பொதுஜன அபிப்பிராயமும் எந்தத் திசை நோக்கிச் செல்கிற தென்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும். இந்த நிலைமையில் (தலைவர்) தேர்தல் போட்டி நடை பெறுவது விரும்பத்தகாத தென்று சொல்ல முடியாது.

இந்த அபிப்பிராயத்தை நாம் அங்கீகரிக்கவே முடியாது. இந்த வாசகங்களே முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றன வென்று நாம் அஞ்சுகிறோம். சுதந்திர நாடுகளைப் போல் இங்குத் தேர்தல் போட்டி நடைபெறலாம் என்கிறார். ஆனால் நாம் அந்தப் பாக்கியத்தைப் பெறவில்லை. சுதந்திரமுள்ள நாடுகளிலே அநுஷ்டிக்கப் பெறும் முறைகளை சுதந்திரமில்லாத நாட்டிலே எப்படி அநுஷ்டிக்க முடியும்? மற்றும் நம் முன்னருள்ள பிரச்னைகள், வேலைத் திட்டங்கள், எண்ணங்கள் ஆகிய எல்லாம் ஒரே லட்சியத்தைக் குறிக் கோளாகக் கொண்டிருக்கின்றன. அதுதான் பரிபூர்ண சுதந்திரம். இதில் கருத்து வேற்றுமை இருப்பதற்கு நியாயமே இல்லை. இந்தச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு, நமது வேலைத் திட்டங்களைப் பற்றியும் அப்பொழுது எழும் பிரச்னைகளைப் பற்றியும் அபிப்பிராய வேற்றுமைகள் உண்டாகலாம். அவற்றை அடிப்படையாகக் கொண்டு கட்சிகளும் தேர்தல் போட்டிகளும்

நடைபெறுமானால் அதில் அர்த்த மிருக்கிறது. போராட்ட நிலையிலே, போட்டிக்கு இடமெங்கே யென்று நாம் கேட்கிறோம்.

தவிர, காங்கிரஸ் தலைமைப் பதவி அதிகார மில்லாத ஒரு கௌரவந்தான். இந்தப் பதவியி லிருந்து கொண்டு, தொண்டுதான் செய்ய முடியுமே தவிர, ஜனங்களின் நன்மைக்காக அதிகாரப் பிரயோகம் செய்ய முடியாது. ஸ்ரீ போஸின் வாதத்தைக் கொண்டு பார்த்தால்கூட, அதிகார மில்லாத ஒரு கௌரவ பதவிக்குச் சுதந்திர நாடுகளில் இங்ஙனம் விபரீதமான போட்டிகள் எற்படுகின்றதாகத் தெரிய வில்லையே. உதாரணமாக, சட்டசபைத் தேர்தல்களில் போட்டி யிருக்குமானால் அஃது ஆச்சரியப்படத்தக்க தல்ல; முறையுங்கூட. ஏனென்றால், அதிகார பலத்தைப் பெற்றுக் கொண்டு, அதன் வாயிலாக ஜனங்களுக்குத் தங்கள் மனப் போக்கின்படி நன்மை செய்ய வேண்டுமென்ற லட்சியத்தோடு இவர்கள் போட்டி போடுகிறார்கள். (இந்தத் தத்துவம், சுதந்திர நாடுகளில்தான் ஏற்கத்தக்கது என்பது ஈண்டுக்குறிப்பிடுதல் நலம்.)

ஆனால் தொண்டு செய்வதற் கென்றமைந்த ஒரு தியாக பீடத்தில் அமர எனக்கு உரிமை உண்டு, உனக்கு உரிமை யுண்டு என்று போட்டி ஏற்படுமானால் அது வியக்கத்தக்கதல்லவா? தியாகம் செய்ய எல்லாருக்கும் உரிமை உண்டு. அதற்குத் தியாக பீடத்திலே அமர வேண்டு மென்பது அவசிய மில்லை. ஆனால் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் அறிக்கையையும், டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவின் அறிக்கையையும் படித்துப் பார்த்தால், பொது ஜனங்கள் தங்களையே அந்தப் பீடத்தில் அமருமாறு வற்புறுத்துவது போலவும், அந்த வற்புறுத்தலுக் கிணங்கவே தாங்கள் இந்தப் போட்டியில் இறங்கி யிருப்பதாகவும் கூறுகிறார்கள் என்று தெரிகிறது. பொதுஜன அன்பை வலியப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்வதில் என்ன விசேஷம் இருக்கிறது?

தவிர ஸ்ரீ போஸ், தமது அறிக்கையில், வலக் கட்சி, இடக் கட்சிப் பிரச்னைகளைக் கொண்டு புகுத்துகிறார். காங்கிரஸுக் குள்ளே அநேக கருத்து வேற்றுமைகளும், கட்சி பேதங்களும் இருக்கலாம். ஆனால், காங்கிரஸ் தலைவர், தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கிறவரை, இவைகளுக் கெல்லாம் மேற்பட்டவராகவே இருத்தல் வேண்டும். அப்படி யிருக்க, இந்தப் போட்டியை, வலக் கட்சிக்கும் இடக் கட்சிக்கும் தொடங்கியுள்ள போராட்டம் என்று குறிப்பிட்டுள்ளது, அவருடைய பதவியின் கௌரவத்திற்குப் பொருந்தியதா யில்லை.

இது நிற்க, தலைவர் தேர்தல் போட்டியில், காரியக் கமிட்டி அங்கத்தினர்களான சர்தார் படேல், பாபு ராஜேந்திர பிரசாத், மௌலானா அபுல்கலாம் அஸாத் ஆகியோர் பிரவேசித்திருப்பதை நாம் விரும்ப வில்லை. குறித்த ஒரு நபரை ஆதரித்தோ, நிராகரித்தோ அறிக்கைகள் விடுவதற்கு இவர்களுக்கு உரிமையே கிடையாதென்பது நமது அபிப்பிராயம். காங்கிரஸ் காரியக் கமிட்டியானது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களால் தேர்தல் மூலமாகத் தெரிந் தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவல்ல. காங்கிரஸ் தலைவர், தமது நம்பிக்கைக்குப்

பாத்திரமான, தம்மோடு ஒத்துழைக்கக்கூடிய ஒரு சிலரைப் பொறுக்கியெடுத்துக் காரிய கமிட்டியாக அமைத்துக் கொள்கிறார். இஃதொரு மந்திரிச் சபைமாதிரி. இந்த மந்திரிச் சபையானது, இப்பொழுது உத்தியோக பதவியிலிருந்து கொண்டிருக்கிறது. இன்னும், அதனின்றும் இறங்கிவிடவில்லை. உத்தியோக பதவியிலிருக்கும் காலம்வரை, இந்த மந்திரிச் சபையானது—காரியக் கமிட்டியானது—ஒற்றுமையான மனப் பான்மையுடன், ஐக்கியப் பொறுப்பின் பேரில் காரியங்களை நடத்திக் கொண்டு வருகிற தென்பதே அநுமானம். அதுதான் சம்பிரதாயமும். அப்படியிருக்க, காரியக் கமிட்டியின் தலைவருக்கு விரோதமாக காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் பிரசாரஞ் செய்யலாமா? இந்தக் காரியக் கமிட்டி கலைந்து விட்ட பிறகு, இவர்கள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பிரசாரஞ் செய்து கொண்டால் அதை நாம் ஆட்சேபித்திருக்க மாட்டோம். கட்டுப்பட்டு, காரிய நிருவாகப் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டு வருகிற ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள், அதற்குள்ளேயே இருந்து கொண்டு அதன் தலைவருக்கு விரோதமாக அறிக்கைகள் பிறப்பிக்கலாமா என்பதுவே நமது கேள்வி. ஸ்ரீ போஸிடம் இவர்களுக்கு நம்பிக்கை யில்லை யென்றால், இவர்கள் காரியக் கமிட்டி கூட்டத்திலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானங் கொண்டு வந்து அவரை விலக்கி யிருக்கலாம். அதை விடுத்து, அவரை மறு தேர்தலில் வெற்றி பெறுதவாறு, அந்த ஸ்தாபனத்திற்குள்ளிருந்து கொண்டே சூழ்ச்சி செய்வதை நாம் வெறுக்கிறோம்.

சர்தார் படேல், பாபு ராஜேந்திர பிரசாத் முதலிய தலைவர்கள் விஷயத்தில் சூழ்ச்சி யென்று சொல்லலாமா, அவர்களைப் பொறுத்த மட்டில் இந்தப் பதத்தைப் பிரயோகிக்கலாமா வென்று சிலர் ஆச்சரியப்படலாம். இந்த வார்த்தையை உபயோகிக்கிற பூரண பொறுப்பையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். சில காலமாகவே, காங்கிரஸ் தளகர்த்தர்களுக்கு, எங்கு காங்கிரஸானது, தங்கள் கை நழுவி அபேதவாதிக ளிடத்தில் சென்று விடுமோ வென்ற அச்சம் ஏற்பட்டிருக்கிற தென்பதை யாருமே, மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அ. இ. கா. கமிட்டி கூட்டங்களில், சர்தார் படேல் அவ்வளவு பிகுவாகப் பேசிய போதிலுங்கூட, இந்த அபேதவாத மருட்சி இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்பது, காங்கிரஸ் தலைவர்கள் பேச்சின் அடிவாரத்தில் நன்கு புலனாகிறது. இந்த மருட்சிதான், அபேதவாதிகளுக்குச் சில காங்கிரஸ் ஸ்தாபனங்களில் இடம் கிடைக்காமல் போனதற்குக் காரணமாவென்று கேட்கிறோம். இங்கு, அபேதவாதமா, காந்தீயமா என்பது நமக்கு முக்கியமல்ல. எந்தக் கொள்கைக்குப் பெரும்பான்மையோரான அங்கீகாரம் இருக்கிறதோ, அதற்கு அந்த இடத்தில் அதற்குரிய மதிப்பையும், உரிமையையும் அளிக்க வேண்டாமா வென்பதுதான் நமது கேள்வி. ஸ்ரீ போஸ், தீவிரக் கட்சியின் பிரதிநிதி யென்று, முதுமைக் கட்சியினராகிய பட்டாபி—பிரசாத் கோஷ்டியினர் கருதுகின்றனர். அங்ஙனம் கருதவும், அதற்காக அவரை எதிரிட்டுப் போராடவும் இவர்களுக்கு உரிமை யுண்டு. எப்பொழுது? அவரோ, இவர்களோ காரியக்

கமிட்டியிலிருந்து விலகிக் கொண்ட பிறகுதான். அது வரையில் இருவரும் ஐக்கியப் பொறுப்பும், ஒரே கொள்கையும் உடையவர்களே. அப்படித்தான் பொதுஜனங்கள் கருதுவார்கள். இவர்களும் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்.

காங்கிரஸ் தலைமைப் பதவியை ஒரே நபருக்குத் தொடர்ந்து வழங்கக்கூடாதென்றும், அப்படி வழங்குவது விசேஷ சந்தர்ப்பங்களில்தான் என்றும் சர்தார் படேல் கூறுகிறார். பண்டித ஜவஹர்லால் நேருவைத் தொடர்ந்து இரண்டு முறை தலைவராகத் தெரிந்தெடுத்ததற்கு என்ன விசேஷ சந்தர்ப்பங்கள் இருந்தன? அந்த விசேஷ சந்தர்ப்பங்கள் இப்பொழுது இல்லையா? இந்திய தேசீய வாழ்க்கையானது, தற்போது கொந்தளிப்பில்லாத ஒரு நிலையில் நிற்கிறதென்று சர்தார் கருதுகிறாரா? ஆம்; சர்தார் ஒரு நியாயவாதி என்பதை நாம் அறிவோம். அறிவுள்ளவர்கள், வாதத்தை எப்படி வேண்டுமானாலும் திருப்பலாமல்லவா?

டாக்டர் பட்டாபிக்கு இந்த முறையேனும் காங்கிரஸ் தலைமைப் பதவி கிடைத்தால் நல்லதுதான். ஏனென்றால் அவரும், இந்தப் பதவிக்காக எத்தனையோ முறை படையெடுத்துப் படையெடுத்துச் சில வருஷங்களில் ஒரு வோட்டுக்கூடக் கிடைக்கப் பெறாமல் பின்னடைந்து போயிருக்கிறவர். இந்தத் தடவையும் கிடைக்காமற் போனால், அவர் மனஞ்சலித்துக் கொள்ள மாட்டாரா? படேல்—பிரசாத் கோஷ்டியின் சிபார்சுக்குத்தான் என்ன பயன்? ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நாம் இங்குப் பட்டவர்த்தனமாகக் கூறிவிட விரும்புகிறோம். டாக்டர் சீதாராமய்யாவின் பொது நலச் சேவையில் நாம் எப்பொழுதுமே மயங்கியது கிடையாது.

ஆக, நமது கருத்தைச் சுருக்கமாகக் கூறுவோம்.

1. காங்கிரஸ் தலைவர் பதவிக்கு இந்தப் போட்டி ஏற்பட வேண்டியதேயில்லை.

2. தங்கள் சேவையை வலியுறுத்தி, தங்களையே தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று பிரதிநிதிகளைக் கட்டாயப் படுத்துமாறு போல் போஸும், பட்டாபியும் முறையே அறிக்கைகள் விட்டிருக்க வேண்டியதில்லை.

3. காங்கிரஸ் தளகர்த்தர்கள், இந்தத் தேர்தல் விஷயமாக ஒரு தனி நபரைமட்டும் ஆதரித்து அறிக்கைகள் விட்டிருக்கத் தேவையில்லை.

நம்மைப் பொறுத்த மட்டில், திரிபுரி காங்கிரஸுக்கு, போஸ், பட்டாபி ஆகிய இருவரில் யார் தலைவராக வந்தாலும் அதற்காக நாம் சந்தோஷங் கொள்ளவோ, துக்கமடையவோ போவதில்லை. பொதுவாகவே, காங்கிரஸானது, தனது லட்சியத்தை யடைகிற வரை ஒரு சர்வாதிகாரியை நியமித்துக் கொண்டு அவர் வழி தேசம்செல்லுமாறுசெய்ய வேண்டும். இப்பொழுது எந்த விதமான கட்சி வேற்றுமைக்கும் இடம் கிடையாது. ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் ஒவ்வோர் இந்தியனாயிருக்க வேண்டும். ஒவ்வோர் இந்தியனும் ஒவ்வொரு காங்கிரஸ் வாதியாக இருக்க வேண்டும். இந்த நிலைக்குத் தேசத்தைக் கொண்டு போகிற பொறுப்பை ஒரு

சர்வாதிகாரிதான் நிறைவேற்ற முடியும். அந்தச் சர்வாதிகாரி ஸ்ரீ போஸுமல்ல; ஸ்ரீ பட்டாபியு மல்ல.

* * *

படேல் விஜயம்

மகாத்மா காந்தியும் கனம் ஆகாகானும் சந்தித்துப்பேசினார்கள். சமஷ்டியைப் பற்றி யென்கிறார்கள் சிலர்; ஹிந்து முஸ்லிம் பிரச்னையைப் பற்றி என்கின்றனர் வேறு சிலர். கிழக்காப் பிரிக்காவைப்பற்றி என்கின்றனர் இன்னுஞ் சிலர். ஆக எதைப்பற்றிப் பேசினார்களோ நமக்குத் தெரியாது. ஆனால் கனம் ஆகாகான் விருப்பத்திற்கிணங்க, ஸர்தார் படேலை கிழக்காப்பிரிக்காவுக்கு அனுப்ப காந்தியடிகள் இசைந்திருக்கிறார் என்று சொல்லப் படுகிறது. இஃதுண்மையாயிருக்குமானால், நாம் இதனை அங்கீகரிக்க முடியாது. குடியேற்ற நாடுகளை ஜெர்மனி கேட்டுக் கொண்டிருக்கிறதென்பதென்னவோ உண்மைதான். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இதற்கு இணங்கி விட்டார்களா? அப்படி இணங்கி விட்டதாக கனம் ஆகாகானுக்கு ஏதேனும் சூசகம் தெரியுமா? அப்படியிருக்க, வெறும் ஊகத்தை மட்டும் வைத்துக்கொண்டு, சர்தார் படேல் அங்கு ஏன் அனுப்பப்பட வேண்டும்? மற்றும், காங்கிரஸானது, பொதுவாக ஏகாதிபத்தியத்தை நிராகரிக்கிறது. அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமா யிருக்கட்டும், ஜெர்மன் ஏகாதிபத்தியமா யிருக்கட்டும்; எல்லாம் ஒன்று தான். அங்ஙனமிருக்க, ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குச் சொந்தமாயிருந்து பின்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பலாத்காரத்தின் காரணமாக வசப்பட்ட சில நாடுகளை, மீண்டும் இந்த ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குத் திருப்பிக் கொடுக்கக் கூடாதென்று பிரசாரஞ் செய்ய, காங்கிரஸ் இணங்குவது முரண்பட்ட விஷயமாக இல்லையா? அப்படியானால், ஜெர்மன் ஏகாதிபத்தியத்தைவிட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சிறந்ததென்பது, காங்கிரஸ் தலைவர்களுடைய அபிப்பிராயமா?

* * *

ஸ்பெயின்

இதுகாறும் ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தின் தலைநகரமாயிருந்த பார்சிலோனா நகரம், பிராங்கோ கட்சியினர் வசம் ஆகப் பட்டுக்கொண்டு விட்டது. அதே தினத்தில் ரோமா புரியில் முஸோலினி பிராங்கோவைப் பாராட்டி வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாடியிருக்கிறான். ஹிட்லரும் ஆசிச் செய்தி அனுப்பி யிருக்கிறான். இனி ஸ்பெயினில் குடியரசு எண்ணத்திற்குக் கூட இடமில்லாமற் செய்துவிடப்படும். ஆனால் ஸ்பெயினில் பிராங்கோவின் பூரண ஆதிக்கம் செல்லுமா வென்பது நமக்குச் சந்தேகமா யிருக்கிறது. ஒன்று, முஸோலினியின் கையாளாகவோ, அல்லது ஹிட்லரின் கையாளாகவோ இருந்து அவன் ஆதிக்கஞ் செலுத்தலாம். ஆனால் அதற்குக் கூட சந்தர்ப்பம் இராதென்றுதான் நாம் அஞ்சுகிறோம். ஏனென்றால், ரோம்-பெர்லின் அச்சு, இந்த ஸ்பெயின் காரணமாகவே முறிந்து போனாலும் போகலாம்; அல்லது ம்யூனிக் ஒப்பந்தத்தில் ஸம்பந்தப்பட்ட நான்கு வல்லரசுகளுக்கும் இந்த ஸ்பெயின் சம்பந்தமாகவே பிணக்கு

ஏற்பட்டாலும் ஏற்படலாம். எப்படி பார்த்தாலும் ஸ்பெயின் போராட்டம் இன்னும் சிறிது காலம் இருந்து கொண்டுதானிருக்கும். போராட்டத்தில் கட்சிகள் மாறலாமோ என்னவோ?

* * *

எட்டணா

எனது வாழ்க்கையின் ஆவல் நிறைந்த லட்சியம் என்ன வென்றால், கிராம வாசிகளுக்குத் தினம் எட்டணா வருமானம் கிடைக்குமாறு செய்ய வேண்டு மென்பதுவே. இப்பொழுது கிராமவாசிகளுக்குத் தினம் இரண்டு காசு கிடைப்பதில்லை.

இது, காந்தியடிகளின் மணி வாசகம். இந்த லட்சியம், நகரத்திலே வாழ்ந்து கொண்டு, 'கிராமங்களுக்குச் செல்லுங்கள்' என்று பிரசாரஞ் செய்கிற தலைவர்களுக்கு இருக்குமானால், நாம் அடிக்கடி கேட்டுச் சலித்துப்போகிற மேடைப் பிரசங்கங்கள் சிறிதளவு குறையும்.

ஆங்கிலோ-இந்தியர்கள்

ஆங்கிலோ-இந்திய சகோதரர்கள் இப்பொழுது காங்கிரஸில் சேர்ந்து கொண்டு வருவதைக் குறித்து நாம் சந்தோஷப்படுகிறோம். ஓரிடத்தில், ஆங்கிலோ—இந்திய சகோதரரொருவர் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகக்கூடத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நமது ஆங்கிலோ—இந்திய நண்பர்கள், இந்திய தேசிய வாழ்வோடு இணைந்து கொண்டுதான் இந்தியாவில் இருக்க முடியும். இந்தியர்கள் வேறு, தாங்கள் வேறு என்று இவர்கள் பிரிந்து வாழ முயல்வார்களானால், இவர்களுக்கு விமோசனமே கிடையாது. ஆனால், வங்காள மாகாணத்திலுள்ள ஆங்கிலோ—இந்திய சகோதரர்கள், தங்களுக்குத் தனித் தொகுதி வேண்டுமென்று கேட்பதாகத் தெரிகிறது. இந்த ஆட்சேபிக்கத்தக்கது. காங்கிரஸி லிருந்து கொண்டு தனித் தொகுதிகள் கேட்பது நியாயமல்ல. தனித்தொகுதி கேட்பது குறுகிய நோக்கத்தையே காட்டுகிறது. தனித்தொகுதிகள் மூலமாகத்தான் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று காங்கிரசிலுள்ள சிறு பான்மைச் சமூகத்தினர் நினைக்கவே வேண்டாம். அப்படி நினைப்பது காங்கிரஸின் லட்சியத்தை அறிந்து கொள்ளாததாகும்.

கதர் தொண்டு

வடமேற்கு எல்லைப்புற மாகாணம் எப்பொழுதுமே அடக்கு முறைக்கு இசைந்த மாகாணம். ஆனால் அங்கு, கான் அப்துல் கப்பார்கானுடைய பெரு முயற்சியின் பேரில் அஹிம்சை உணர்ச்சி பரவி வருகிறது. அது தவிர, காங்கிரஸ் மந்திரிச் சபை அங்கு ஏற்பட்ட பிறகும், காந்தியடிகளின் சுற்றுப் பிரயாணத்தின் விளைவாகவும், நிர்மாண வேலைகளைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அங்குத் தோன்றி யிருக்கிறது. இப்பொழுது ஸ்ரீமதி மீரா பென், அங்குச் சென்று கதர்ப் பிரசாரம் செய்து வருகிறார். மேற்படி மாகாணக் கவர்னரும், இந்த வேலைக்

கென்று ஆயிரம் ரூபாய் அநுமதி யளித்திருக்கிறார். எல்லைப்புற மாகாணத் தலைவர், இந்த மாதிரியான வேலைக்கு ஒரு தொகை அநுமதித் திருப்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் காலச் சக்கரம் யாரையும் இழுத்துக்கொண்டு போகுமல்லவா?

கல்வியின்மை

உலகத்தின் மொத்த ஜனத் தொகை சுமார் 1,997,000,000 என்று அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் மூன்றில் இரண்டு பங்கு பேர், 'கல்வி யறிவு இல்லாதவர்களாயிருக்கிறார்கள். அதாவது ஓர் அமெரிக்க அறிஞருடைய கணக்குப்படி 11,000 லட்சம் ஜனங்கள் உலகத்தில்கல்வி வாசனையற்றவர்களாயிருக்கிறார்கள். ஆசியா கண்டத்திலும், ஆப்ரிக்கா கண்டத்திலும் மட்டும் 10,000 லட்சம் ஜனங்கள் எழுத்து வாசனைகூட தெரியாதவர்கள் என்றால், நாம் தலை குனிய வேண்டியிருக்கிறது. இந்த இரண்டு கண்டங்களையும் நாகரிகப் படுத்தும் முயற்சியில் ஐரோப்பா கண்டத்துப் பிரமுகர்கள் ஈடுபட்டிருப்பதன் காரணம் தெரிகிறதா? ஆனால் எழுத்து வாசனை யுள்ளவர்கள் அனைவரும் நாகரிக மக்கள் என்று சொன்னால் அதை நாம் அங்கீகரிக்கவே முடியாது.

* * *

பாலஸ்தீன மகாநாடு

சமீபத்திலே லண்டனில் கூட்டப் பெறுகிற பாலஸ்தீன் சம்பந்தமான மகாநாட்டுக்குத் துரிதமான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதைப் பற்றிய பரபரப்பு, இங்கிலாந்திலும், மற்ற அராபிய நாடுகளிலும் அதிகமாயிருக்கிறது. ஆனால், இந்த மகாநாடு எவ்வளவு தூரம் வெற்றிகரமாக முடியும் என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நலன் என்ற ஒன்றனை மட்டும் வைத்துப்பார்த்தால் இது வெற்றிகரமாக முடியலாம். அது வேறு விஷயம். ஆனால் அராபியர்களின் தேசிய அபிலாஷைகள் எவ்வளவு தூரம் இந்த மகாநாட்டின் விளைவாகப் பூர்த்தி யடையும் என்ற சந்தேகம் இன்னும் நம்மை விட்டகன்ற பாடில்லை. பாலஸ்தீனத்தில், அராபியர்களின் உண்மையான பிரதிநிதியாக 'கிராண்ட் மப்டி'யே கருதப்படுகிறார். ஆனால் அவருடைய கட்சியினரின் கொள்கைகளும் கருத்துக்களும் எவ்வளவு தூரம் இந்த மகாநாட்டில் இடம் பெறப் போகிறது? இந்தியா சம்பந்தமாக மூன்று வட்ட மேஜை மகாநாடுகள் நடைபெற்று, கடைசியில் எல்லாம் புகையாகப் போய் விட்டதைப் போல், இந்தப் பாலஸ்தீன மகாநாடும் ஆகி விட்டால் அதற்காக நாம் ஆச்சரியமோ வருத்தமோ அடையப் போவதில்லை. ஆக, இந்த மகாநாடு, எவ்விதமாக முடிந்தாலும் பாலஸ்தீனத்தில், பிரிட்டிஷாரின் பிடிப்பு இறுக்கமாகவே இருக்கும்.

விஞ்ஞானமும் தேசிய வாழ்வும்*

—பண்டித ஜவஹர்லால் நேரு

கலைஞானம் என்பது பலதிறத்தது. தனி மனிதரின் கலைஞானப் பெருக்கம், சமுதாயக் கலைஞானப் பெருக்கம், தேசியக் கலைஞானப் பெருக்கம் என்று பல வகையாக இந்தக் கலைஞான அபிவிர்த்தியைப் பிரித்துக் கூறலாம். தனி மனிதனுடைய கலைஞானம் எவ்வளவு தூரம் முன்னேற்ற முடைந் திருக்கிறதோ அதைப் பொறுத்தே அவன் வசிக்கும் சமுதாயம், தேசம் இவைகளின் கலைஞானப் பெருக்கமும் இருக்கிறது. ஆகையால் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாது. புராதன காலத்தில் மதத்தின் துணை பெற்றே தனி மனிதனின் கலைஞானம்—அதாவது ஆத்ம ஞானம் என்றும் இதனைக் கூறலாம்—அபிவிர்த்தி யடைந்து வந்தது. ஆனால் தற்பொழுதோ ஒரு தனி மனிதனுடைய சூழல் எவ் வண்ணம் அமைகிறதோ அவ் வண்ணமே அவனது கலா ஞானமும் பெருகுகிறது என்ற முடிவுக்கு அறிஞர்கள் வந்திருக்கிறார்கள். பொதுவாகப் பார்க்கப்போனால் மதத்தின் துணையும், சூழலின் உதவியும் மனிதனுடைய முற்போக்குக்கு இன்றியமையாதனவா யிருக்கின்றன. உன்னைச் சுற்றியுள்ள சக்திகள் தீமை நிறைந்தனவாக இருக்கும் பட்சத்தில் நீ எங்ஙனம் நல்லவனாக முடியும்? உன்னுடைய முன்னேற்றத்தின் ஒவ்வோர் அடியிலும் அவை குறுக்கிட்டு உன்னைத் தடை செய்யாவோ? இதனாலேயே சுற்றுப்புறத்தின் தூய தன்மை அவசியம் என்று தற்கால அறிஞர்கள் வற்புறுத்துகிறார்கள். நீ எந்த சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாயோ, அந்தச் சமுதாயம் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந் திருக்குமானால் அதிலே வாழ்ந்து கொண்டிருக்கும் நீ மட்டும் தன்னலமற்று இருக்க வேண்டும் என்று சொன்னால் அது முடிகிற காரியமா? அப்படிச் சொன்னவருக்குத்தான் ஏதேனும் மதிப்புக் கொடுக்க முடியுமா?

தற்போதைய உலகத்தை ஒருமுறை பாருங்கள். என்ன ஒழுக்க ஹீனம்! எவ்வளவு தீமைகள் நிறைந்திருக்கின்றன! இந்த நிலையில் தர்மமும் ஒழுக்கமும் நிறைந்த சக்திகள் என்ன காரியங்களைச் சாதிக்க முடியும்? அப்படி ஏதேனும் சில சமயங்களில் இந்தச் சக்திகள் தலைதூக்குமானால் உடனே அந்த அதர்ம சக்திகள் கிளம்பி இவற்றை அழுத்திவிடுகின்றன. விளைவு என்ன? உலகத்தின் சீரழிவு! தேசத்தின் சீரழிவு! தனி மனிதனின் சீரழிவு!

தற்போழ்து, பொதுவாக உலகத்தில்—சிறப்பாக ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில்—வதியும் அறிஞர்களின் சிந்தனா சக்தியானது பாசிச நோயினால் பீடிக்கப்பட்டிருக்

* கல்கத்தாவில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவின் சாரம்.

கிறது. இதற்குக் காரணம் என்ன வென்று நினைக்கிறீர்கள்? இந்த நல்ல ஆத்மாக்களின் சிந்தனை சக்தியைச் சுற்றி, அந்தோ! எத்தனை தீய சக்திகள் 'உறுமிக்' கொண்டிருக்கின்றன? அவைகளை 'எதிர்த்துப் போராடும் சக்தி இவர்களுக்கு இல்லாமையினால் இவர்கள் மனமிழந்து நிற்கிறார்கள். இந்தத் தீய சக்திகள் பாசிசம், பிற்போக்கு என்ற உருவங்கள் எடுத்து மானிட சமூகத்தை அலக்கழிக்கின்றன. இதனால் நல்ல மனிதர்களும் கெட்டவர்களாகி விடுகின்றார்கள்.

இதற்கு நிவர்த்தி மார்க்கம் என்ன? பரிகாரமே இல்லையா என்று அவநம்பிக்கை கொண்டு விடாதீர்கள். ஆனால் மந்திரம் போன்ற சில வார்த்தைகளை உச்சரித்து விடுவதினால் மட்டும் இதற்குப் பரிகாரம் காண முடியும் என்று கருதி விடாதீர்கள். ஒவ்வோர் அரசாங்கமும், ஒவ்வொரு ராஜ்யமும், அது பாசிஸ்ட் ராஜ்யமா யிருக்கட்டும், ஏகாதிபத்தியமா யிருக்கட்டும், பொதுவுடமை அரசாங்கமாக இருக்கட்டும், எதுவா யிருந்தாலும் அது தன்னைச் சுற்றி சில சக்திகளைச் சிருஷ்டி செய்து கொள்கிறது. அந்த சக்திகளின் துணை கொண்டு தான், அது தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. இதற்காக அது தன்னுடைய பிரஜைகளின் மனத்தைத் தனக்குத் துணை புரியும் தன்மையில் மாற்றிவிட கல்வி மூலம் தன் செல்வாக்கை உபயோகிக்கிறது. ஆகையால் நீங்கள் முதலிலே தீர்மானித்துக் கொள்ள வேண்டுவது, நமக்கு எந்த விதமான ராஜாங்கம் இருக்க வேண்டும், நமது சமுதாயம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதேயாகும். 'நான் ஏகாதிபத்தியத்தை வெறுக்கிறேன்' என்று சொல்லி விடுவதினாலேயே நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகாது. நீங்கள் கொள்கிற முடிவு அனுஷ்டான பூர்வகத்தில் வரக்கூடியதாயிருக்க வேண்டும். ஆனால் அந்த முடிவுக்கும் நாம் எளிதிலே வந்துவிட முடியுமா? முடியாது. நம்முடைய எண்ணம், நாம் செய்கிற காரியங்கள் இவற்றில் நமக்கு எவ்வளவு தூரம் சுதந்திர மிருக்கிறது என்பதைப் பொறுத்தே இந்த முடிவு இருக்கிறது. செயலில் நாம் சுதந்திரமா யிருக்க வேண்டு மென்றால் சில கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும். ஆனால் எண்ணத்திலும், செயலிலும் சுதந்திரமா யிருக்க வேண்டு மென்று விரும்புகிறவர்கள் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டும், போதிய அளவு மனோவிகாசமடைந்தும் தங்கள் லட்சியத்தைப் பொறுப்புள்ள தொரு லட்சியமாக வைத்துக் கொண்டும் செயல் துறையில் இறங்குவார்களானால் அவர்களுக்கு அதிகமான சங்கடங்கள் நேரிடா.

இன்றைய உலகத்தைப் பாருங்கள். ஜனநாயக சக்தி எவ்வளவு மெதுவாக ஊர்ந்து செல்கிறது? எவ்வளவு நாம் பலன்களை எதிர் பார்க்கிறோமோ, அவ்வளவு மெதுவாக அது வேலை செய்கிறது. இதனால் எந்த நாடுகளில் அநேக நூற்றாண்டுகள் துணைக்காக ஜனநாயக முறையானது பரம்பரையாகக் கையாளப்பட்டு வருகிறதோ அந்த நாடுகளில்கூட இப்பொழுது இந்த ஜனநாயக சக்தி பலமிழந்து நிற்கிறது. இந்த மாதிரியான நெருக்கடிகள் ஏற்படுகிறபோது, சில அழகிய வாசகங்களைக் கொண்டு அவற்றைச் சமாளிக்கப் பார்க்கிறார்கள். இதனால் உண்டாகும் பலன் ஒன்று

மில்லை. நமது கவனந்தான் வேறு திசையில் செல்கிறது. ஆகையால் தனி மனிதனுடைய கலைஞானத்தைப் பற்றியும், சமுதாயக் கலைஞானத்தைப் பற்றியும் நீங்கள் பூரணமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஆராய்ச்சியின்போது, நீங்கள் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். மதமாகட்டும், மதாநுஷ்டானங்களாகட்டும் எல்லாவற்றையுமே நீங்கள் ஆராய வேண்டும். எவை ஏவை, மாற்றப்பட முடியாதவை, வாதத்திற்குப் புறம்பானவை என்று கருதப்படுகிறதோ அவற்றையெல்லாம்கூட நீங்கள் ஆராய்ந்து பார்ப்பதில் பின்னடையக் கூடாது. சத்தியம் என்ற கிணற்றை நீங்கள் ஆழமாகப் பார்க்கும் துணிச்சலைப் பெற வேண்டும். அங்கே காணப்படும் அற்புதக் காட்சிகளையும் காண நீங்கள் தயாராயிருக்க வேண்டும். உங்களிடத்தில் குடிகொண்டுள்ள விருப்பு வெறுப்புகளோடும் நீங்கள் போராடத் தயாராயிருக்க வேண்டும். உண்மையை நாடுகிறபோது, ஏதேனும் புதிய விஷயங்களைக் கண்டுபிடிக்கிறபோது, இந்த மாதிரியான போராட்டங்களில் நீங்கள் ஈடுபடத்தான் வேண்டியிருக்கும்.

உலகனைத்தையும் நீங்கள் எடுத்துக்கொண்டு பார்த்தால், மனித சமூகமானது இப்பொழுது என்றுமில்லாத ஒரு மாற்றத்தில் அகப்பட்டுக்கொண்டிருப்பதைக் காணலாம். சரித்திரத்தில் அதி விசேஷமான ஒரு காலத்தில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும். புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்கிற ஒரு காலத்தில் உங்கள் வாழ்க்கை நடை பெறுகிறதென்பதை நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 1914ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து ஏற்பட்ட மாற்றங்கள் இதற்கு முன் எப்பொழுதேனும் சரித்திரத்தில் ஏற்பட்டிருக்கின்றனவா? இந்த மாற்றங்கள் இன்னும் நிகழ்ந்து கொண்டு தானிருக்கின்றன. இந்த மாற்ற நெருக்கடி ஏதோ ஒரு வருஷம் இருந்து விட்டுப் போகுமென்று கருதாதீர்கள். இன்னும் நீண்ட காலம் வரையில் இந்த நெருக்கடி இருந்து கொண்டுதானிருக்கும். 1914ம் வருஷத்திலிருந்து கணக்கெடுத்துப் பார்த்தால், சென்ற 25 வருஷ காலத்திற்குள் உலகத்தில் எத்தனை விதமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்பது நமக்குப் பேராச்சரியமாக இல்லையா?

இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் நமது சமுதாய அமைப்பின் அஸ்திவாரத்தைச் சிறிது பரிசிலனை செய்து பார்க்க வேண்டுவது அவசியமாகும். அந்தச் சமுதாய அமைப்பு நின்ற நிலையிலேயே நிற்கக் கூடியதா, அல்லது காலத்திற்கேற்றவாறு தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளும் சக்தி பெற்றதா என்பதை நாம் பரிசோதிக்க வேண்டும். இதே மாதிரியிலேயே, நமது மனப்பான்மையையும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இந்த முறையில் நாம் பரிசோதனைக்கு இறங்குகிற போது, நமது எண்ணமானது பரிசுத்தமானதாயும், ஒரு லட்சியத்தைக் கொண்டதாயும், எந்தப் பிரச்னையைப் பரிசோதனை செய்ய இறங்கியிருக்கிறோமோ அந்தப் பிரச்னையைப் பூராவும் ஆராய்ந்து பார்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். வெறும் உணர்ச்சிகளோடு நமது எண்ணத்தை இணைத்து விட்டு

விடக் கூடாது. நமது எண்ணமும், உண்மைக் கியைபுடையதாய், மாற்றத்திற்கு ஏற்றதாய் இருக்க வேண்டும். உண்மையைக் கிரகிக்க வேண்டுமென்ற எண்ணமுடையவன்தான், காரிய சாதனையில் இறங்க முடியும். இவையெல்லாம் சிக்கலான விஷயந்தான். ஆனால் இப்பொழுது உலகமே சிக்கலாயிருக்கிறதல்லவா? உலகத்திலே நாம் கஷ்டப்படாமலும் சுலபமாகவும் வாழலாம் என்ற நினைப்பு உங்களுக்கு ஏற்படுமானால், உங்களால் ஒரு காரியமும் சாதிக்க முடியாது. உங்களால் ஓர் அங்குலம்கூட நகர்ந்து போக முடியாது. உதாரணமாக நமது கலைஞானத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது அதனை வேறெந்தப் பெயரிட்டேனும் அழையுங்கள். இந்தக் கலைஞானப் பிரச்னை, பொருளாதாரப் பிரச்னை, அரசியல் பிரச்னை முதலியன எல்லாம் ஒன்றுபட்டே நிற்கின்றன. இவற்றைத் தனியாக நீங்கள் பிரிக்கவே முடியாது. வாழ்க்கையின் பலபட்ட அம்சங்களையும் நாம் ஒன்று படுத்தி நடத்திச் செல்ல வேண்டும்.

கைத் தொழில் விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும் இப்பொழுது பெரிய பெரிய திட்டங்கள் போடப்படுகின்றன. இதைப்பற்றி நீங்கள் அடிக்கடி கேள்விப்படுகிறீர்கள். ஆனால் இவற்றைவிட முக்கியமானது, தேசத்தின் ஜீவாதாரமாயுள்ள பல திறத்து அம்சங்களுக்கு ஒரு திட்டம் போடுதல் நல்லது. இவை பரஸ்பர உதவி செய்யக்கூடியனவாயிருக்க வேண்டும். ஆனால் இந்தப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்கிற பொறுப்பு உங்களுடையதாயிருக்க வேண்டும். மற்றவர்களைக் கொண்டு இந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரந் தேடலாமென்று நீங்கள் நினைப்பீர்களாயின் உங்களுக்கு வெற்றியே உண்டாகாது. மற்றவர்கள் உங்களுக்கு வழி காட்டலாம். ஆனால், பிரச்னைகளுக்கு முடிவு காணும் பொறுப்பு, சமுதாயத்தின் ஒவ்வொரு நபருடையதுமாகும்.

இப்பொழுது இந்தியாவில் இரண்டு விதமான சக்திகளுக்கும் அல்லது இரண்டு விதமான பிரச்னைகளுக்கும் போராட்டம் நடைபெறுகிறது. இன்னும் பொருளாதார சம்பந்தமாகவும் அரசியல் சம்பந்த மாகவும் சில போராட்டங்கள் நடைபெறுகின்றன. அநேக சக்திகள் கூடி, நம்மைப் பல திசைகளிலும் இழுக்கின்றன. முற்காலத்திலே தோன்றின சில சக்திகள் இப்பொழுது நமக்குப் பலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் சில சக்திகள் நமக்குப் பெருஞ் சுமையாகவும் இருக்கின்றன. புராதனப் பெருமை நிறைந்தது என்ற புகழ் இந்தியாவுக்கு இருக்கிறது. இந்தியாவின் சரித்திரம் ஆயிரக் கணக்கான வருஷங்களாகத் தொடர்ந்து வந்திருக்கிறது. இந்திய சரித்திரத்தை நீங்கள் சிறிது ஆய்ந்து பார்ப்பீர்களானால், எவ்வளவு புராதன காலத்திற்கும் நீங்கள் செல்ல முடியும். உதாரணமாக மோஹென்ஜோ தாரோவுக்குச் சென்று பாருங்கள். ஒரு பெரிய அழகான நகரம் தோண்டியெடுக்கப் பட்டிருக்கிறது. இந்த நகரத்தில் உயர்ந்த மாளிகைகள், அகலமான வீதிகள், தண்ணீர்ப் போக்கு வசதிகள், குழந்தைகள் அணிந்து கொண்டிருந்த வித விதமான நகைகள் முதலியவற்றைக் காணலாம். இப்பொழுது இந்தியாவிலேயுள்ள பல நகரங்களைக் காட்டிலும் அது மிகவும் சிறப்புடையதாக இருந்தது. சுமார்

ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னர், இந்த நகரம் சிறப்புற்றிருந்த தென்று நினைக்கிறேன். அப்படியானால் அதற்கு முன்னர் இரண்டாயிர வருஷ கால மாவது இந்தநகரமும், இதில் வசித்த மக்களும் நாகரிகத்தில் வளர்ச்சி பெற்றிருந்திருக்கவேண்டும். ஆகையால்இந்தியாவின் நாகரிகம், குறைந்த பட்சம் ஏழு அல்லது எட்டு ஆயிர வருஷங்களுக்கு முற்பட்டதாகும். எனவே, தொடர்ந்து வந்த ஒரு நாகரிகம் நமக்கு ஒரு பரம்பரைச் சொத்தாக வந்திருக்கிற தென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி நாம் பெருமை கொள்கிறோம். ஆனால் இந்தப்பெருமை நமக்கு ஒரு சுமையாகவும் இருக்கிறது. ஏனென்றால் பரம்பரையானது, நமக்குத் துணை செய்வதா யிருந்தாலும் சில சமயங்களில் நமது முற்போக்கைத் தடுப்பதாகவும் இருக்கிறது. இந்தியாவில் அநுஷ்டிக்கப் பட்டு வரும் பரம்பரையானது, ஒரு பெரிய முட்டுக் கட்டையாகும். நமது பழக்க வழக்கங்களும், ஆசாரங்களும், நமது முன்னேற்ற மார்க்கத்தில் பெரிய தடைகளா யிருக்கின்றன.

நமது குறைகளை யெல்லாம் நாம் மறந்து விட்டு, நமது கஷ்டங்களுக்கெல்லாம் பிறரிடத்திலேயுள்ள குறைகளே காரணம் என்று சொல்வது அழகல்ல. நமது ஆத்மாவையே நாம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். 'ஏகாதிபத்தியம் என்பது அங்கீகரிக்கத் தக்க தல்ல; இந்தியா சிரழிந்த நிலையிலே இருந்த சமயத்தில், பிரிட்டிஷார் வந்து இதனை வெற்றி கொண்டு ஆக்ர மித்துக் கொண்டு விட்டனர்' என்றெல்லாம் நாம் சொல்லிக் கொண்டிருக்கலாம். இப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது சுலபங்கூட. ஆனால் சரித்திரப் பெருமை நிறைந்த இந்தியாவை நீங்கள் கவனிக்க வேண்டும். அப்பொழுது, நம் முன்னர் தோன்றியுள்ள பிரச்னைகளை நாம் சரியாகக் கவனிக்க முடியும். இறந்த காலப் பெரிய புத்தகத்தில், நிகழ் காலம் ஒரு பக்கம் மாதிரி. ஆகையால் சரியான திருஷ்டியுடன் இந்தியாவை நீங்கள் பார்ப்பீர்களானால், உங்களெதிர்ப்பட்டுள்ள பிரச்னைகளை நீங்கள் கவனிக்கலாம்.

இந்தியாவுக்குப் புறம்பான பல இடங்களிலிருந்து பல சக்திகள் வந்து சேர்ந்ததால், இந்தியாவின் கலை ஞானம் ஒருவித கலப்பு வாய்ந்ததாக இருக்கிறது. ஆனால் எந்த தேசத்துக் கலைஞானத்தையும், அல்லது நாகரிகத்தையும், அசல் தேசிய நாகரிகமென்றோ, கலைஞானமென்றோ, சொல்ல முடியாது. தேசத்தின் மீது தன் முத்திரையைப் பதிய வைக்கிற சில தேசீய நாகரிகங்களும் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆயினும் இத்தகைய நாகரிகங்களுக்குக் கூட வெளி நாட்டு நாகரிகங்களின் செல்வாக்கு துணையாகவே இருக்கிறது. இந்தியாவின் நாகரிகத்திற்கு, வேறெந்த நாட்டு நாகரிகத்தையும் தன்னோடு ஐக்கியப் படுத்திக் கொள்ளும் சக்தி இருக்கிறது. ஹூணர்கள், ஸ்கித்தியர்கள், துருக்கியர்கள் முதலிய பலர் இந்த நாட்டுக்கு வந்தார்கள். அவர்களுடைய நாகரிகங்களெல்லாம் இங்கு ஐக்கியப் படுத்தப் பட்டன. உதாரணமாக ராஜ புத்திரர்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவர்கள், தங்களை சூரிய பரம்பரையென்றும், சந்திர பரம்பரை யென்

றும் சொல்லிக் கொண்ட போதிலும், இவர்கள் அனைவரும் ஸ்கித்தியர்களே. இவர்கள் அனைவரும் இந்தியாவுக்குப் புறம்பான இடங்களி லிருந்து வந்தாலும் இந்தியா, இவர்களை ஸ்வீகரித்துக் கொண்டது.

கடைசியில், 'விஞ்ஞானத்தையும், கைத் தொழில் முயற்சியையும் அடிப்படையாகக் கொண்ட மேனாட்டு நாகரிகத்திற்கும் எதிர்ப்பட வேண்டியிருக்கிறது. தற்காலிகமாக, இந்த மேனாட்டு நாகரிகம், நமது சமுதாயத்தையே தலைகீழாக்கி விட்டிருக்கிறது. சென்ற ஒரு நூறு வருஷகாலமாகவே, இந்த மேனாட்டு நாகரிகத்திற்கும் நமது இந்திய நாகரிகத்திற்கும் பெரிய போராட்டம் நடைபெற்று வருகிறது. பகிரங்கமான யுத்தம் நடை பெறுகிற தென்று நான் சொல்லவில்லை. ஆனாலும் உள் போராட்டம் இருக்கவே செய்கிறது. அரசியல் விஷயத்தில் நம்மை வெற்றி கொண்டவர்கள் என்ற முறையில் பிரிட்டிஷார் தங்கள் நாகரிகத்தை இந்தியாவில் கொண்டு புகுத்தியிரா விட்டால், இந்த நாகரிகப் போராட்டம் ஏற்பட நியாயமில்லை. மற்ற நாகரிகங்களை நாம் ஏற்றுக் கொண்டதுபோல் இந்த நாகரிகத்தையும் ஏற்றுக் கொண்டிருப்போம். ஏனென்றால், அரசியல் வெற்றிக்கும் விஞ்ஞானத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. விஞ்ஞானத்தின் துணை யில்லாவிட்டால் நாம், தனிப்பட்ட முறையிலோ, ஒரு தேசமாகவோ முன்னேற முடியாது.

அப்படியானால் விஞ்ஞானம் என்பது என்ன? சில பிரச்னைகளை நீங்கள் பரிசீலனை செய்கிறபோது, அதற்குரிய மார்க்கங்களைத் தேடிக் கொடுப்பது, உண்மையைக் கண்டு பிடிக்கும் வழியைக் காட்டுவது, ஆராய்ச்சி மூலம் ருஜுப்பிக்க முடியாதவற்றையெல்லாம் நிராகரிப்பது. இதுதான் விஞ்ஞானம். ஆகவே இந்த விஞ்ஞானம் என்பது, வாழ்க்கையோடு இணைந்ததாகும். கைத் தொழில்கள் சம்பந்தமாக மட்டும் விஞ்ஞானத்தைப் பிரயோகித்து விட்டு, மற்றவைகளுக்கு விஞ்ஞானம் தேவையில்லையென்று சொன்னால் அதில் அர்த்தமேயில்லை.' இந்தியாவில் மட்டுமல்ல, உலக மெங்கணுமே விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்; ஆனால் வாழ்க்கையை விஞ்ஞான ரீதிக்கு மாறுபாடாக நடத்துகிறார்கள்.

நாம், நமது மதம், நமது குடும்பம் இவை போன்றவற்றின் சம்பந்தமாக எழும் பிரச்னைகளை, சாஸ்திர ரீதியாக, விஞ்ஞான ரீதியாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அது போலவே, சமுதாயப் பிரச்னைகளையும், தேசிய பிரச்னைகளையும், இந்த விஞ்ஞானக் கண் கொண்டே பார்க்க வேண்டும். தற்போதுள்ள சமுதாய அமைப்பையும், பொருளாதார அமைப்பையும் சிறிது கூர்ந்து நோக்குங்கள். ஒரு புறத்தில் ஏராளமான உற்பத்தி; ஆனால் வேறொரு புறத்தில் சகிக்க முடியாத வறுமை. சர்வதேச சங்கம், சமாதானம் என்றும் ஒத்துழைப்பு என்றும் பறை சாற்றுகிறது. ஆனால் அதே சர்வதேச சங்கம், யுத்த சந்நாகம் செய்கிறது. சில நாடுகளில், நிலத்திலிருந்து உற்பத்தியாகும் உணவுப் பொருள்களை வேண்டுமென்றே அழிக்கிறார்கள். ஏன்? லாபத்திற்காக, மேற்படி உணவுப் பொருள்களின் விலை குறையாமலிருக்க வேண்டுமல்லவா? ஆதலின், 'இந்த மாதிரியான பிரச்னைகளுக்கெல்லாம் நீங்கள்

பரிகாரந் தேட முயல்கிறபோது, விஞ்ஞான திருஷ்டி உங்களுக்கு வேண்டும்.

நான் என்னை ஏன் ஓர் அபேதவாதி யென்று சொல்லிக் கொள்கிறேன்? உலகத்துப் பிரச்னைகளை விஞ்ஞான திருஷ்டி கொண்டு பார்ப்பதற்கு அபேதவாதம் ஒன்றுதான் சரியான மார்க்கம். இதற்காக நான் எல்லா அபேதவாதிகளின் கருத்துக்களையும் ஆதரிக்க வேண்டுமென்பது அர்த்த மல்ல. ஆனால் அபேதவாதந்தான், விஞ்ஞான திருஷ்டியுடன் உலகப் பிரச்னைகளைக் கவனிக்கக் கூடிய மார்க்கம் என்ற ஒன்றே எனக்குப் போதும். அபேதவாதக் கண் கொண்டு, நான் இந்தியாவின் சரித்திரத்தைப் பார்ப்பேனாகில், அஃதொன்றே இன்றைய பிரச்னைகளுக்கும் பரிகாரந் தேடுவதற்கு தகுந்த உதவியாயிருக்கும். ஏனென்றால், நிகழ் காலத்தின் வேர்கள், இறந்த காலத்தில் ஊன்றியிருக்கின்றனவல்லவா? ஆகையால், உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் விஞ்ஞான திருஷ்டி இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க்கையில் உண்மையான சந்தோஷம் எது? பெரிய லட்சியத்திற்காக உழைப்பது; அதன் தாத்பரியத்தை நன்கு அறிந்து கொள்வது; அதில் நமது சக்தியனைத்தையும் பிரயோகிப்பது. இதுவே; வாழ்க்கையின் மகிழ்ச்சி நிறைந்த அம்சமாகும். அப்பொழுதே காரிய சித்தியின் பூரண சந்தோஷத்தையும் நீங்கள் அநுபவிக்க முடியும்.

'டூனிஸ் எங்கே இருக்கிறது?

இத்தலிக்கு, டூனிஸ் என்ற ஒரு பிரதேசத்தின் மீது கண் விழுந்திருப்பதாக வல்லவோ சொல்லப்படுகிறது. இந்த டூனிஸ் என்பது, எங்கே இருக்கிறது? டூனிஸ் என்பது, டுனீஷ்யா என்ற ஒரு பிரதேசத்தின் தலை நகரம்.

டுனீஷியா என்பது, ஆப்ரிக்காவின் வட பாகத்தில், மத்திய தரைக் கடலோரமாக உள்ள ஒரு நாடு. இதன் மேற்கில் அல்ஜீரியாவும், கிழக்கில் டிரிபோலியும் இருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 50,000 சதுர மைல். மொத்த ஜனத்தொகை 2,411,000. இவர்களில் அராபியர்களே பெரும்பாலோர்.

டுனீஷியா, பிரெஞ்சு அரசாங்கத்தின் நிருவாகத்திற்குட்பட்டிருக்கிறது. ஆனால் பெயருக்கு ஒரு சுல்தான் உண்டு.

இந்த நாட்டிலுள்ள இத்தாலியர்கள் ஆங்காங்கு பாசிஸ்ட் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டு, பிரெஞ்சு நிருவாகத்திற்கு விரோதமான கிளர்ச்சிகளை உண்டு பண்ணிக் கொண்டு வருகிறார்கள் என்று பிரெஞ்சுப் பத்திரிகைகள் புகார் செய்து வருகின்றன.

உலக மெல்லாம் இவருக்குத் தலை
குனிகிறது. இவர் யாருக்குத்
தலை குனிகிறார்?

சமீபத்தில் வார்தாவில் எடுத்த படம்

உலகத்தில் நடப்பதென்ன?



நாம் சொல்லாமலே இந்த இரண்டு பேரும் யாரென்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர் களல்லவா? ஏகாதிபத்தியத்தின் தென்கோடி யொருவர்! இன்னொருவர் வடகோடி. ஆனால் அங்குக் கூரையின் மீதிருந்து எட்டிப் பார்ப்பது யாரோ?

பெரியவர் :—இதோ பார் சமாதானக் குழந்தை! உனக்கு யார் மீது ஆசை? முஸோலினி மீதா? ஹிட்லர் மீதா?

சமாதானக் குழந்தை: போங்கள் தாத்தா, எனக்கு இரண்டு பேரும் வேண்டாம்; வயிற்றுக்கு ரொட்டியும், உடம்பு தெரியாமல் போர்த்துக் கொள்ள சட்டையும் இருந்தால் போதும்.

அண்ணாவாடா! தம்பீ வாடா! மேலே-? ராஜா தேசிங் கல்ல! முஸோலினி - சேம்பர்லேன் என்று ஸ்வரம் போட்டுப்பாடிக் கொள்ளுங்கள். பிரான்ஸ், இந்தப் பாட்டுக்குச்சரியாகத் தாளம் போடப் பார்க்கிறது? ஆனால் ஓசைப்பட வில்லையே! பாவம் டலாடீயர்!

ஸ்பெயினில், குடியரசு அரசாங்கத்தின் தலை நகரமாகிய பார்சிலோனா, பிராங்கோ கட்சியின் வசம் அகப்பட்டுக் கொண்டு விட்டது. தலையிடாத கமிட்டிக்கு ஜே!

1939ம் வருஷத்தில் இந்தக் காட்சியைத் தான் காணப் போகிறோமா?



ஜப்பான்: ஏன் ஜான்புல் இப்படி ஆச்சரியப்படுகிறார்? இதுதான் சீனா-ஜப்பானிய ஒத்துழைப்பு! ஒரு பெரிய தேசத்தை நாகரிகப் படுத்துகிற வேலை யென்ன சுலபமான காரியமா?



அல்ஸ்டர் (ஜர்லாந்தின் வட பாகம்):—என்ன சேம்பர்லேன் அண்ணா! இந்த டிவேலரா என் அறையை (நாட்டை) ஏன் எட்டி எட்டிப் பார்க்கிறான்? அவன் அறை வேறே, என் அறை வேறே யென்றுதானே பிரித்துக் கொடுத்து விட்டீர்களே!

சேம்பர்லேன்: அப்படித்தானிருக்கும் அப்பா! சமாதானமாகப் போங்கள் இரண்டு பேரும். (தனக்குள்) எனக்கு இருக்கப்பட்ட தொல்லைகளில் இது வேறேயா?

பர்மியர்களின் கைத் தொழிலும் கல்வி யறிவும்

—கு. கோ. கிருஷ்ணன்
B. Sc. (Hons)

கைத் தொழில்

பர்மாவில் நெல் விவசாயம் முக்கிய கைத் தொழிலாகிறது. இதில் மூன்றில் இரண்டு பாகத்தார் ஜீவனஞ் செய்து வருகிறார்கள். இதர விளைவுப் பொருட்களாவன: நிலக்கடலை எள், பலவிதத் தானியங்கள், பருத்தி, கோதுமை, புகையிலை, பலவிதப் பழங்கள், காப்பி, தேயிலை.

அரிசிக்கு அடுத்தபடியாக பர்மா, தேக்கு மரம், மண்ணெண்ணெய் இவைகளில் பேர்போனது. சுரங்கங்களிலிருந்து ரூபி, ஆம்பர், துத்தநாகம் முதலியவைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. ரப்பர் தோட்டங்களனேகமுள்ளன. 1931-ம் வருஷக் கணக்குப்படி பர்மாவில் விவசாயஞ் செய்யப்படும் மொத்த நிலம் 14,456,71 ஏக்கர்கள்.

பர்மியர்கள் தங்கள் உபயோகத்திற்குப் போதுமான சாமான்கள் செய்து கொள்கிறார்களே யன்றி ஏற்றுமதிக்காக அவ்வளவு கைத் தொழில் நடைபெற வில்லை. பருத்தி நெசவு சாதாரணமாய் எல்லா கிராமங்களிலும் நடை பெறுகிறது. இதில் 4,027 ஆண்களும், 184,728 பெண்களும் வேலை செய்கிறார்கள். ஷான்காரர்களில் மாத்திரம் 54,106 பேர்கள் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அடுத்தபடியாக பட்டு நெசவு முக்கியமாகப் பெரிய நகர்களில் நடை பெறுகிறது. இக் கைத் தொழிலில் 4,499 ஆண்களும், 36,537 பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர். இத் தொழில்களில் 1921 கணக்குப்படிக்கு அதிகமாகவே பர்மியர் சேர்ந்து செய்து வருகிறார்கள். பெண்கள் ஏராளமாக சுருட்டு செய்து ஏற்றுமதியும் செய்து வருகின்றனர். இது சாதாரணமாய் ஒவ்வொரு வீட்டிலும் நடை பெறுகிறது. இக் கைத் தொழிலை 23,512 பேர்கள் செய்து வருகின்றனர்.

பர்மியர்கள் மரச் சித்திர வேலைகளில் மிகப் பேர்போனவர்கள். மூங்கில் மரங்களால் 'லாக்கர்' மரத்தட்டு முதலிய சாமான்களில் பர்மா பேர்போனது. வெள்ளி, தங்கம், செம்பு வேலைகளில் பர்மியர் மிகவு மெச்சத்தக்கவர்கள். நேர்த்தியான மட்குடங்கள் ஆங்காங்கு அதிகமாய்ச் செய்யப்

படுகின்றன. ஆறு, குளம், குட்டை, சமுத்திரக் கரையோரம் முதலிய விடங்களில் மீன்கள் ஏராளமாய்ப் பிடித்துக் காயவைத்து உப்பைச் சேர்த்திடித்துப் பக்குவப்படுத்தி 'நப்பி' என்றபெயரோடு மேல் பர்மாவுக்கு அனுப்புகின்றனர். அரிசி, மரம், எண்ணெய் முதலிய இயந்திர சாலைகளில் பர்மியர் ஏராளமாய் வேலை செய்கின்றனர். சமீபத்தில் அநேக ஏழைப் பர்மியர்கள் கப்பல்களில் ஏற்றுமதி இறக்குமதிகளில் கூலிவேலை செய்ய ஆரம்பித்து விட்டனர்.

கல்வி வாசனை

1931ல் 'பர்மாவில் கல்வி வாசனை —அதாவது ஒரு சினேகிதருக்கு எப்பாஷையிலாவது கடிதம் எழுதப்படிக்கத் தெரிகிறவர்களை—(5 வயதுக்கு மேற்பட்டவர்களை) கணக்கெடுத்ததில் 3,635,790 ஆண்களும், 1,010,298 பெண்களும் எழுதப் படிக்கக் கூடுமெனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சுமார் 10 வருஷங்களில் பெண்கள் 100க்கு 50 வீதம் அதிகமாகக் கற்றிருப்பதாகத் தெரிகிறது. அதற்கு முந்திய 10 வருஷங்களில் 100க்கு 60 வீதம் அதிகப் பட்டார்கள். ஆகவே பெண் கல்வியில் பர்மியர் வெகு சிரத்தையெடுப்பது கவனிக்கத்தக்கது.

இந்தியாவிலுள்ள எந்த மாகாணத்தையும் (கொச்சினைத் தவிர) எடுத்துப் பார்த்தால் பர்மா அதைவிட மூன்று பங்கு அதிகமாகக் கல்வி வாசனையடைந்திருக்கிறது. ஆனால் கல்வி வாசனையென்பதை எழுதப்படிக்க மாத்திரமென்று கருதாது உயர்தரமாகக் கருதி கணக்கெடுத்தால், பர்மா கீழ்ப்பட்டிருக்குமென்பதில் ஐயமில்லை. மேலும் புத்தமதஸ்தர்கள் கட்டாயமாகச் சிறிதேனும் கற்க ஏற்படுகிறது. ஆங்கிலக் கல்வி வாசனையை மாத்திரம் எடுத்துப் பார்த்தால் பர்மா மிகவும் குறைவு பட்டிருக்கிறது. இந்தியாவில் கொச்சின் மாகாணம் அதின் ஜனத் தொகைக் கணக்குப்படி எல்லா மாகாணங்களையும் விட ஆண்களிலும் (முக்கியமாக) பெண்களிலும் அதிகமாகப் படித்திருக்கிறார்கள். அடுத்தபடியாக ஆங்கிலத்தில் பம்பாய் மாகாணத்துப் பெண்களே முதன்மையடைகிறார்கள். ஆங்கிலத்தில் பர்மா தேசத்து ஆண்களில் வங்காளத்தில் பாதி பேர்களே கற்றவர்களாயிருக்கின்றனர்.

பர்மாவின் ஆதி ஜனங்களில் பர்மியர்களே அதிகங்கற்றவர்களாயிருக்கின்றனர். அடுத்தபடியாக ஆண்களில் அரக்கான் ஜாதியார் அதிகமாகிறார்கள். ஆனால் அவர்களின் பெண்கள், கல்வியில் மிகவும் பிற்போக்கடைந்திருக்கிறார்கள். தவாய், மெர்குவி மாகாணங்களில் வாழ்வோர்கள் பர்மியர்களைப் போலவே மிகுதியாகப் பயின்றிருக்கிறார்கள். அதற்கடுத்து தலேய்ங் ஜாதியார் வருகின்றனர். ஆனால் இவர்களில் ஆண் பெண் பாலர்களுக்குள்ள கல்வி வாசனை பர்மிய ஆண் பெண்களுக்குள்ளதைப் பார்க்கிலும் 100-க்கு 60 வீதங் காணுண்டு. கரீன்காரர்கள் ஏராளமாகக் கிறிஸ்தவர்களானாலும் அவர்கள் முக்கியமாக ஆண்கள், பர்மியர்களைவிட கல்வியில் மிகவும் பிற்போக்கடைந்திருக்கிறார்கள். சின், கச்சின் முதலிய மலைவாசிகளும் மற்றவர்களும், கல்வியில் கடை

யர்களா யிருக்கிறார்கள். பர்மா (பூர்வ) ஜாதிகளை மாத்திரம் கல்வி வாசனையில் கணக்கெடுத்ததில் (1931) கீழ் வருமாறு தோன்றுகிறார்கள் :—

பர்மா ஜாதிகள்	1000 ஜனத்தொகையில் கல்வி வாசனையடைந்தவர்		
	மொத்தம்	ஆண்	பெண்
பர்மியர்கள்	476	747	216
அரக்கான்	366	625	113
தவாய் ஜனங்கள்	393	599	190
மெர்க்குவி ஜனங்கள்	409	619	199
சின்	15	30	....
கச்சின்	29	46	13
ஷான்	115	215	14
தலேய்ங்	292	457	124
ஸ்கவ்கரின்	241	321	160
ப்வோ கரின்	243	358	129
டாங்தூ (ஓர் வகை கரின்)	153	275	31
பாலாங்	59	115	2

1931ம் வருஷக் கணக்குப்படி பர்மாவில் மொத்த கல்விச் சாலைகள் 25,524. இவைகளில் சர்க்கார்மேல் பார்வையிலும், உதவியிலு மிருந்து வருவன மொத்தம் 7,567. இவைகளில் கலாசாலைகள் 3, உயர்தரப் பாடசாலைகள் 1464, கீழ் தரப்பாடசாலைகள் 4995, உத்தியோகப் படிப்புக்கான சாலைகள் 44, உபாத்தியாயர் படிப்பு சாலைகள் 94, பாலிபாஷா பாடசாலைகள் 966 முதலியவைகளுமாகும்.

ஜனங்களின் சொந்தமாக வைத்துக் கற்பிக்கப்படும் பாடசாலைகள் மொத்தம் 17,957.

சகல பாடசாலைகளிலும் 518,540 ஆண்களும், 219,727 பெண்களும் கற்று வருகின்றனர். இதில் சர்வ கலாசாலையில் 1414 ஆண்களும், 178 பெண்களும், உயர்தர வகுப்புப் பாடசாலைகளில் 146,647 ஆண்களும், 74,849 பெண்களும், 136,550 பெண்களும் உத்தியோக (லாயர், இஞ்சினியர், டாக்டர் முதலிய) பாடசாலைகளில் 3358 ஆண்களும், 268 பெண்களும் ஆராய்ந்து வருகின்றனர்.

பர்மாவில் ஜனங்கள் கீழ்க் கண்டவாறு கல்வி வாசனையால் பலவிதத் துறைகளில் வேலை செய்து வருகின்றர்.

	ஆண்கள்	பெண்கள்
மதசம்பந்தமான வகையில்	118,363	9,917
உபாத்தியாயர் வேலையில்	15,801	4,857
லாயர், லாயர் குமாஸ்தா வேலைகளில்*	4,432	27
வைத்தியர் வேலையில்	22,552	6,540
சர்க்கார், முனிசிபல் முதலிய உத்தியோகங்களில்	44,479	388
மற்றவிதமான குமஸ்தா முதலிய வேலைகளில்....	14,576	1,825

* லாயர் வேலையில் 2,311 பேர்களும், லாயர் குமாஸ்தா முதலிய வேலைகளில் 2,148 பேர்களு மிருக்கின்றனர். இவ்வுத்தியோகங்களில் காட்டிய 27 பெண்களில், சுமார் ஒருவர் இருவரே லாயர் உத்தியோகம் செய்கின்றனர்; மற்றவர் லாயர் குமாஸ்தாக் களாகவே யிருக்கின்றனர்.

பிச்சைக்கார ராஜ்ஜியம்!

பாரிஸ் நகரத்திற் கருகாமையில் ஒரு சிறு பிரதேசம் இருக்கிறது. இது ஒரு தனி ராஜ்ஜியம் மாதிரி. யாருடைய ராஜ்ஜியம்? பிச்சைக்காரர்களுடையது. இங்குள்ள அரசாங்கம், ஒழுங்கு முறை முதலியன வெல்லாம் வேறு மாதிரி. இதில், உலகத்திலுள்ள எல்லா ஜாதியினர்களும் பிரஜைகளா யிருக்கிறார்கள். நல்ல குடும்பத்தில் பிறந்து போதிய கல்வி ஞானமும் உடைய புலவர், சோம்பேறித் தனங் காரணமாக இந்தப் பிச்சைக்கார ராஜ்ஜியத்தில் வந்து குடி புகுகிறார்கள், இங்குள்ளவர்களை நிர்வாகஞ் செய்ய ஒரு தலைவன் உண்டு. இவன் சொற்படி தான் எல்லாரும் கேட்க வேண்டும். இங்குள்ளவர்கள் அனைவரும் பிச்சை யெடுப்பவர்களே. இதற்காக இவர்கள் பலவிதமான பொய்களைச்சொல்லியும் வேறு பல தந்திரங்களைக் கையாண்டும் பணஞ் சம்பாதிக்கிறார்கள்,

உலகத்தில் சமாதானம் ஏற்பட வழியென்ன?

ஏ. எஸ்.

உலகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்கள், நெருக்கடிகள் முதலியவைகளுக் கெல்லாம் பொருளாதார நிலைமையே காரணமென்பதை இந்தக் கட்டுரை நன்கு விளக்கிக் காட்டுகிறது. ஆனால் இந்தக் கட்டுரையின் கடைசி பாரா வில் கூறப் பட்டுள்ள கருத்துக்களை யாருமே அங்கீகரிக்க முடியாது.

சாதாரணமாக வீதியிலே போகிற ஒருவனைப் பார்த்து 'இப்பொழுது உலக நிலை எப்படி இருக்கிற'தென்று கேளுங்கள். 'யுத்த பீதிதான் நிறைய இருக்கிறது' என்ற பதில் உடனே வரும். 'இந்த யுத்த பயத்திற்குக் காரணம் யார்?' என்ற கேள்வியைப் போட்டால் 'ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகள்தான்' என்ற பதில் உடனே வரும். இவ்வண்ணம் சொல்வது இப்பொழுது சர்வ சாதாரணமாகி விட்டது. ஏன் இப்படிச் சொல்லப்படுகிறதென்று கேட்பீர்களானால், சர்வாதிகாரிகள் இந்நாட்டை ஆள்வதே காரணமாகும். ஆனால் எதிரிடையான மற்றொரு கட்சியையும் தெரிந்து கொண்டவர்கள், இந்த மாதிரியான பதிலை உடனே சொல்ல மாட்டார்கள்.

பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்கு யுத்த நோக்கமில்லை யென்பதுதான் பலருடைய அபிப்பிராயமும். இது உண்மையாகவே இருக்கலாம். இவைகளுக் கெல்லாம் போதிய குடியேற்ற நாடுகள் இருக்கின்றன. இவைகளிலிருந்து போதுமான உணவுப் பொருள்களும் மூலப் பொருள்களும் மேற்படி நாடுகளுக்குள் கிடைக்கின்றன. இத்தலி, எப்படி அபிசீனியாவைத் தன் ஏகாதிபத்தியத்திற்குள் சேர்த்துக் கொண்டதோ அதே மாதிரி முறைகளைக் கொண்டு, சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டனும் பிரான்ஸும் சுவாதீனப் படுத்திக் கொண்ட குடியேற்ற நாடுகளில் பல, இன்னும் மேற்படி இரண்டு ஏகாதிபத்தியங்களினாலும் விருத்தி செய்யப்படாமலே இருக்கின்றன. பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் லட்சக் கணக்கான சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள், குடி புகுத்தப்படாமலோ, விவசாய அபிவிருத்தி செய்யப்படாமலோ இருக்கின்றன. யூரல் மலைக்குக் கிழக்குப் பிரதேசங்களை விருத்தி செய்ய ருஷ்யாவுக்கு இன்னும் நூறு வருஷங்களாவது செல்லும். உலகத்திலே யுள்ள நாடுகளில் மிகப் பணக்கார நாடு என்று சொல்லக் கூடிய மாதிரி, அமெரிக்காவினிடத்தில் ஏராளமான மூலப் பொருள்கள் இருக்கின்றன.

பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, அமெரிக்கா ஆகிய நான்கு தேசங்களுக்கும், சொந்தமாகவோ அவற்றின் ஆதிக்கத்துக்குட்பட்டோ மூன்று கோடி சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசம் இருக்கிறது. இந்தப் பிரதேசங்கள் அவ்வளவும் செழிப்புள்ளவை; உலோகப் பொருள்கள் நிறைந்தவை. ஆனால் ஜெர்மனி, இத்தலி, ஜப்பான், போலந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய எல்லா நாடுகளுக்கும் சேர்ந்து மொத்தம் பத்து லட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசந்தான் இருக்கிறது. இவையும் அவ்வளவு செழிப்பானவையல்ல. தவிர, உலகத்தில் உற்பத்தியாகும் உலோகப் பொருள் வகைகளிலும் மூலப் பொருள் வகைகளிலும், நூற்றுக்கு 85 விகிதம் பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா, அமெரிக்கா ஆகிய இந்த நான்கு நாடுகளுக்குமே சொந்தமானவையாயிருக்கின்றது.

சர்வ தேசங்களுக்குள்ளும் அடிக்கடி பிணக்குகள் உண்டாவதற்கும், இந்தப் பிணக்குகள் சம்பந்தப்பட்ட பிரச்னையானது வர வரச் சிக்கலாகிக் கொண்டு வருவதற்கும் இப்பொழுது காரணம் தெரிகிறதா? விஸ்தீரணமானதும் செழிப்புள்ளதுமான நிலப் பிரதேசங்களை உடைய பிரிட்டன், பிரான்ஸ் முதலிய வல்லரசுகள் சமாதானம் வேண்டுமென்று கூறுவது சகஜந்தானே. ஏனென்றால் இவைகளுக்குத் தேவைக்கு அதிகமான வசதிகள் இருக்கின்றன. ஆனால் ஜெர்மனி, இத்தலி முதலிய நாடுகளோ, உலகத்திலுள்ள இயற்கை வசதிகளைத் தாங்கள் இன்னும் அதிகமாக அநுபவிக்கவிட வேண்டுமென்று கோருகின்றன. 'வால்கர்புண்ட்' என்ற ஒரு ஜெர்மானியப் பத்திரிகை, 1-10-37ல் பின் வருமாறு எழுதியது:—

> வார்சேல் சமாதான உடன்படிக்கை, உலகத்தை, உரிமையாளர்க்கென்றும் உரிமையற்றார்க்கென்றும் இரு கூறுகப் பிரித்தது. இந்தப் பிரிவினையை ஜினீவா சர்வ தேச சங்கம் ஸ்திரப்படுத்தி விட்டது.

இதற்கு உரிமையாளர்—அதாவது பிரான்ஸ், பிரிட்டன் முதலிய நாடுகள்—என்ன கூறுகின்றனர் என்றால் 'எங்களிடத்திலேயுள்ளதை நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம்; அவ்வளவுதானே' என்கின்றனர்.

உலகத்தின் பொருளாதார நிலைமையை அடியோடு சீர்திருத்தி அமைத்தாலன்றி, ஜெர்மனி, இத்தலி, ஜப்பான் முதலிய நாடுகள், மற்ற நாடுகளுக்குச் சமமான பொருளாதார அந்தஸ்து பெற்று இனி நீண்ட காலம் வாழ முடியாது. இது சம்பந்தமாக விசாரணை செய்த அமெரிக்கன் ப்ராங்கிங் கமிஷன் தன் அறிக்கையில், ஜெர்மனியானது ஒரு போர் வீரனையோ, பீரங்கியையோ 'வைத்துக் கொண்டிராவிட்டால், அல்லது ராணுவத்திற்காக ஒரு காசு செலவழிக்காவிட்டால் அங்கு இன்னும் பதினைந்து வருஷ காலத்திற்குள் இன்ஸால்வெண்டாகி விடுமென்றும், இப்படியே இத்தலியும் பத்து வருஷத்திற்குள் இன்ஸால்வெண்டாகி விடுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

ஜெர்மனி, இத்தலி முதலிய நாடுகள், தங்களுக்குத் தேவையான வளவு பேரஷணை செய்து கொள்ள முடியாது; தங்கள் நாடுகளில் உற்

பத்தியாகும் மூலப் பொருள்கள் போதுமானவையா யில்லாதபடியால், தங்கள் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து கொள்ள முடிய வில்லை. தங்களுக்குத் தேவையான பொருள்களை உலக மார்க் கெட்டுகளிலே வாங்க முடியவில்லை. ஏனென்றால் வரிகள், நாணய மாற்று விகிதங்கள் முதலியன இவற்றைத் தடுக்கின்றன.

இந்த உண்மைகளைப் படித்த ஜெர்மானியன் ஒவ்வொருவனும் நன்கு அறிவான். உலகத்தின் பொருளாதார நிலைமை அடியோடு மாற்றப்பட்டாலன்றி, தன்னுடைய ஜன சமுதாயம் சீக்கிரத்தில் பட்டினி கிடந்து இறந்து விடுமென்பதை அவன் அறிவான். உலகத்தின் பொருளாதார நிலைமையை மாற்றியமையுங்கள் என்று அவன் சமாதான முறையில் எவ்வளவோ கேட்டுப்பார்த்தான். ஆனால் கேட்பார் யார்? சர்வ தேச சங்கமும் இதைப்பற்றி ஒருவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. பொருளாதார சம்பந்தமாக ஜெர்மனிக்குள்ள குறைகளைப் பற்றியும், வார்சேல் சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக அதற்கேற்பட்ட குறைகளைப்பற்றியும் விசாரிக்க, ஜினீவாவில் ஒரு மகாநாடு கூட்ட முடியுமாவென்று 1936ம் வருஷம் பிப்ரவரி மாதம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு கேள்வி கேட்கப்பட்ட போது, அதுகாலை அந்நிய நாட்டு மந்திரியான அந்தோனி ஈடன், முடியாது என்று கண்டிப்பாகப் பதில் சொல்லி விட்டார்.

சாதாரண ஒரு ஜெர்மானியன் பின் வருமாறு நினைக்கிறான் :—'நமக்கென்னமோ சமாதான வழிகளில் விமோசனம் கிடையாது. நமது ஆயுத பலத்தைக் கொண்டுதான் நமது குறைகளுக்குப் பரிகாரந் தேடிக் கொள்ள வேண்டும். நமது உரிமைகளை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டும். வேறு வழியில்லை' ஆனால் ஜெர்மானியப் பொதுஜனங்கள் என்ன அபிப்பிராயப் படுகிறார்களென்றால் 'நமக்கென்னவோ பாசிஸம் பிடிக்கவில்லை தான். நாஜி கொள்கைகளில் பெரும்பாலானவற்றை நாங்கள் அங்கீகரிக்க வில்லை. யூதர்களுக்கு விரோதமாகச் செய்யப்பெறுங் காரியங்களையும் நாங்கள் அங்கீகரிக்கவில்லை. ஆனால் எதிர் காலத்தில் நாங்கள் வாழ வேண்டுமானால் ஹிட்லரை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லையே. இதனாலேயே, ஜெர்மனியில் ஆயுத பலம் பெருக்கப்படுவதை நாங்கள் அங்கீகரிக்கிறோம்.'

ஜப்பானுடைய குறையும் இதே மாதிரிதான். 'கிரேட் பிரிட்டனால் அநுஷ்டிக்கப் பெறும் பொருளாதார முறைகளினாலேயே ஜப்பான் இப்பொழுது பட்டினியாகக் கிடக்கிறது. ஜப்பானுக்கு நிற்கவும் இடமில்லை. இங்கிலாந்துக்கோ ஏராளமான நிலப் பிரதேசங்கள் சொந்தமா யிருக்கின்றன. அவற்றில் ஒரு பகுதியை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுப்பதற்கு அதன் பேராசை தடுக்கிறது. அதனதேவைக்கு அதிகமாக இருக்கும் பொருள்களை மற்ற நாடுகளோடு அது பங்கிட்டுக் கொள்ளாத வரையில், உலக சமாதானம் ஏற்படவே படாது' என்ற கருத்துக்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் 1938ம் வருஷம் ஜூன் மாதத்தில், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டன.

உலகத்தின் முக்கியமான நாடுகள் அனைத்திலும் முதலாளி—தொழிலாளி போராட்டம் நடை பெற்று வருகிறது. இதே மாதிரி போராட்டந்தான், உலக வல்லரசுகளிடையிலும் நடை பெறுகிறது. ஜெர்மனி, இத்தலி முதலிய நாடுகள் தொழிலாளர் நாடுகளென்றும், பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவை யென்றும் சொல்லப்படுகின்றன. இந்தக் கருத்துப்படவே முஸோலினியும் ஹிட்லரும் பேசி வருகிறார்கள்.

ஜெர்மனி, இத்தலி முதலிய நாடுகளுக்கு எப்படியும் சீக்கிரத்தில் பொருளாதார சம்பந்தமான பரிகாரங்கள் தேடிக் கொடுக்கப்பட வேண்டும். இந்தப் பரிகாரங்களை அவை பலாத்காரமாகத் தேடிக் கொள்வதற்குப் பதிலாக, ஏன் பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் தாங்களே சகஜமாக அளித்துவிடக் கூடாது? நாம் நியாயமாக நடந்து கொள்ளுவோம் என்பதை நமது செய்கைகளால் நிரூபித்து விட்டோமானால், ஜெர்மானியர்கள், ஹிட்லருக்கு ஆதரவு காட்டுவதை நிறுத்திக் கொண்டு விடுவார்கள். ஹிட்லரும் யுத்த முழக்கத்தைச் செய்து கொண்டிருக்க மாட்டார்.

சர்வதேச சங்கத்திலிருந்து வெளியான வான் ஜீலண்ட் அறிக்கையொன்றில் பின் வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன:—

> உலகத்தி லுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் வாழ உரிமை கொடுங்கள். அதற்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மூலப் பொருள்களையும் தேடிக் கொள்ள வசதி செய்து கொடுங்கள். உலக மார்க்கெட்டிலே, தங்கள் பொருள்களை விற்கவும் வாங்கவும் ஒவ்வொரு தேசத்திற்கும் உரிமை இருக்கட்டும். பொருளாதார ஒத்துழைப்பை எல்லா நாடுகளிடையும் ஏற்படுத்தி வையுங்கள். தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் தீவிர முயற்சியில் சிறிய நாடுகளைத் திணற விடாதீர்கள். தற்போதைய பொருளாதார நிலைமையைச் சமன் வயப்படுத்த உலகப் பொருளாதார மகாநாடு ஒன்று கூட்டி வையுங்கள்.

உலகத்தில் எத்தனையோ மைல் விஸ்தீரண முள்ள பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப் படாமலும், சுய ஆட்சி பெறாமலும் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்து சர்வதேச சங்கத்தின் நிருவாகத்திற் குட்படுத்தி, இவற்றில் எல்லா நாடுகளுக்கும் ஏன் சம உரிமை கொடுக்கக் கூடாது? உலகத்தில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் நாம் சில சலுகைகளைச் செய்து கொடுக்கத்தான் வேண்டும். சில தியாகங்களைச் செய்யத்தான் வேண்டும். ஏகாதிபத்திய எண்ணத்தையும் நாம் ஒழித்து விட வேண்டும். இந்த மாதிரியான காரியங்களை நாம் தாராள மனப்பான்மையுடன் செய்தோமானால் அவசியம் நல்ல பயனே உண்டாகும்.

பிப்ரவரி 1939

ஞானக்களஞ்சியம்

ஜோதி

வேதாந்த ரகசியங்கள்

—ரா. ஸ்ரீனிவாச ராவ்

(அன்னார் மகன் ஸ்ரீ ராமசந்திரன் உதவியது)

பூரண ஞானநிலை :—

கடல் நாயும் அதன் செய்கையும்

கடல் நாயானது மீன் முதலிய பிராணிகளைத் தின்று சிறிது நேரஞ் சென்ற பின் தானுட்கொண்ட இரையின் சாரத்தை மட்டும் விழுங்கி இரைப்பைக்குள் க்ரஹித்துக் கொண்டு மீதியுள்ள சக்கை முழுதையும் வாய் வழியாகவே வெளியிற் கக்கி விடுகின்றது. அதுபோல மனிதர்கள் 'ஸத்' சுவரூபமாய் விளங்கா நின்ற பரப்பிரஹ்மமாகிய சாரத்தைப் பூரணமாயறியும் வரையில் பிரகிருதி விஞ்ஞானத்தை (உலக சம்பந்தமாகிய ஜடதத்துவ சாஸ்திரத்தைத்) தமக்குள் வைத்துக் காப்பாற்றி வந்து அவ்வாத்தும சுவரூபத்தை முழுதும் உணர்ந்தவுடன் மேற்கூறிய பிரகிருதி விக்ஞானத்தை யொழித்து விடுகின்றார்கள். ஆதலால் ஆத்ம ஞானம் சம்பூர்ணமாகும் வரையில் உலக ஞானம் அத்தியாவசியகமாகும்.

உலகம் மயக்கம்:—

பாம்பும் பாம்பாட்டிகளும்

பாம்பாட்டிகள் தங்களுடைய விசித்திரமாகிய மகுடிவாத்தியத்தினால் செவிக்கினிதாகப் பற்பல ராகங்களை வாசிப்பார்கள். சர்ப்பங்கள் அந்த ரமணீயமான கானத்தைக் கேட்டு அதிலீடுபட்டனவாய்ப் பாம்பாட்டிகள் தங்களைப் பிடிப்பதற்காக வருவதைக் காண வியலாது. அவரது கையிலகப்பட்டுக் கொள்ளும். அதுபோலவே மனிதர்கள் உலக நாடகத்தினது ஆரவாரங்களைக் கேட்டு மதிமயங்கிப் போவதால் காலன் வருவதைக் காண்பதற்கு அசக்தர்களாய் அவன் கரத்திற் சிக்குண்டு மிதிபட்டுச் சகித்தற்கரிய பரம சங்கடங்களையனுபவிக்கின்றார்கள்.

உண்மையின் பெருமை:—

கத்தியும் புஷ்பங்களும்

உண்மையானது கத்தியைவிடக்

சூரியதாயும் புஷ்பத்தைப் பார்க்கினும் மிக்க ரமணீயமாயும் விளங்குகின்றது. எவ்வாறெனில் சத்தியானது எத்துணை கூரியதாயினும் உபயோகிக்குந்தோறும் தேய்வுறுவது பிரத்தியக்ஷம். அவ்வாறே மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ரோஜா முதலிய நறுமணங் கமழும் புஷ்ப வகைகளும் கதிரவனொளிபடக் கணத்தில் வாடித் தன் மணங் குன்றுவதாம்.

சத்தியமோ அவ்வாறன்று:—அது உபயோகிக்குந்தோறும் மிகக் கூர்மையுடையதாய் நாள் செல்லச் செல்ல நின்மணம் வீசி எங்கணும் பரவி இன்பமளிப்பதாய்த் துலங்குகின்றது. ஆஹா! சத்தியத்தின் பெருமையிருந்தவாறு என்னே!

உலக வாசனை:—

முதலையும் ஒரு பெரிய குளமும்

ஒரு விரிந்த தடாகத்தில் வசித்து வருகின்ற முதலையைப் பலவந்தமாய்ப் பிடித்து அக்குளத்தின் கரையில் மலாத்திப் போட்டுவிட்டால் அதைக் காட்டிலும் அதற்கு வேறே சங்கடமுண்டாக்கக் கூடியதில்லை. ஏனெனின் கரையிற் போடப்பட்டவுடன் அது தன்னுடைய கைகளையும் கால்களையும் தூக்கி அடித்துக் கொண்டும் உதறியும் சகித்தற்கரிய பல கஷ்டங்களை யனுபவிக்கும். இவ்விதமிருக்கின்ற முதலையை முன்போல் குளத்தினுக்குள்ளே விட்டுவிட்டால் அது அக்குளமுழுவதையும் மிக்க அட்டகாசஞ் செய்து அளவற்ற உற்சாகத்துடன் வெகு வேகமாய்த் துள்ளித் துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்கும்.

அதுபோல் உலக விஷயத்தில் மூழ்கிக் கிடக்கின்ற ஒருவனைப் பலவித உபதேசங்களால் கடவுளது பக்தியில் ஆகர்ஷித்து அவனை அந்நிலையிலேயே இருக்கும்படிக்கு நிர்ப்பந்தஞ் செய்தால் அஃதவனுக்கு மிகக் கஷ்டமாய்த் தோன்றுவதும் அதினின்றும் விடுவித்தால் அவன் சிறைக் கூடத்தினின்றும் விடுபட்டவனைப்போல் நினைத்து உலக விஷயத்திலோடித்திரிந்து முன்னிலும் பன்மடங்கு மகிழ்ச்சி பெற்றவனைப்போல் தோன்றுவதும் பிரத்தியக்ஷமல்லவா?

ஆசாரியன் மகிமை:—

கப்பலும் யாத்திரைக்காரர்களும்

கப்பற்காரர்கள் (யாத்திரை செய்யும்) பிரயாணிகளைக் கப்பலிலேற்றி இப்பூமியின் ஒரு பாகத்தினின்றும் மற்றோர் பாகத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றனர். கப்பலிலுள்ள ஓட்டை உடைசல்களைப்பற்றி யாத்திரை செய்பவர்கள் அறிய வேண்டி முயற்சி செய்யவும் அல்லது அறிந்துவிடின் அவைகளைச் சீர்திருத்துவதற்குப் பிரயத்தினஞ் செய்யவும் கருதுவதில்லை. ஆனால் கப்பற்காரர்களோவெனில், கப்பல்களை அடிக்கடி பரிசோதித்து அவற்றிலுள்ள குற்றங் குறைகளை நீக்கிக் கப்பலைச் சீர்ப்படுத்துகின்றார்கள். அதுபோல் பரமாசாரியன் மனிதவர்க்கங்களை வேதோபநிஷத்துக்களாகிய கப்பல்களிலேற்றித் தாண்டுதற்கரிதான பிறவிப் பெருங்கடலைத் தாண்டும்படி செய்கின்றார்கள். வேதோபநிஷத்துகளுக்குக் குறைவு வருங் காலத்தில் அப்பரமாசாரியர்களே அவைகளை மேன்மைக்குக் கொண்டு வருவார்களேயன்றிச் சாதாரண மனிதர்கட்கு அது சாத்தியமாவதல்ல.

அஞ்ஞானம் நீங்கும் வழி :—

யானையும் விளாங்கனியும்

யானையினால் விழுங்கப்பட்ட விளாங்கனியானது அதன் வயிற்றினின்றும் வெளியேறும் பொழுது அதற்குள்ளே யிருந்த சதைகள் சிறிதேனும் காணப்படுவதில்லை. அக்கனியின் மேலோடோவெனில் சிறிதும் வேற்றுமையுற்றதாய்க் காணப்படாது முன்போலவேயிருக்கும்.

அது போல் மஹா புண்ணியவானாகிய ஒரு மனிதன், தத்துவ விசாரம், மனோநாசம், வாசனாக்ஷயம் முதலிய நுட்பமான அப்யாசங்களை இடையறாது தீவிரமா யனுஷ்டித்துச் சர்வ அநர்த்தமாகிய 'பிறவி விதையின்' அடிமுனையைச் சுட்டெரித்துச் சீவன்முக்தனாகின்றான். அப்பொழுது அம்மஹானுடைய மூலா ஞானம் அடியோடு நசித்து விட்டதானாலும் அவனது ஸ்தூல சரீரமும் அதன் லோகாநுக்ரஹப்பிரவர்த்திகளும்(ப்ராரப்தம் போகதோ நக்யேத், 'பிராரப்தம் போகத்தால் நாசத்தை யடையும்' என்ற நியாயப்படி அதை யனுபவித்துத் தீரும் வரை ஸ்தூல சரீரம் முன்போலவே காணப்படும்.

ஞானம் பெறுதல் :—

தயிரும் வெண்ணெயும்

தயிரினுள்ளே யிருக்கின்ற வெண்ணெயைக் கடைந்தெடுத்து அத்தயிரினுள்ளேயே திரும்பவும் போட்டு விட்டால் அவ்வெண்ணெயானது மீண்டுந் தயிருடன் கலந்து முன் நிலைமையை யடையவதில்லை. அது போல் லௌகிக (உலக சம்பந்தமான) விவகாரங்களிலேயே ஈடுபட்டும் 'தேகமே ஆத்மா' எனக் கருதி (அஞ்ஞானியா) யிருக்கின்ற ஒரு மனிதன் ஸ்ரீ குருநாதனுபதேசித்த வண்ணம் பிருஹம வித்தையை யப்பியசித்து,

> ஸ்வதேஹ மரணிம் க்ருத்வா,
> ப்ரணவஞ்சோத்தாரணிம் !
> த்யான நிர்மத நாப்யஸாத்
> தேவம் பச்யேந்நிகூடவத்!!

தனது சரீரத்தை (வன்னி அரசு முதலிய மரங்களின் பெரு துண்டுகளில் மற்றோர் சிறிய குச்சியாகிய மத்தினால் கடையுங்கால் அக்கினியுண்டாகும். அதுவே யாகத்திற்குரியதாம்) அங்ஙனங் கடைதற்குரிய சாதனத்தை அரணியென்பர். அரணியாகவும் ஓங்காரமாகிய பிரணவத்தை மேல் அரணியாகவும் (அதாவது மத்தியமாகவும்) செய்து தியான அப்பியாசமாகிய கடைதலினால் 'மறைந்திருக்கின்ற பரம்பொருளை' (பரப்பிரும்மத்தை) அறிதல் வேண்டும்.

இங்ஙனஞ் செய்பவன் பிரமலோகம் வரையிலுள்ள சகல போகங்களையும் வெறுத்தும், தேசத்தினது உள்ளிலும் வெளியிலும் (அவ்விரண்டுகளிலும்) நிகழுகின்ற காரியங்களாகிய இந்திரியச் செயல்களினின்று அடியோடு நீங்கியும் அதனால் பிரமமே தானாகவும் விளங்குகின்றான். இந்நிலையடைந்த ஒரு மகாத்மா தான் செய்ய வேண்டியதாய் விரும்பியவாறு எத்தனை உலக விவகாரங்களைச் செய்யினும் 'தானே அவ்வகண்ட பிருஹ்மஸ்வரூப'மென்றுணர்ந்த அந்நிலையினின்றுந் தவறிச் சிறிதும் பிராபஞ்சிகன், கண்டதே காக்ஷி, கொண்டதே கோலமென நினைந்துள்ள பாமரன் பிராபஞ்சிகன் ஆவதில்லை.

பினங்கு காட்சிகள்



கிங் எட்வர்ட் பிளேஸ், பினங்கு.



பினங்கு கடற்கரைக் காட்சி.



பினங்கு சமுத்திரக் கரையின் தோற்றம்.



பினங்கு மலை ரயில்.



பினங்கு நகர குடி தண்ணீர்த் தேக்கம்.



பினங்கு துறைமுகத்தில் படகுகள் தங்கி நிற்கும் காட்சி.



தைப்பிங் பூந்தோட்டம்.



பினாங்கு கடற்கரையும் கலங்கரை விளக்கமும்.

மலாய் நாட்டில் கோப்பரா.



கோலாலம்பூர் ஜெனரல் போஸ்டா பீஸும்
அரசாங்க மாளிகைகளும்.

சிறு கதை

லஞ்சம்

—சு. குருசாமி, B. A.

இந்தச் சிறு கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களென்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை,

வேங்கடராம நாயுடு, தாலுகா ஆபீஸ் பியூன். மாதம் பதினாறு ரூபாய் சம்பளம். ஆனால் சம்பளத்துக்கேற்ற குடும்பமில்லை. ஆண் ரகத்தில் நான்கு, பெண் ரகத்தில் மூன்று, ஆக மொத்தம் ஏழு பிள்ளைகள். இது தவிர, எமனுக்கு 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டு வரும் 75 வயதுள்ள சுமங்கிலியான தாயார். 'சுமங்கிலி' என்று சொன்னதிலிருந்தே, தகப்பனார் ஒருவர் இருக்கிறார் என்று சொல்ல வேண்டிய அவசியமே இராது. ஒற்றைப்படை நம்பர் ஆகாதென்று, டஜனைப் பூர்த்தி செய்ய அவருடைய தங்கையும் விதவையாகிச் சென்ற வருஷம் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

வேங்கடராம நாயுடு இராமபக்தர். எந்நேரமும் இராம நாமம் ஜெபித்த வண்ணமாகவே இருப்பார். தினந்தோறும் பெருமாள் கோவிலுக்குப் போகத் தவற மாட்டார். பட்டை பட்டையாக நாமம் போட்டுக் கொள்வார். அவர் தனக்குத்தான் நாமஞ் சாத்தப் படித்திருந்தாரே யொழிய, மற்றவர்களுக்கு நாமஞ் சாத்தும் வித்தையை இன்னும் அவர் கற்றுக்கொள்ளவில்லை. குமாஸ்தாக்கள், ஆபீஸில் ஒன்றிரண்டு, லஞ்சம் வாங்குவதை அவர் பார்க்க நேரிட்டால், 'ராமா! ராமா!' என்று மனதிற்குள்ளேயே ஜெபித்துக் கொள்வார். அப்பாதகத் தொழிலைப் பார்த்த பாவத்தைப் போக்கிக் கொள்வதாக அவர் நம்பிக்கை. தாலுகா ஆபீஸில் வேலை பார்த்துங்கூடத் தாமரை இலை நீர் போல், வேங்கடராம நாயுடு லஞ்சம் வாங்காமலிருந்தது, யாவருக்கும் வியப்பாகவே இருந்தது.

வேங்கடராம நாயுடுவுக்கும் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையிருந்தது. அவருக்குப் பதினெட்டு வருஷம் 'சர்வீஸ்' ஆகிறது. அடுத்த வருடம் டபேதார் அப்துல் காதர் சாகிப் பென்ஷன் வாங்கப் போகிறான். அவனுக்குப் பின்னால் இருக்கிற பியூன்களிளெல்லாம் நாயுடுதான் 'சீனியர்'. அப்துல் காதருக்கப்புறம், டபேதார் வேலை நாயுடுவுக்குத்தான். டபேதார் உத்தியோகம் வந்து விட்டால், மாதம் இருபது ரூபாய் சம்பளங் கிடைக்கும். அப்புறந்தான் தன் மகளுக்குக் கலியாணஞ் செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தார் நாயுடு.

சாமி! எல்லாருங் கையெழுத்துக் காயிதங் குடுத்திட்டாங்க. நீங்க ஒருத்தர்தான் பாக்கி. மணி பத்தாச்சு. நான் போகப் போகிறேன்' என்றார் வேங்கடராம நாயுடு.

'ஓய் நாயுடுகாரு, கொஞ்சம் பொறும் ஓய். ஆப்காரி ஸ்டேட்மெண்ட் நாளைக்குப் போகாட்டா, கலெக்டர் கண்ணு முழியைப் புடுங்கிப்பிடுவான். இதோ தந்துட்டேன் கொஞ்சம் பொறும்' என்றார் ஆப்காரி கிளார்க்.

நாயுடு பொறுமைசாலி. கொஞ்ச நேரம் பொறுத்து, அதையும் வாங்கிக் கொண்டு, எல்லாவற்றையும் கையெழுத்துப் பெட்டியில் போட்டுத் தூக்கிக் கொண்டு தாசில்தார் வீட்டிற்குப் போனார். மாடிக்குச் சென்று தாசில்தார் அறையை அணுகியபோது, அவருடன் யாரோ ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் சப்தங் கேட்டது.

'ஐந்நூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன். எஜமான் கிருபை செய்து, ஏலத்தை என் பேரில் முடித்துவிட வேண்டும்.'

'முழு ரூபாயாய் ஒரு ரூபாய் கொடுத்துவிட வேண்டும். அதற்குக் குறைந்தால் என்னிடத்தில் பேசவே வேண்டாம். 3,000 ரூபாய் பெறக் கூடிய நிலம்!' என்றார் தாசில்தார்.

நாயுடு மூக்கில் விரலை வைத்துக் கொண்டு, பக்கத்திலிருந்த பியூன் ஒருவனை 'இதென்ன?' என்று கேட்டார்.

'சப்தம் செய்யாதே' என்று ஜாடை காட்டிக் கொண்டே, 'சம்திங்!' நடக்குது, 'சம்திங்!' இப்ப உள்ளே போகாதே' என்றான் அந்தப் பியூன்.

'தாசில்தார் எஜமான் கூட்டவா இப்படி!' என்று வாயைப் பிளந்தார் நாயுடு.

'நீதான் பைத்தியம், எசமானுக்குமா பைத்தியம்?' என்றான் பியூன்.

'எசமான்! கிருபை செய்யணும். ஒங்க பேரைச் சொல்லி நான் பெழைச்சுக்கிருவேன். எசமான் பெரிய மனசு பண்ணணும்' என்று உள்ளேயிருந்து சப்தம் வந்தது.

அந்தப் பேச்சே பேச வேண்டாம். ஆயிரத்துக்குக் குறைந்தால் காரியம் நடக்காது' என்றார் தாசில்தார்.

உடனே பத்து நோட்டுகள் எண்ணும் சப்தங் கேட்டது. தாசில்தார் இந்த விஷயத்தில் எல்லாம் 'கறார்' ஆன பேர்வழி என்பது வந்தவருக்குத் தெரியும்.

ஃ ஃ ஃ

மறு நாள் 'ரெவின்யூ டிபாசிட் ரீபண்டு வவுசர்' எடுத்துக்கொண்டு ஒரு வாலிபன் தாலுகா ஆபீஸிற்கு வந்தான். கோழிக் குஞ்சை நோக்கி வட்டமிடுங் கருடனைப்போல், நாயுடு அவனை வட்டமிட்டார்.

'எட்டணா கொடுக்கிறேன். சீக்கிரம் இதை மாற்றிக் கொடு' என்றான் வாலிபன்.

'முழு ரூபாயாய் ஒரு ரூபாய் கொடுத்துவிட வேண்டும். அதற்குக் குறைந்தால் காரியம் முடியாது' என்றார் நாயுடு. தாசில்தாரிடத்தில் படித்த பாடம்! ஒரு தப்பிதங்கூட

இல்லாமல் ஒப்பித்தார். ஆனால் முடிவென்னமோ அவ்வளவு வெற்றிகரமாக இல்லை.

வந்தவன் எஸ். எஸ். எல். ஸி. படித்த துடியான வாலிபன். சிறிது சட்டந் தெரிந்தவன். உடனே ஹெட் அக்கவுண்டெண்டிடம் போய்ச் சொல்லி விட்டான்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் நாயுடுவை ஹெட் அக்கவுண்டெண்டு தன் வீட்டிற்குத் தண்ணீர் எடுக்கச் சொன்னார். நாயுடு மறுத்து விட்டார். அதிலிருந்து அவர் நாயுடுவின் மீது கண்ணாகவே இருந்தார். இப்பொழுது அவர் மீது ஒரு ரிப்போர்ட்டு வரவே, அவ் வாலிபனிடம் ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கி, தாசில்தாருக்கு ரிப்போர்ட் செய்து விட்டார்.

சில நாட்களுக்குப் பின், தாசில்தார் நாயுடுவை விசாரணை செய்தார். நாயுடு குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதி தவறாத தாசில்தார் தன் கடமையைச் செய்தார். நாயுடுவின் சம்பளத்தில் இரண்டு ரூபாய் குறைக்கப்படுமென்றும், டபேதார் வேலைக்கு அவர் சிபார்சு செய்யப்பட மாட்டாரென்றும் தீர்ப்புக் கூறப் பட்டது.

நாயுடு, வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டார்.

மறுநாட் காலைத் தபாலில் தாசில்தாருக்கு ஓர் உத்திரவு வந்தது. அவரை மாயவரம் டிவிஷன் டிப்டி கலெக்டராகப் 'பிரமோஷன்' செய்திருப்பதாக அதில் கண்டிருந்தது.

ஊரார் அனைவரும் அவருக்கு ஒரு தேநீர்க் கச்சேரி வைத்துப் பிரிவுபசாரப் பத்திரம் ஒன்றும் வாசித்துக் கொடுத்தார்கள். அப் பத்திரத்தில், தாசில்தார் தர்மத்திற்குக் கட்டுப் பட்டவரென்றும், நீதி தவறாதவரென்றும், தற்காலத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதை அவர் எவ்வளவு வெறுக்கிறார் என்பது, ஒரு பியூனுக்கு அவர் விதித்த தண்டனையினின்றே தெரிய வருகிறதென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆசைக்குட்படாதிருத்தல் எவ்வளவு பெரிய காரியம். பேரறிஞர்கள் பலர் இந்த ஆசைப் பேய்க்குட் பட்டு தங்கள் ஆத்மாவை விற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர் காலத்தில் வாழவேயில்லை.

—ஓர் அறிஞன்

தமிழ்த் தாத்தா!

வித்வான்—எஸ். உமைதாணு பிள்ளை

இப்பாடல் டாக்டர் உ. வே. சுவாமிநாதையர்
அவர்கள் மீது பாடப்பட்டது.

தமிழுலகக் கொரு தாத்தா—நம்மித்
தவ வலியால் வந்த தாத்தா;

அமிழ் தெனத் தமிழை நினைக்குந் தாத்தா—அதற்காய்
அல்லும் பகலு முழைத்து வரும் தாத்தா.
தமிழ் நூலெல்லாம் கண்ட தாத்தா—அதன்
தன்மை யெலா மறிந்த தாத்தா. 1.

மண்ணை விட்டகலாத தாத்தா—இந்த
மண்ணுள்ளளவும் புகழைத் தரும் தாத்தா.
அலைந்து திரியும் புத்தக சாலையான தாத்தா—அதில்
அரிய நூற்களுக் கிருப்பிடமான தாத்தா. 2.

தலைந்து கிடந்த தமிழ் நூற்களை யெலாம்—கூட்டிக்
கோர்த்துப் பதிப்பித்துத் தந்த தாத்தா
ஏட்டி லார்வமுள்ள தாத்தா—அதை
எல்லா யிடமும் சென்று திரட்டுந் தாத்தா. 3.

கூட்டி மலையாய்க் குவிக்குந் தாத்தா—அதனுடன்
கூடவே இடர் துறந்தந் தாத்தா.
கவியினிற் பெரிய வொரு தாத்தா—கம்பர்
கவியில் மயங்கிக் கிடக்கும் தாத்தா. 4.

புவி யெல்லாம் போற்றும் தாத்தா—தமிழிற்றுப்
புத்துயி ரளிக்க வந்த தாத்தா.
சங்க நூற்கள் பதிப்பித்த தாத்தா—நமது
சங்கட மெலாம் தீர்த்த தாத்தா. 5.

சிங்கத் துட்டியான தாத்தா—நமது
செந்தமிழ் வளர்க்க வந்த தாத்தா
தொண்டர் பல உதவுந் தாத்தா—தமிழ்த்
தொண்டை வளர்த்து வருந் தாத்தா. 6.

அண்டையில் நூற்க ளோடிருந்து—தினமும்
ஆனந்தமாய்க் கழித்து வருந் தாத்தா.
பாரெல்லாம் புகழும் தாத்தா—நமது
பாரத நாட்டிற் கோரு தாத்தா. 7.

சீரெல்லாங் கொண்ட தாத்தா—செந்தமிழ்ச்
செல்வியை வளர்க்க வந்த தாத்தா
சபைக்குச் சரியான தாத்தா—புகழும்
சாமிநாதப் பெயர் கொண்ட தாத்தா. 8.

அவைகள் பல தலைமை வகித்த தாத்தா—அதில்
அரிய விஷயங்கள் தந்த தாத்தா.
பதிப்பிற்குப் பதிப் பழகேற்றுந் தாத்தா—நூலைப்
பால் போலத் தெளிந்துரைக்குந் தாத்தா 9.

கொதிப்புக் கொண்டு மேன்மேலும்—நூற்கள்
கோர்த்துப் பதிப்பித்துத் தருந் தாத்தா.
'தியாகராஜ விலாச'த் துறையுந் தாத்தா—தமிழ்
தெய்வ மெனக் கொண்டாடுந் தாத்தா. 10.

'தியாகராஜ்' கீர்த்தனைகளை யெல்லாம்—நல்ல
தேவாமிர்த மாய்க் கொள்ளுந் தாத்தா.
குறுந்தொகை யெனும் நூலை—நமக்குக்
குறுகிய காலத்தில் பதிப்பித்துத் தந்த தாத்தா 11.

நறுந்தமிழ் நூற்களை யெலாம்—இந்த
நாட்டில் மலிய வைத்த தாத்தா
கலைமகள் விருந்திற் கேற்ற தாத்தா—தமிழ்க்
கட்டுரையிற் சிறந்த தாத்தா 12.

நிலைத்து வளரும்படி தமிழை—இந்த
நிலைமைக்குக் கொண்டு வந்த தாத்தா. 13.

கோபால கிருஷ்ண கோகலே

ஜனனம்—1866

மரணம்—1915

"ஒரு காங்கிரஸ் வாதி"

இப்பொழுது நாம் யாரை மித வாதிகள் என்று சொல்கிறோமோ, அவர்களுக்கு இந்திய தேசிய இயக்கத்தில் ஒரு காலத்தில் செல்வாக்கு இருந்ததென்று சொன்னால் அதற்கு மூல காரணமாயிருந்தவர் கோபால கிருஷ்ண கோகலே தான். 1900ம் வருஷத்திலிருந்து 1915ம் வருஷம் வரை, மிதவாதத் தலைவர்கள் என்று சொல்லப்பட்ட சுரேந்திர நாத் பானர்ஜி, ஸர் பிரோஸிஷா மேத்தா, சங்கரன் நாயர் முதலிய மூத்த வயதினர் பலருக்குக் கௌரவமான ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், கோபால கிருஷ்ண கோகலேக்கு, இவர்கள் அத்தனை பேரும் சேர்ந்து தனியான மதிப்புக் கொடுத்தே நடத்தி வந்தார்கள். காரணம் கோகலேயின் தியாகந்தான். மகாத்மா காந்தி, கோகலேயைத் தமது அரசியல் குருவாகப் போற்றி வந்தார். நாவன்மையிலாகட்டும், சுய நலப்பற்றில்லாமல் எதிர்க் கட்சியினரையும் மயங்க வைக்கும் ஆற்றலிலாகட்டும் கோக

லேக்கு மிஞ்சியவர் அக்காலத்தில் யாரும் கிடையாது.

இவர் 1904ம் வருஷம் காசியில் நடைபெற்ற இருபத்தோராவது காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். அந்தக் காங்கிரஸுக்கு மொத்தம் 758 பிரதிநிதிகள் ஆஜராயிருந்தார்கள். இந்தக் காங்கிரஸானது, என்றுமில்லாத ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூடியது. ஏனென்றால் அப்பொழுது லார்ட் கர்ஸன், இராஜப் பிரதிநிதியாயிருந்து ஆர்ப்பாட்டம் செய்த காலம். இந்தச் சமயத்தில், நாற்பது வயதுகூட ஆகாத கோகலேயிடத்தில் காங்கிரஸ் தலைமைப் பதவி ஒப்புவிக்கப்பட்ட தென்றால் தேசம் அவரிடத்தில் எவ்வளவு மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருக்க வேண்டும்?

மஹாராஷ்டிர தேசத்தில் கோல்ஹாபூருக்கு அருகாமையிலுள்ள ஒரு சிறு கிராமத்தில் 1866ம் வருஷம் கோகலே ஜனனமானார். இவர் பிறந்தது சித்பாவன் பிராமண குடும்பம். சித்பாவன் பிராமணர்கள் தான், பீஷ்வாக்களின் ஆதிக்கம், மஹாராஷ்டிரத்தில் ஓங்கி நின்ற காலத்தில் முக்கியமான உத்தியோகங்களை யெல்லாம் வகித்து வந்தவர்கள். அதனால் பரம்பரையாகவே இவர்களுக்கு அறிவுக் கூர்மையும் நிருவாகத் திறமையும் இருந்து வந்தது. கோகலே பிறந்த குடும்பம் மிகவும் ஏழ்மையானது. இவருடைய தகப்பனார், இவருடைய பாலியத்திலேயே இறந்து விட்டபடியால், இவருடைய மூத்த சகோதரனிடமே இவர் வளர்ந்து வந்தார்.

கோகலே, கோல்ஹாபூரி லிருந்த உயர்தரப் பள்ளிக்கூடத்தில் எப். ஏ. பரீட்சையில் தேறி விட்டு, பின்னர் பம்பாய் வந்து, எல்பின்ஸ்டன் காலேஜில் சேர்ந்தார். காங்கிரஸ் தலைமைப் பீடத்தை அலங்கரித்த பலரும் இன்னும் பல தேசாபிமானிகளும் இந்த எல்பின்ஸ்டன் காலேஜில் படித்தே தேறி யிருக்கிறார்கள். கோகலே இந்தக் காலேஜில் தமது 18வது வயதில் தேறினார். உடனே, பூனாவிலுள்ள இங்கிலீஷ் ஸ்கூலில் ஓர் ஆசிரியர் வேலை கிடைத்தது. இது தான் இப்பொழுது பெர்குஸன் காலேஜாக பிரசித்து பெற்று விளங்குகிறது. அந்தக் காலத்தில் மேற்படி பள்ளிக்கூடத்தில் சிப்ளங்கர், ஜோஷி, அகர்கார், ஆப்டே, திலகர் முதலிய அறிஞர்கள் ஆசிரியர்களாயிருந்தார்கள். இவர்கள் ஆசிரியர்களாக உத்தியோகம் பார்த்ததோடு, சமூகத் தொண்டும் தேசத் தொண்டும் கூடவே செய்து வந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து கோகலேயும் உழைத்து வந்தார். மாதம் இவருக்கு 50 ரூபாய்தான் சம்பளம். இவர் கணிதம், சரித்திரம், பொருளாதாரம் ஆகிய மூன்று பாடங்களுக்கும் ஆசிரியராயிருந்தார். இவரிடத்தில் மாணாக்கர்களுக்கு விசேஷமான பிரீதியும் மதிப்பும் இருந்தது. இவருடைய கூர்மையான அறிவைக் கண்டு, பம்பாய் சர்வ கலாசாலை அதிகாரிகள் இவருடைய 25-வது வயதிலேயே இவரை சர்வ கலாசாலை அங்கத்தினராக்கினார்கள்.

மஹாராஷ்டிர தேசத்தில் அப்பொழுது பிரசித்தி வாய்ந்திருந்தவர் மஹாதேவ கோவிந்த ரானடே. இவர் சிறந்த தேசிய வாதி. பம்பாய் ஹைகோர்ட்டில் நீதிபதியா யிருந்தவர். இவருக்கும் கோகலேக்கும் 1887ம் வருஷம் ஒரு நாள் சந்திப்பு உண்டா

யிற்று! அந்த நாளை எப்பொழுதும் புனித நாளாகக் கொண்டாடி வந்தார் கோகலே. ரானடேயை, கோகலே தமது குருவாகக் கொண்டார். அவருக்கும், தமக்குப் பிடித்தமான ஒரு சிஷ்யன் அகப்பட்டதைக் கண்டு பெருமை கொண்டார். தவிர, தமது சிஷ்யனை உலகத்திற்கு உபகாரியாக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார். அந்தக் காலத்தில் ரானடே, சர்வஜனிக சபை என்றதொரு பொது நலச் சங்கத்தை ஸ்தாபித்திருந்தார். இதிலே கோகலேயும் சேர்ந்து, தேச சேவைக்குத் தம்மைப் பரிபக்குவப் படுத்திக் கொண்டார். மேற்படி சபையானது, ரானடேயின் முயற்சியால் 'க்வார்டர்லி ரெவ்யூ' என்ற ஒரு பத்திரிகையை வெளியிடத் தொடங்கியது. அதற்கு கோகலே ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார். மற்றும் 'டெக்கான் எடுகேஷனல் சொஸைட்டி' என்ற ஸ்தாபனத்திற்கு இவர் சிறிது காலம் காரியதரிசியாயிருந்து சிரத்தையுடன் வேலை பார்த்தார். தவிர, பூனாவிலிருந்து வெளியான 'சுதாரக்' என்ற ஆங்கிலோ—குஜராத்தி வாரப் பத்திரிகைக்கும் இவர் ஆசிரியராயிருந்தார். 1895ம் வருஷம் பூனாவில் காங்கிரஸ் நடைபெற்ற போது அதற்குப் பொதுக் காரியதரிசியாக இருந்து வேலை பார்த்தார். இங்ஙனம் பொது வேலைகளில் அதிகமாக ஈடுபட்டு வந்த காலத்திலும் இவர், தமது சுய முயற்சியில் சிறிது கூடப் பின்னடையவில்லை. அதாவது, ரானடேயின் விருப்பப்படி இவர், இந்தியாவின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். அது சம்பந்தமாகப் பல நூல்களை ஆராய்ச்சி செய்து வந்தார். இவருடைய பொருளாதார நிபுணத்துவத்தைக் கண்டு, இந்தியாவின் வரவு செலவு இனங்களைப் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட வெல்பி கமிஷன் முன்னர் சாட்சியங் கொடுக்குமாறு அனுப்பப்பட்டார்.

இதன் பிறகு இவர் பம்பாய்ச் சட்டசபையில் ஓர் அங்கத்தினராக நியமனம் செய்யப் பெற்று அங்குத் தமது நாவன்மையையும் தேச பக்தியையும் புலப்படுத்தினர். பின்னர் 1905ம் வருஷம் இவர் இந்தியா சட்ட சபை அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டார். அந்தக் காலங்களில் இராஜப்பிரதிநிதியே, சட்ட சபைத்தலைவராக இருப்பது வழக்கம். கோகலே, சட்ட சபையில் அங்கத்தினரான பிறகு, இவரிடத்தில் லார்ட் கர்ஸனுக்கு ஒருவித மதிப்பு ஏற்பட்டு விட்டது. சட்ட சபையில் இவர் எழுந்து பேச நின்றால் அரசாங்க அங்கத்தினர்களும் ஐரோப்பிய அங்கத்தினர்களும் அப்படியே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பர். இவர் பேசுவது வெறும் சொல்லடுக்காக இராது. ஒவ்வொன்றுக்கும் ஆதாரம் எடுத்துக் காட்டுவார். புள்ளி விவரத்தோடு பேசினாலும் யாருக்கும் எவ்வித சலிப்பும் ஏற்படாது. சிறப்பாக வரவு செலவு விவாதத்தின் போது இவர் கலந்து கொண்டு பேசும் பேச்சுகளைக் கேட்பதற்கென்று அநேக பிரமுகர்கள் சட்ட சபை மண்டபத்தில் வந்து கூடுவார்கள். கல்வி விஷயங்களில் இவர் அதிகமான சிரத்தை எடுத்துக் கொண்டார்.

காங்கிரஸின் ஆரம்ப தசையிலிருந்து அதன் தொண்டில் இவர் ஈடு

பட்டிருந்தார். ஒவ்வொரு காங்கிரஸுக்கும் இவர் ஆஜராயிருந்து முக்கியமான தீர்மானங்களைப் பற்றிப் பேசுவார். அநேக காலம், இவர் காங்கிரஸின் பொதுக் காரியதரிசியாயிருந்தார். 1905ம் வருஷம் இவர், இந்தியாவின் சார்பாக இங்கிலாந்தில் பிரசாரஞ் செய்யும் பொருட்டு காங்கிரஸினால் அனுப்பப் பெற்றார். சுமார் பதினைந்து தினங்களில் 45 பிரசங்கங்கள் செய்தார். அநேக பத்திரிகைகளுக்கு இந்தியாவைப் பற்றிக் கட்டுரைகள் எழுதினார். பார்லிமெண்ட் அங்கத்தினர் பலரையும் பேட்டி கண்டு பேசினார்.

1907ம் வருஷம் சூரத்தில் பிளவு ஏற்பட்ட பிறகு, இவர் மிதவாதக் கட்சியின் தலைவராயிருந்து காங்கிரஸை நடத்தி வைத்தார். தீவிரவாதிகளென்று அழைக்கப்பட்டவர்கள் கையில் அப்பொழுது காங்கிரஸ் செல்லவில்லையென்றால் அதற்கு இவர்தான் காரணம்.

'காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் நடத்திக்கொண்டிருந்த காலத்தில், இவர் அதற்கு இந்தியாவில் கிளர்ச்சி செய்து பெரிய ஆதரவு தேடிக் கொடுத்தார். பின்னர் இவரே தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று காந்தியடிகளுக்கு உற்சாக மூட்டினார்.

இந்திய ஊழியர் சங்கத்தை இவர் ஸ்தாபித்து அதன் மூலம் அநேக தேசத் தொண்டர்களைச் சிருஷ்டி செய்து கொடுத்தார். மாதம் ஐம்பது ரூபாய் வாழ்க்கைச் செலவுக்காகப் பெற்றுக் கொண்டு தியாகமே உருவெடுத்தாற் போலிருந்து தமது ஆயுள் பரியந்தம் தேச சேவை செய்து வந்த இவரை பாரத தேசம் எப்படி மறக்க முடியும்?

இவர் 1915ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19ந் தேதி காலமானார். இவரைப்பற்றி ஒரு கவிஞர் பாடிய பொழுது, 'பாரத தேசத்தின் பசுந் தளிர், மஹாராஷ்டிரத்தின் ரத்தினம், தேச பக்தர்களின் சிரோமணி மறைந்து விட்ட' தென்று கூறினார்.

கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டு பிடித்தான். வாஸ்தவம். அவனுக்கு இப்போழுது பேரும் புகழும் நிறையக் கிடைக்கிறது. ஆனால் இவன் ஆரம்பத்தில் எவ்வளவு கஷ்டப் பட்டான் தெரியுமா? இவன் அமெரிக்காவைக் கண்டு பிடித்து விட்டுத் திரும்பி வந்து கூட, இவனைப் பலரும் புறக்கணித்தனர். இவன் கடைசியில், வயிற்றுக்குக் கூட போதிய ஆகாரமில்லாமல் ஒரு குடிசையில் தனியனாக மரணமடைந்து போனான். ஆதலின் உலகத்திற்காக உழைப்போர், உலகத்தின் மதிப்பையோ, அவ மதிப்பையோ பொருட் படுத்தக் கூடாது.

ராணி துர்க்காவதி

—சொக்கலிங்கம் பிள்ளை

"ஜோதி"யின் சுடர் 2—கதிர் 5ல் ராணி துர்க்காவதி என்ற ஒரு சரித்திரக் கட்டுரை வெளி வந்தது. அதே சரித்திரக் கதையை, சில வித்தியாசங்களுடன் அன்பர் சொக்கலிங்கம் பிள்ளை எழுதியனுப்பி யிருக்கிறார். அதனை இங்கு வெளியிடுகிறோம்.

மூகல் சக்கரவர்த்தி அக்பர் அவர்களை எல்லாரும் அறிவார்கள். அவர் சுமார் ஐம்பது வருஷங்கள் அரசாண்டார். சக்கரவர்த்தியா யிருந்தாலும் அவர் இந்துக்களின் மேல் ரொம்ப அன்பு வைத்திருந்தார். இந்துக்களும், அவருக்கும் அவருடைய ராஜ்யம் பெருகுவதற்கும் பெரிய உதவி செய்தார்கள்.

அக்பர் காலத்தில் மத்ய இந்தியாவில், துர்க்காவதி என்ற பெயருடைய ஒரு ராணி அரசு செலுத்தி வந்தாள். அவள் அதிரூபவதியாயும் குணவதியாயும் இளமையி லிருந்தே பெரிய வீரவதியாகவும் இருந்தாள். அவளுடைய அழகையும் இணையற்ற குணங்களையும், துணிவையும் கேள்விப்பட்ட தல்பத்ஷாஹ் என்ற பெயருடைய ஒரு ராஜகுமாரன், அவளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினான். ஆனால் துர்க்காவதியின் பிதா அதற்குச் சம்மதப்படவில்லை. பிறகு துர்க்காவதி தனது பிதாவின் விருப்பத்திற்கு மாறாக அவனை விவாகம் செய்து கொண்டாள். ஆனால் விவாகமாகி 3, 4 வருஷத்திற்குள் விதவையாய் விட்டாள். அப்பொழுது 3 வயதான ஆண் குழந்தை யிருந்தது. தானே குழந்தையையும் நன்று போஷித்துக் கொண்டு ராஜ்யத்தையும் பராமரித்துக் கொண்டு வந்தாள்.

மஹாராணி துர்க்காவதி தன்னுடைய பிரஜைகளை ரொம்ப அன்பாக நடத்தினாள். பிரஜைகளும் அவளை உயிரும் உடலும்போல் நேசித்தார்கள். அவளுக்காக உயிர் விடக்கூடத் தயாராக இருந்தார்கள். அவளுடைய ராஜ்யத்தில் எல்லாரும் சுகமாயிருந்தார்கள். மஹாராணியினுடைய சுதந்திரகுண விசேஷத்தால் அரண்மனைக் கஜானாவும் தனபாக்கியத்தால் நன்று நிரம்பி யிருந்தது.

சில மூகல் சிற்றரசர்களிடத்தில் துர்க்காவதியைப் போன்ற கீர்த்தி, ஐஸ்வர்யம் பார்க்க முடியாதிருந்தது. அவர்கள் அவள்மேல் பொறாமை கொண்டார்கள். அவர்கள் துர்க்காவதியை எதிர்க்க அக்பரிடம் உத்தரவு கேட்டார்கள். ஆனால் சக்கரவர்த்தி ஒரு விதவைப் பெண் மீது கொடுமை செய்ய விரும்ப வில்லை.

ஆனால் ஆஸப்கான் என்ற பெயருடைய ஒருவன் பிலே தந்திரசாலியா

யிருந்தான். அவன் எப்படியோ சக்கரவர்த்தியின் மனதை மாற்றி ராணி துர்க்காவதியை எதிர்க்க அனுமதி வாங்கி விட்டான்.

அவன் நினைத்ததாவது, 'துர்க்காவதி ஒரு பெண். அவளுடைய ராஜ்யமோ சிறிது. அவள் எப்படி தன்னுடன் சண்டை போட முடியும்.' இதை நினைத்துக்கொண்டு கொஞ்சம் சேனைகளுடன் துர்க்காவதியினுடைய கோட்டையை வளைந்து கொண்டான்.

இந்தச் செய்தி முதலிலிருந்தே துர்க்காவதி கேட்டு வைத்திருந்தாள். அவளுக்குச் சண்டை செய்ய வேண்டியதைத் தவிர்த்து வேறு உபாயம் தென்பட வில்லை. தன்னுடைய சேனைகளுடன் முகலாயர்களை எதிர்த்தாள். ரொம்ப மும்முரமாக சண்டை நடந்தது. துர்க்காவதியின் பராக்கிரமம், யுத்த நிபுணத்வத்தின் முன்பு சத்துரு எதிர்த்து நிற்க முடியவில்லை. சத்துருவின் சேனைகள் யுத்தகளத்திலிருந்து ஓடலானார்கள். சேனைத் தலைவனை ஆஸப்கானும் தனது உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடினான்.

தோற்றுப்போன காரணத்தால் ஆஸப்கான் மிகவும் வெட்கமுடையவனானான். அவன் துர்க்காவதியைப் பழி வாங்க ஏராளமான சேனைகளைக் கூட்டிக் கொண்டு மௌனமாக வந்து திடீரென்று எதிர்த்தான். ராணி துர்க்காவதிக்கு இந்தச் செய்தி தெரியவந்தது. அவள் மிகவும் அறிவாளியாகவும் ராஜதந்திரம் தெரிந்தவளாகவும் இருந்தாள். அவளும் மிகப் பலமாகச் சண்டைக்கு தயார் செய்தாள். தான் முகலாயர்களினுடைய அரசாளுகைக்கு முன் சரிசமத்வமாய் நிற்பதை, தன்னுடைய உயிர் அல்லது ராஜ்யத்துடன் இழக்க நேரு மென்று அறிந்திருந்தாள்.

தன்னுடைய குழந்தையை முதுகில் கட்டிக்கொண்டு கையில் உருவிய கத்தியுடன், அவள் யுத்த மைதானத்தில் பிரவேசித்து விட்டாள்.

இந்த இடத்தில் ஒரு விஷயம் அதாவது சண்டைக்குப் போகும் வீரப் பெண், குழந்தையை ஏன் கொண்டு சென்றாள்? அப்படி முதுகில் குழந்தையுடன் எப்படி யுத்த களத்தில்—வேகமாகக் கத்தி வீச முடியும் என்பது? புருஷனை இழந்த பெண், ஆனால் வீரப் பெண், ராஜ்யத்தைப் பராமரிக்கும் பெண், தன்னுடைய குழந்தையின் கதியை அல்லது அதன் வளர்ப்பை நன்கு அறிந்திருந்தாள் என்பதே. இரண்டு சேனைகளுக்கும் கோரமான சண்டை நடந்தது. ராணி கையில் கத்தியை எடுத்துக் கொண்டு யுத்த களத்தில் சத்துருக்களின் இடையில் யுத்த சாதுர்யத்தைக் காண்பித்துக் கொண்டு நான்கு புறமும் மின்னலைப் போல் மின்னிக் கொண்டிருந்தாள். அந்த தினத்தின் சண்டையில், வீராங்கனையான துர்க்காவதி, கணக்கிலடங்காத சத்துருக்களைச் சங்காரம் செய்தாள். ஆஸப்கான் மிகவும் கெட்டு, தோற்று யுத்த களத்தை விட்டு ஓடி விட்டான்.

நன்று, ஆஸப்கான் இப்படி ஒரு பெண்ணால் அவமானப் பட்டு எப்படி சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க முடியும்? துர்க்காவதியை யுத்தத்தில் வெற்றி கொள்வது, தன்னுடைய வலிமைக்கு மேற்பட்ட விஷயம் என்பது நன்கு தெரிந்து விட்டது.

ஆகையால் வஞ்சித்து, துர்க்காவதியைத் தோற்கடிக்க அவன் ஒரு வஞ்சனை செய்தான்.

ஆஸப், நிறைந்த பணங்களைக் கொடுத்து ராணியின் சைனியங்களைத் தன் பக்கம் சேர்த்துக் கொள்ள தூது அனுப்பினான். தூதர்கள் சைனியங்களுக்கு லஞ்சம் கொடுத்து விதவிதமான பேராசைகளைக் காண்பித்து ராணியினுடைய அநேக சேனைத் தலைவர்களைத் தங்கள் வசம் செய்து விட்டார்கள்.

அவளுடைய ராஜ்யத்தில் கலகம் ஏற்படலாயிற்று. மக்களின் பேராசையாலும் சேனைகளின் கொடுமையாலும் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஆஸப், தன்னுடைய சூழ்ச்சியில் வெற்றி அடைந்தான். எந்த ராஜ்யத்தை அவன் ஆயிரக்கணக்கான போர் வீரர்களின் ரத்தம் சிந்தி ஜயிக்க முடியாமலிருந்ததோ, அதை ஜயிப்பது இப்பொழுது அவனுடைய இடது கை விளையாட்டாய் விட்டது.

இங்கே ராணியும் தன்னுடைய அன்பான பிரஜைகளின் கெட்ட நிலைமையைப் பார்த்து ரொம்பவும் துக்கத்தில் ஆழ்ந்தாள். சத்ருக்களை வெற்றி பெறுவது கடினமாயிருந்தது. ஆகையால் சண்டை செய்து உயிரை விடுவதைத் தவிர்த்து, அவ்வீரப் பெண்ணுக்கு வேறு உபாயம் தென்படவில்லை.

அவள் தன்னுடைய ராஜ பக்தியுள்ள சில யுத்த வீரத்தலைவர்களை அழைத்துக் கொண்டு யுத்தகளத்தில் வந்து உறுதியாக நின்றாள். இப்பொழுது கூட அவளின் வீரம் கொஞ்சம் கூடக் குறையவில்லை. அவளுடைய வீரர்களும் மனம் வைத்து எதிரிகளுடன் சண்டை செய்தார்கள். துர்க்காவதிக்கு தன்னுடைய குமாரன் மிகவும் காயப் பட்டானென்று செய்தி கிடைத்தது. ஆனால் அவள் அதைக் கொஞ்சமும் பொருட் படுத்தாமல் கடைசி வரை சண்டை செய்து கொண்டிருந்தாள். அவளுடைய எல்லா வீரர்களும் சண்டையில் தங்கள் உயிரைக் கொடுத்து விட்டார்கள்.

எப்பொழுது துர்க்காவதி, எதிரிகளிடமிருந்து தப்பமுடியாது, சிறைப் பட்டு அக்பருக்கு முன்னால் தலை வணங்க வேண்டும் என்று கண்டு கொண்டாளோ, அப்பொழுது யுத்த களத்திலேயே தற்கொலை செய்து கொண்டாள். புண்யவதி துர்க்காவதி! இவளுடைய வீரமும் துணிவும் ஆண் மக்களுக்காகவும் கூட, சிறந்ததாக அல்லது வேண்டுவதாக இருக்கிறது.

ஜூலியஸ் ஸீஸர்

(ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகம்)

—வி. தேவாச்சாரியன்

(உரிமை காப்பிரைட்)

அங்கம் 1

களம் 3

காஷியஸ்:—அவசரம் அவ்சரமாகக் கீர்த்தியை யடைய வேண்டுமென்று விரும்புகிறவர்கள் தங்களுக்காதாரமாக எவ்வளவு அற்பமானவற்றைப் பற்றுகிறார்கள்! ரோம் எவ்வளவு கேவல ஸ்திதிக்கு வந்துவிட்டது! இப்பேர்ப்பட்ட அற்பர்களும் பிரகாசிக்கும்படி இடங்கொடுத்த ரோம், எவ்வளவு கேவலமானதாகி விட்டது! ஆ! துயரமே! என்னை எங்கே கொண்டு போய் தள்ளப் பார்க்கிறாய்! மனமார அடிமைத்தனத்தில் வாழ விரும்பும் ஒருவன் முன்னல்லவா நான் இந்த வார்த்தைகளைப் பேசுகிறேன்! இருக்கட்டும். இவ் வார்த்தைகளால் வரும் பயனையும் நான் அனுபவிக்க வேண்டியவனாக விருப்பேன் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், நான் முஸ்திபுடையவனாக விருக்கிறேன்; எனக்கு இடையூறுகளைப் பற்றி எப்பொழுதும் லட்சியமே இல்லை.

காஸ்கா:—அடிமைத்தனத்தைக் களைந்தெறிய விரும்பும் காஸ்காவிடம் நீ பேசுகிறாய் என்பதை மறந்துவிடாதே. அத்தகைய நான், எதிரில் ஒன்றை முகஸ்துதிக்காகப் பேசி, பின்னால் துன்பத்தை விளைவிப்பவனல்ல. கைபோட்டுத் தருகிறேன். (கை அறைதல்) நமக்கு நேர்ந்திருக்கும் துன்பத்தைப் போக்கிக் கொள்ள என்னென்ன பிரயத்தனங்கள் செய்ய வேண்டுமோ, அவைகளைச் சுறுசுறுப்போடும் விரைவாகவும் செய். இம் முயற்சியில் நான் மற்றவர்களைவிட ஒரு அடி முன்னே இருப்பேன்.

காஷி:—ஒரு பேரம்படிந்தது! காஸ்கா! நான் 'ஏற்கனவே சில பிரபலஸ்தர்களுடன் இவ் விஷயத்தைக் குறித்துப் பிரஸ்தாபித்து, அதனால் நேரிடும் சில கண்யமான கஷ்டநிஷ்டூரங்களையும் விளக்கியிருக்கிறேன். இதுகாலை அவர்கள் எனக்காக பாம்பி நாடகசாலைக் கருகில் காத்துக் கொண்டிருப்பார்கள். இந் நள்ளிரவும் மனித சஞ்சார மற்று, வேறு சப்தமில்லாம லிருக்கிறது. நாம் மேற் கொண்டிருக்கும் காரியத்தில் சம்பவிக்க விருக்கும் கொலை, கொள்ளை முதலியவைகளின் அறிகுறியாகவே, வானத்திலும், இடியும் மின்னலும் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

காஸ்:—சற்று மறைவாக இரு. சப்தம் போடாதே. நம்மை நோக்கி யாரோ ஒருவர் வேகமாக வருகிறார்.

காஷி:—அவன் சின்னா. அவனுடைய நடையிலிருந்தே அவன் சின்னா னென்று எனக்குத் தெரியும். அவன் ஒரு நண்பன்.

(சின்னா வருதல்) சின்னா! எங்கே இவ்வளவு அவசரமாக?

சின்னா:—உன்னைத் தேடத்தான். யார் அங்கே இன்னும்? மெடலஸ் ஸிம்பரா?

காஷி:—இல்லை. அவன் காஸ்கா. நம்முடைய ஏற்பாடுகளை யெல்லாம் அறிந்தவன்தான்.

சின்னா:—அதைக் குறித்து மிக்க சந்தோஷம். இன்றை இரவு என்ன இவ்வளவு விபரீதமாக விருக்கிறது! நம்மில் சிலர் சில அபூர்வமான காட்சிகளையும் காண நேர்ந்தது.

காஷி:—எனக்காக அவர்கள் அங்குக் காத்துக் கொண்டிருக்க மாட்டார்களா? சொல்லு.

சின்னா:—ஆம். நிச்சயமாக உனக்காகத்தான் அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். காஷியஸ்! எப்படியாவது நீ புரூடஸை நம்முடைய கட்சியில் சேர்த்தால்—

காஷி:—அதைப்பற்றி நீ கவலைப் படாதே. இதோபார். இந்தக் கடிதத்தை புரூடஸ் வீட்டிறகு எடுத்துக் கொண்டுபோ. அவனுடைய கண்ணுக்குப் படும்படி, அவன் பேட்டி கொடுக்க உட்காரும் நாற்காலிக்கருகில் விழும்படி, ஜன்னல் வழியாக உள்ளே போடு. இதை அந்த கீர்த்தி பெற்ற ஜென்னியஸ் புரூடஸின் உருவச் சிலையில் கட்டி விடு. அவைகளை யெல்லாம் கவனமாகச் செய்து விட்டு பாம்பி நாடகக் கொட்டகையண்டை வா. நாங்கள் அங்கேயே இருக்கிறோம். டிஷியஸ் புரூடஸ்ஸும், டிரிபோனியஸும் அங்கே இருக்கிறார்களா?

சின்னா:—மெடல்லஸ்ஸிம்பரைத் தவிர மற்றவர்களெல்லாரும் அங்கே இருக்கிறார்கள். அவன் உன்னைத் தேடிக் கொண்டு உன் வீட்டிற்குப் போயிருக்கிறான். நல்லது; நான் போய் வருகிறேன். நீ சொன்ன படியே எல்லாவற்றையும் கவனமாகச் செய்து விட்டு வருகிறேன்.

காஷி:—செய்து விட்டு, பாம்பி கொட்டகைக்கு அவசியம் வந்து சேரு.

(சின்னா நிஷ்கிரமித்தல்)

காஸ்கா! வா. நாமிருவரும் பொழுது விடிவதற்குள் புரூடஸை அவன் வீட்டிலேயே சந்திக்க வேண்டும். அவன் ஏற்கனவே முக்கால் வாசி நம் பக்கத்தில் சேர்ந்தவன் தான். இன்னும் ஒரு முறை நாம் சந்தித்துப் பேசினால் பூராவும் அவன் நம்முடைய கட்சிதான்.

கா:—ஹோ! அவன் ஜனங்களிடையில் நல்ல மதிப்பைப் பெற்றிருக்கிறான். நம்மிடத்திலுள்ள தோஷங்களெல்லாம், அவன் நம்முடன் சேருவதாலும், நமது திட்டத்தை அங்கீகரிப்பதாலும் குணமானதாகவும், போற்றத்தக்கதாகவும் ஆகி விடும்.

காஷி:—அவனைக் குறித்தும், அவனுடைய சகாயம் எவ்வளவு இன்றியமையாதது என்பதைக் குறித்தும் நீ நன்றாக ஆராய்ந்திருக்கிறாய். நேரமாகி விடாது. வா போவோம். பொழுது விடிவதற்குள் அவனைச் சந்தித்துப் பேசி நாம் திடப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(இருவரும் நிஷ்கிரமித்தல்)

அங்கம் 2

களம் 1

இடம்—புரூடஸ் வீட்டுத் தோட்டம்

(புரூடஸ் பிரவேசித்தல்)

புரூடஸ்:—டேய்! காஷியஸ்! ஹா! வானத்தைப் பார்த்து நேரத்தைத் தெரிந்து கொள்ள முடியவில்லையே! என்ன இது! இப்படி அயர்ந்து தூங்கி விட்டேனே! டேய்! காஷியஸ்! எங்கடா இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

(காஷியஸ் பிரவேசித்தில்)

லூஷியஸ்:—எஜமான்! கூப்பிட்டீர்களா என்ன?

புரூடஸ்:—டேய்! படிக்கும் அறையில் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு என்னைக் கூப்பிடு.

லூஷி:—எஜமான்! அப்படியே! (நிஷ்கிரமம்)

புரூ:—(தனியே) அது, அவனைக் கொன்றுதான் ஆகவேண்டியிருக்கிறது. என் சம்பந்தப்பட்ட மட்டில் அவனை வெறுப்பதற்கு யாதொரு சொந்த காரணமுமில்லை. ஆனால், பொது நலத்தை யுத்தேசித்துத்தான். அவனுக்கு முடிசூட்டிக் கொள்ளுவதில் அதிக ஆவலிருக்கிறது. அப்படி அவன் முடிசூட்டிக் கொண்டால் அவனுடைய போக்கு எப்படி மாறுமோ என்பதுதான் எனக்குப் பெரிய யோசனையாக விருக்கிறது. பட்டப் பகலில் பாம்புக்கு விஷம் அதிகம். ஆகையினால், நாம் அவன் விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவனுக்கு முடி சூட்டுவதாகவே வைத்துக் கொள்வோம்.—அது எப்படியும் நடந்துவிடத்தான் போகிறது.—பிறகு—நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன்—நாம் அவனுக்கு ஒரு அதிகாரம் கொடுத்த மாதிரியாகி விடுகிறது. அந்த அதிகாரத்தைக் கொண்டு அவன் இஷ்டப்படி ஆடலாம். ஹோதாவானது, தயை—தாட்சண்யம் முதலானவைகளைப்புறக்கணிக்கக் காரணமாக விருக்குமானால் அது துர்வினியோகப் படுத்தியதாகவே ஆகும். உண்மையைப் பேசுவோமானால், ஸீஸர் எப்பொழுதும் காரணங்களுக்கொவ்வாத நடத்தைக்குப்பிராதான்யம் கொடுத்ததேயில்லை. ஆனால், உலகத்தில், சாமான்ய அனுபவம் என்ன வென்றால், ஆரம்பத்தில் அடக்கம் ஒடுக்கம் முதலியவைகளெல்லாம் உயர்ந்த அந்தஸ்துக்கு ஏறுவதற்கான படிகளென்பதும், ஏறுபவன் மேலேயே நோக்குவதும், உன்னதபதவியை அடைந்ததுடன் தன்னை முன்னுக்குக் கொண்டு வந்த படிகளை மறந்து ஆகாயத்தை நோக்குவதும், மற்றவைகளைப் புறக்கணிப்பதுந்தான். ஸீஸரும் அந்த நிலைமைக்கு வரலாம். ஆகையினால், நாம், அதை ஆரம்பத்திலேயே தடுத்து விடுவோம். நிலைமையும் அதற்கனுகுண மாகத்தானிருக்கிறது. அவன் இப்பொழுது நடந்து கொள்ளும் மாதிரியிலிருந்தே இன்னும் போகப் போக சம்பவங்கள் எவ்வாறிருக்குமென்பதை இப்படியெல்லாம் ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் நாம் இப்பேர்ப்பட்டவர்களையெல்லாம் விஷப் பூச்சிகளாகக் கருதி முளையிலேயே நசுக்கி விட வேண்டும்.

(லூஷியஸ் பிரவேசிக்கிறான்)

லூஷி:—அறையில் விளக்கை ஏற்றி வைத்திருக் கிறேன். விளக்கைக்

கொளுத்துவதற்கு சக்கிக் கல்லைத் தேடப் போன விடத்தில் இந்தக் கடிதம் கீழே கிடக்கக் கண்டேன். நான் படுக்கப் போகும் பொழுது அங்கே ஒரு துண்டு காகிதம் கூட காணப் பட வில்லை. (கடிதத்தை புரூடஸிடம் கொடுக்கிறான்)

புரூ:—பையா! போய் படுத்துக் கொள். இன்னும் பொழுது விடிய வில்லை. நாளைய தினம் மார்ச்சு 15 தேதி அல்லவா?

லூஷி:—எனக்குத் தெரியாதே.

புரூ:—பஞ்சாங்கத்தைப் பார்த்து வந்து தெரிவி.

லூஷி:—எஜமான்! அப்படியே. (நிஷ்கிரமம்)

புரூ:—(தனக்குள்) 'நட்சத்திரத்தின் ஒளியைக் கொண்டே இக்கடிதத்தைப் படித்து விடலாம் போலிருக்கிறது.

(கடிதத்தைப் பிரித்துப் படிக்கிறான்)

'புரூடஸ்! நீ கிஞ்சித்தேனும் விஷயங்களைக் காதில் போட்டுக் கொள்ளாதவனாக விருக்கிறாய்; ஆயத்தமாகு; உன்னுடைய பலத்தையும் செல்வாக்கையும் குறித்து ஒரு முறை யோசித்துப் பார்; ரோம் இப்படியும்...........; தேசத்தின் நிலைமையைக் குறித்து பஹிரங்கமாகக் கண்டனஞ் செய்; காரியத்திலிறங்கு; ஏதாவது பரிகாரத்தைத்தேடு புரூடஸ்! நீ பராமுகமாக விருக்கிறாய். இது அடாது. வீரங்கொண்டு எழுந்திரு;

இந்த விஷயத்தில் நான் தலையிட்டது முதல் இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் காதில் விழுவது சகஜமாகி விட்டது. 'ரோம் இப்படியும்.......' என்றெழுதி வாக்கியம் முற்றுப் பெறுமல் விடப்பட்டிருக்கிறதே. அதை நான், 'ஒருவன் ஆட்சியின் கீழ் நிணறலாமா' என்று கூட்டி முடித்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.' அட! ரோம ராஜ்யமே! டார்க்வின் (Tarquin) தன்னை அரசனென்று சொல்லிக் கொண்ட காலத்து, என் மூதாதையர்கள் அவனைரோமிலிருந்து விரட்டியடித்தார்கள். இப்பொழுதோ நான், அப்படித் தன்னை ஆக்கிக் கொள்ள விரும்பும் ஒருவனை அடக்க வேண்டியதின் நிமித்தம், பொது ஜன மனப் பான்மை அவனுக்கு விரோதமாக விருப்பதை எடுத்துக் காட்டவும் அதற்கான காரியத்திலிறங்கவும், பரிகாரந்தேடவும் அழைக்கப்படுகிறேன். இருக்கட்டும். ஹா! ரோமா ராஜ்யமே! நான், உன் விடுதலையினிமித்தம் காரியத்திலிறங்கவும் பரிகாரந் தேடவும் முற்பட்டு, அது பலிதமாகுமானால் உன் கோரிக்கை நிறைவேறி விட்டதென்றே நிச்சயமாகச் சொல்லுவேன்.

(லூஷியஸ் பிரவேசிக்கிறான்)

லூஷி:—எஜமான்! மார்ச் பிறந்து பதினைன்கு நாட்களாகி விட்டன.

(வெளியிலிருந்து யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது)

புரூ:—சரி. கதவை யாரோ தட்டுவது போல் காணப் படுகிறது. வாயிற்படியண்டை போய்ப் பார்.

(லூஷியஸ் நிஷ்கிரமித்தல்)

(தனக்குள்) ஸீஸரைக் குறித்து நான் ஏற்கனவே கொண்டிருந்த அபிப்பிராயத்திற்கநுகுணமாக காஷியஸ் பேசிய நாள் முதல் எனக்குத் தூக்க மென்பதே இல்லாமல் போய்

விட்டது. மனதில் ஓர் எண்ணம் தோன்றுவதிலிருந்து, அது காரியமாகப்பரிணமிக்கும் காலம் வரையிலுள்ள கால இடையீட்டை ஓர் பைசா சகதியாகவே எண்ண வேண்டியிருக்கிறது. ஞானேந்திரியத்திற்கும் கர்மேந்திரியத்திற்கும் இடையில் பலத்த விவாதம் நிகழ்கிறது. அப்பொழுது மனிதனிடம் தோன்றும் குழப்பமே ஓர் இராஜ்ஜியத்தில் ஏற்படும் உள் நாட்டுக் குழப்பத்திற்குச் சமமாகவே இருக்கிறது.

(லூஷியஸ் பிரவேசித்தல்)

லூஷி :—எஜமான்! கதவைத் தட்டுவது தங்கள் சகோதரர் காஷியஸ்தான். அவர் தங்களைக் காண விரும்புகிறார்.

புரு :—அவன் மட்டில் தனியாக வந்திருக்கிறானா?

லூஷி :—இன்னும் சிலர் அவருடன் கூட வந்திருக்கிறார்கள்.

புரு :—உனக்கு அவர்களை இன்னாரென்று தெரியுமா?

லூஷி :—தெரியாதே! காதுகளை மூடும்படி அணிந்து கொண்டிருக்கும் தொப்பியாலும், முகத்தை மூடிக் கொண்டிருக்கும் முகமூடிகளாலும், அவர்களை இன்னாரென்று என்றால் அடையாளம்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

புரு :—அவர்கள் உள்ளே வரட்டும்.

(லூஷியஸ் வெளியே செல்லல்)

(தனக்குள்) அவர்கள் சகாக்கள் போல விருக்கிறது. அட! சதியாலோசனைக் கூட்டமே! தீமைகள் யாவும் சுயவுருவெடுத்து எதேச்சையாகத் திரியும் இந்த வேளையில் கூடவா, நீ, பஹிரங்கமாக வர வெட்கப்படுகிறாய்! ஆ! அப்படியானால், பகலில், நீ, இதைவிட இருட்டான ஓர் புகலிடத்தை எங்கிருந்து தேடிப் பிடிக்கப் போகிறாய்? சதிக்கூட்டமே! மறைவிடம் ஒன்றையும் தேடாதே. புன்னகை பூக்கும் முகத்திலும், சாந்தமான நடவடிக்கையிலுமே உன் சதியை மறைத்துவை. உனக்கு இயற்கையான முறையில், நீ, சகஜமாக நடந்துகொண்டால், கார் இருள் கூட, அதை மறைப்பதற்கு ஏற்ற இடமாக இராது.

விவசாயிகள் கடன் தீர ஒரு வழி

—"வாதூலன்"

விவசாயிகளின் திருப்திகரமற்ற பொருளாதார நிலைமை இந்தியா பூராவையும் திடுக்கிடச்செய்கிறது. இவர்களது பொருளாதார நிலைமையைச் சீர்திருத்துவதற்குப் பல வழிகளை யோசித்து அவைகள் பல வருஷங்களாகக் கையாளப்பட்டும் வருகின்றன. இதற்காகத் தனிச் சட்டங்களேற் படுத்தி குடியானவர்கள் வருவாய்க்குள் குறைந்த செலவில் வாழுக்கற்றுக் கொடுக்கும்படியான பலவகைக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் விற்படுக்கப் பெற்றன. சிக்கனம், பராசிரியமின்மை முதலானவை ஏற்படலாயின. விவசாயிகளது உழைப்பினுடைய பலனின் பெரும்பாகத்தை எடுத்துச் செல்லும் அபாயமானதும் நெடு நாளானதுமான விவசாயக் கடனுக்கு முதன் முதலாக நிவர்த்தி தேடாத வரை, மற்ற முயற்சிகள் போதுமான பலனைத் தராதென்று தெளிவாயிற்று. இப்படியாக எல்லா மாகாணங்களிலும் ஸமஸ்தானங்களிலும் விவசாயக் கடன் பிரச்னை பெரும் பீதியைக் கொடுக்க ஆரம்பித்தது. இதனை நிவர்த்திப்பதற்கும், கடனைத் தீர்ப்பதற்கும் நில அபிவிருத்திக்காகவும் சாகுபடிக்காகவும், குறைந்தவட்டிக்கு நெடுங்காலக் கடன் வசதிகள் கொடுப்பதற்கும், கூட்டுறவு முறையில் நில அடமான பேங்குகள் நிறுவுவது ஒரு வழி யென்று கருதப்பட்டது.

பரோடா ஸமஸ்தானத்தில் இது சம்பந்தமாக என்ன செய்யப்பட்டதென்பதையும் அதன் பலன்களையும் கவனிப்போம். 1901ம் வருஷத்தில் பிரஜைகளின் குறைகளென்னவென்பதை நன்கு தெரிந்து கொள்ளுவதில் பெயர்பெற்ற மகாராஜா, விவசாயிகளின் கடனைக் கணக் கெடுக்கும்படி உத்தரவிட்டார். அதன்பின் இப்பிரச்னை நன்கு ஆராயப்பட்டு அதனை நிவர்த்தி செய்வதற்கான வழிகளும் ஆலோசிக்கப்பட்டன. 1933ம் ஆண்டில் பரோடா ஸமஸ்தானத்தில் ஏற்பட்ட நில அடமான பேங்கையும் அதன் வேலைகளையும் பற்றிப் பேசுவதற்குமுன் அஃது ஏற்பட்ட விவரங்களை ஆராய்வது நலமெனக் கருதுகிறேன்.

இந்த ஸமஸ்தானத்தில் விவசாயிகள் எவ்வளவு தூரம் கடன் பட்டிருக்கிறார்களென்றறிவதற்கு 1901, 1912, 1918 ஆகிய மூன்று வருடங்களிலும் முயற்சிக்கப்பெற்றன.

1901ம் வருடத்தில் 100-க்கு 60 பேர் கடன்பட்டவர்களென்றும், ஆள் ஒன்றுக்கு ரூபா 460 கடன்பட்டிருக்கிறார்களென்றும் தெரியவந்தது. நிலத்தின் விலையைப் பொறுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும் தொகையில் வித்தியாசமிருந்து வந்தது.

1912ம் வருஷம் கணக்கெடுத்ததிலும் 1919-18ம் வருடத்தில் பரோடா ஸமஸ்தானப் பொருளாதாரக் கமிட்டி செய்த விசாரணையிலும் இக்கடன் அதிகரித்திருப்பதாகத் தெரிய வந்தது:—

மேலே சொல்லிய புள்ளி விபரம் இப்பிரச்னையின் இரண்டு முக்கிய அம்சங்களை விளக்குகிறது.

1. விவசாயிகளின் கடன் தொகை அவர்களுக்கு இருந்து வரும் கடன் வாங்கும் சக்தியைப் பொறுத்தது.

2. விவசாயக்கடன் பிரச்னை பொருளாதார மட்டுமல்லாது சமூகப்பிரச்னையையும் கல்வியறிவையும் சாரும். ஏனென்றால் பொருளாதாரம்மட்டிலுமாயிருந்தால் 1901 முதல் 1925ம் வரையுள்ள இருபது வருட காலத்தில் இத்தொகை எவ்வளவோ குறைந்திருக்கலாம். இக்காலத்தில் விளை பொருள்களின் விலை விவசாயிகளுக்குச் சாதகமாகவே இருந்திருக்கிறது. ஆனால் அவ்விதம் நேரவில்லை. இதற்குக் காரணம் விவசாயிகளின் சிக்கனமற்ற வாழ்வு நிலையையுண்டாக்கக் கூடாதவைகளுக்கும் கடன் வாங்கும் வழக்கமுள்ள விவசாயிகளின் கடன் வாங்கும் பழக்கத்திற்கு லேவா தேவிக்காரர்கள் ஊக்க மூட்டியதுவுமே யாகும்.

இப்பிரச்னையைச் சரியாகச் சமாளிப்பதற்கு ஏற்ற திட்டம் தயார் செய்வதற்குப் பல தடவை முயற்சிக்கப்பட்டது. 13—7—1901ல் மகாராஜா அவர்கள் இப்பிரச்னையை நன்கு ஆராய்ந்து நிவர்த்தி மார்க்கம் கூறுவதற்கு ஒரு கமிட்டி நியமித்தார். இக்கமிட்டியார் அவர்களது யோசனைகளை 1902ல் சமர்ப்பித்தார்களெனினும் அதன் பேரில் நடவடிக்கைகளொன்றும் எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. 1905ல் இன்னும் பொருத்தமான ஒரு திட்டம் வகுக்கும்படி ரெவின்யூ கமிஷனருக்கு அரசரால் உத்தரவிடப் பட்டது. ஆனால் அவரது திட்டம் நடவடிக்கைக்குப் பொருத்த மற்றதா யிருந்ததால் அதுவும் கைவிடப்பட்டது. மறுபடியும் 1911ல் இப்பிரச்னைக்காக மற்றுமொரு கமிட்டி நியமிக்கப்பட்டது. கமிட்டி இதனை நன்கு ஆராய்ந்து நீண்ட காலக் கடனுக்காகவும் குறுகிய காலக் கடனுக்காகவும் மத்திய கூட்டுறவு பேங்கு நிறுவுவதற்குச் சிபார்சு செய்தது. இதன் பேரில் ஸமஸ்தானத்தின் எல்லா ஜில்லாக்களிலும் இவ்வித பேங்குகள் நிறுவப்பெற்றன. விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுப்பதற்காகத் தனியாக பேங்க் ஏற்படுத்துவதற்கு வியாபாரம், கைத்தொழில் டைரக்டரும், 1916ம் வருடத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் ரிஜிஸ்திராருமாயிருந்த ஸ்ரீ நாணுவந்தி என்பவர் ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தார். இத்திட்டம் 1917ல் ஸ்ரீ ஏ. என். தத்தரைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியின் முன் நடவடிக்கையில் கொண்டு வரக்கூடிய யோசனைகள் கூறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வித ஸ்தாபனத்தின் அவசியத்தை கமிட்டி ஒப்புக்கொண்டது. ஆனால் அப்பொழுதிருந்து வந்த மத்திய கூட்டுறவு பேங்குகள் மூலமாகவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் இதனை நடத்த முயற்சிக்கலாமென்று கமிட்டியார் யோசனை கூறினார்கள். சர்க்கார், மத்திய பேங்குகளுக்கு 3½% வட்டிக்கு ரூ 50,000 வரை கொடுப்பதாகவும், அது ஆரம்பச் சங்கங்களுக்கு 5% வட்டி விகிதம் நில அடமானத்தின் பேரில் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுத்துதவ ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் சிபார்சு செய்தது.

ஆரம்பச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு 6% வட்டிக்குமேல் போகக் கூடாதென்றும் பத்து வருஷங்களில் திரும்பக் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்க வேண்டு மென்றும் சொல்லியுள்ளார்கள்.

தனியாக நில அடமான பேங்கு ஏற்படும் வரைக்கும் பரீக்ஷார்த்தமாக இத்திட்டத்திற்கு அநுமதியளிக்கப்பெற்றது. தற்காலிகமாகக் கைவிடப்பட்ட 1916ம் வருடத்திய ஆரம்பத்திட்டம் 1918ம் வருஷத்திற்கும் 1925ம் வருஷத்திற்கும் இடையில் பல திட்டவை சர்க்காருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனல் அப்பொழுதைய அதிக வட்டியை உத்தேசித்தும் இதர அசௌகரியமான நிலைமைகளைக் கருதியும் இதனை நடவடிக்கையில் கொண்டு வர வில்லை. 1924ல், ஸ்ரீ நானுவதியின் தலைமையில் நில அடமான பேங்க் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பெற்றது.

1924ல் இந்தக் கமிட்டியார் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கும் வசதிகளையும், கடன் சுமைகளைப் பற்றியும் நன்கு விசாரணை செய்தார்கள். 1918ல் பரீக்ஷார்த்தமாக அநுமதிக்கப் பெற்றவைகளின் பலன்களையும் நன்கு ஆராய்ந்ததில் ஒரு சில சங்கங்களே அதனை உபயோகப்படுத்திக் கொண்டுள்ளன வென்றும், அத்திட்டத்தின்படி 1918ம் வருஷத்திலிருந்து 1924ம் வருஷம் வரை ஒரு லட்சம் ரூபாய் வரைக்குமே கொடுக்கப்பட்டுள்ள தென்றும் கண்டார்கள். குறுகிய காலக்கடன் கொடுப்பதற்கு வகுக்கப்பட்ட ஸ்தாபனங்களைக் கொண்டு நீண்டகாலக்கடன் கொடுக்க ஏற்பாடு செய்வது போதுமான பலனை யளிக்காதென்று கமிட்டியார் அபிப்பிராயப்பட்டார்கள். ஆகையால் சர்க்கார் சலுகையுடன் நில அடமான பேங்குகள் தனியாக நிறுவப்பட வேண்டுமெனச்சிபார்சு செய்தார்கள்.

அப்பொழுதிருந்த பொருளாதார நிலைமையினுல் இந்தச் சிபார்சின் பேரில் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள இயலவில்லை. 1927ம் வருஷத்தில் பண மார்க்கெட்டு இன்னும் சீர்கெடவே விவசாயிகளின் நிலைமை இன்னும் மோசமாயிற்று. விவசாயக் கடன் சுமை அதிகமாக ஆரம்பித்தது. தகுந்த பரிகாரம் சிக்கிரமாகத் தேட வேண்டிய அவசியத்தைத் தேசம் பூராவுமே உணர்ந்தது. விவசாயக் கடன் பிரச்னைக்குத்தகுந்த வேலை செய்வதற்கு பிரிட்டிஷ் இந்தியாவின் சில ஜில்லாக்களில் நில அடமான பேங்குகள் ஆரம்பிக்கப்பெற்றன. பரோடா ஸமஸ்தானமும் திவான் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியின் ஊக்க துணை கொண்டு இத்துறையில் வேலை செய்யச்சற்றும் தயங்கவில்லை. விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் கொடுத்து அவர்களைக் கடன்களிலிருந்தும் விடுவிக்க 1933ல் பரோடா கூட்டுறவு நில மார்க்கீஸ் பேங்க் ஆரம்பிக்கப்பெற்றது. இவ்விதமாக ஸமஸ்தான விவசாயிகளைக் கடன் பளுவிலிருந்து விடுவிக்கப்பல வகையிலும் வெகு காலமாக ஆலோசிக்கப்பட்டதின் பயனாய் இப்பேங்க் ஏற்படலாயிற்று.

பேங்கு, பங்குதாரர்களுடையது. பரோடா ஸமஸ்தான கூட்டுறவு சங்கச் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. அதன் மூலதனமாகிய ரூ 26,00,000 மும் பங்கொன்றுக்கு

கு 50 வீதம் 50,000 பங்காக்கப் பட்டது. பரோடா ஸமஸ்தானத்தைச் சேர்ந்த எந்தத் தனி நபரும், ஸ்தாபனமும் ஒரு பங்காவது எடுத்துக்கொண்டு இதன் அங்கத்தினராய்ச் சேர்ந்து கொள்ளலாம். ஓர் அங்கத்தினருக்காவது 40 பங்குகளுக்குமேல் வைத்துக் கொள்ள உரிமை கிடையாது.

பங்குதார்களின் பொதுச் சபையே பிரதான அதிகாரி யென்றாலும் நிருவாகம் முழுவதும் டைரக்டர்களின் போர்டே செய்து வந்தது.

பங்கு விற்பனை மூலமாயும், டிபெஞ்சர்கள் வெளியிட்டும், டெபாசிட்டுகள் பெற்றும் பணம் திரட்டுவதற்கு பேங்கிற்கு அதிகாரமிருந்தது. ஆனால் அவ்விதம் திரட்டுவது மூலதனமும் சேமநிதியும் சேர்ந்துள்ளதற்கு பத்து மடங்கி லதிகம் இருக்கக் கூடாது. டிபெஞ்சர்களின் வட்டிவிகிதம் 5%க்கு மேல் போகாமலிருக்க வேண்டுமென்பதோடு 25 வருடங்களுக்குள் திருப்பக் கூடியதாயிருக்க வேண்டும். பங்குதார்களுக்கு 7%க்கு மேல் டிவிடெண்டு கொடுக்கக் கூடாது. அதுவுமல்லாமல் வருடந்தோறும் வருடலாபத்தில் குறைந்தது பத்திலொரு பாகமாவது சேம நிதியில் சேர்க்கப்பட வேண்டும்.

பேங்கு அங்கத்தினர்களுக்கு மட்டும் கடன் தொகையின் இரண்டு பங்கு விலை மதிப்புள்ள நில ஈட்டின் பேரில் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. பழைய கடன்களைத் தீர்ப்பதற்கும், நில அபிவிருத்திக்கும், விவசாயத்திற்கும், நிலம் வாங்குவதற்கும் மற்றும் விவசாயிகளுக்கு நலந்தரக் கூடிய இவை போன்ற விஷயங்களுக்கு மட்டிலுமே கடன்கள் கொடுக்கப்பட்டன. ரூபாய் 500க்கு குறைந்தும், ரூபாய் 5,000க்கு மேற் போனதாயும் கடன்கள் கொடுக்கப்படவில்லை. இந்தக் கடன்கள் சமமான வருடத் தவணைகளில் கட்டப்பட வேண்டும்.

இப்படியாக இந்த பேங்குகளைப் போலல்லாது தொழில் சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வோர் அங்கத்தினர்களிடத்திலும் நேரே தொடர்பு வைத்துக் கொண்டது. டிபெஞ்சர்களின் பேரிலும் டெபாசிட்டுகள் மூலமாயும் பணம் திரட்டி விவசாயத்துக்குப் பொருளுதவி செய்தல், வேண்டிய விசாரணைகள் நடத்திக் கடன் கொடுத்தல் முதலிய எல்லாக் காரியங்களும் ஒரே ஸ்தாபனத்தின் மூலம் நடக்க ஏதுவாயிற்று.

எந்தத் தேவைக்காகக் கடன் எடுக்கப் பட்டதோ அதே காரியத்துக்கு அதனை உபயோகிக்கும்படி செய்யும் காரியத்தில் அதிகக் கவனம் செலுத்தப் பட்டது.

பொதுவாக டைரக்டர்களின் போர்டார் கடன்களைத் தீர்த்துவிடக் கூடியதாயுள்ள கடன்களுக்கே அநுமதி யளித்து வந்தார்கள். அவர்கள் விவசாயிகளுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கு முள்ள நிபந்தனைகளையும் வட்டி விகிதத்தையும் கவனித்து அவர்களிருவருக்கும் ஸமரசம் செய்து வைத்துக் கடன் தொகையைக் கூடுமான வரை குறைத்து அநுமதிக்கப்பட்ட கடனிலிருந்து இக்கடனைத் தீர்த்து வைப்பார்கள். அநேகமாய் இவ்வித முயற்சிகள் சாதகமாகவே முடியும். லேவாதேவிக்காரர்கள் ஸமரச முடிவிற்கு ஒத்து

வராமல் அநீதமாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்களில், விஷயம் ஸமரச போர்டாரின் முன் கொண்டு வரப்பட்டு கடன் ஸமரசச்சட்டப்படி பைசல் செய்யப்படும்.

இந்த பேங்கின் ஆரம்பம் முதலே பரோடா ஸர்க்கார் இதற்குப்பெரிதும் ஊக்கமளித்து வந்தனர். இது உபயோக கரமான முறையிலும் வெற்றிகரமாகவும் நடந்து வருவதற்குத் தகுந்த சலுகைகள் அதற்கும் கொடுத்து வந்தனர். பேங்கின் ஆரம்பச் செலவை ஏற்றுக் கொண்டதோடு அடுத்த நான்கு வருடச் செலவில் பாதியையும் ஒப்புக் கொண்டனர். ஐந்து வருடங்களுக்கு விலை நிர்ணய உத்தியோகஸ்தரின் சேவையை யாதொரு செலவு மின்றிக் கொடுத்துதவியதுடன் சமீபத்தில் பேங்கிலிருந்து வெளியிட்ட 3,00,000 ரூபாய் டிபெஞ்சர்களின் அசலுக்கும் வட்டிக்கும் ஜாமீனாகவும் நின்றனர். இத்துடன் தேவை ஏற்பட்டால் இந்த டிபெஞ்சர்களில் பாதியை வாங்கிக் கொள்ளவும் ஒப்புக் கொண்டனர். இந்தச் சலுகைகள் பேங்கை வெற்றிகரமாய் நடத்தி வருவதற்குப் பெரும் உதவியாயிருந்து வந்தது. இதன் வெற்றியைக் கண்டு எஞ்சி நிற்கும் மூன்று ஜில்லாக்களிலும் இவ்வித பேங்குகள் ஆரம்பிப்பது நன்மை பயக்குமென சர்க்கார் கருதினர்.

பேங்கு ஆரம்பித்து ஆறு வருடங்களாயும் வராக் கடனே கடன் பாக்கியோ கிடையாது. வருடத் தவணைகளெல்லாம்—அசலாகட்டும் வட்டியாகட்டும்—விரும்பத்தகாத நடவடிக்கையில்லாமலே வசூலாய் வருகின்றன. மற்றெந்த விதமான நில அடமான பேங்கினாலும் அடையப் பெறாத இந்த வெற்றியைப் பார்க்குங்கால் இதரர்களும் இத் துறையில் முயற்சிப்பது நன்மை பயக்குமெனச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்தச் சொற்ப காலத்தில் பேங்கின் நல்ல வேலைகளைத் திட்டமாகக் கணக்கிட முடியாது. ஆனால் பேங்கு வேலை செய்து வரும் பிராந்தியங்களில் கடன்பட்ட விவசாயிகளுக்கு அது செய்திருக்கும் உதவி நன்கு புலப்படும்.

இப்பேங்கியிலிருந்து கடன்பெறும் விவசாயிகள் இரண்டு நன்மைகளை அடைகிறார்கள்.

1. (அ) ரொக்கமாகக் கொடுத்து விடுவதால் சமரஸத்தின் மூலம் கடன் பளு மிகவும் குறைகிறது.

(ஆ) கடன் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. வட்டி விகிதம் குறைக்கப் படுவதால் கடன் பளுவிலிருந்து விடுதலை பெறலாமென்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அதோடுகூட வருடந்தோறும் மகசூல்காலத்தில் கடன் கொடுத்தவர்களின் தொந்திரவு இல்லாமல் போவதால் மனதிற்கு ஆறுதலுண்டாய் நன்னம்பிக்கையும் ஏற்படுகிறது.

2. விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதற்கு உண்மையானதும் ஒழுங்கானதுமான முறைகள் ஏற்பட்டதால் மற்ற லேவாதேவிக்காரர்கள் வட்டி விகிதத்தைக் குறைப்பதுடன் இம்மாதிரியான ஏற்பாட்டினால் தங்கள் தொழிலுக்கு ஹானி வராதிருக்கும் நோக்கத்துடன் விவசாயி

களிடம் தாங்கள் நடந்து கொள்ளும் முறைகளையும் வேண்டியது போல் திருத்திக் கொள்வார்கள்.

இந்த பேங்குகள் விவசாயக் கடன் பிரச்னைக்கு நிவர்த்தி யளிக்குமா என்று கேட்கலாம்.

விவசாயக் கடனின் பல அம்சங்களையும் பற்றிக் கவனித்தால் இது ஒரு பெரும் பிரச்னையென்பது தெரிய வரும். இப்பிரச்னைக்கு முடிவுகாண ஒரே சமயத்தில் பல துறைகளிலும் தீவிரமாக உழைக்க வேண்டும். அம் முயற்சிகளில் இம்மாதிரி பேங்குகள் நிறுவுவது முக்கியமானதாகும். அவர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்குச் சரியான ஜாமீன் கொடுக்கும் விவசாயிகள் மட்டுமே பேங்கின் உதவியைப் பெறக் கூடுமாதலால் இதனால் மட்டிலும் விவசாயக் கடன் பிரச்னைக்கு நிவர்த்தி தேடிவிட முடியாது. விவசாயக் கடனாளிகளில் ஜாமீன் கொடுக்கக்கூடியவர்கள் மிகச் சிலரே யாதலால் கடனாளிகளில் சிலரே இப்பேங்கின் நன்மையைப் பெறுகிறார்கள். இதனால் ஓரளவு தான் நலம்பெற முடியுமென்று கண்டுவிட்டதால் விவசாயிகளின் பொருளாதார அபிவிருத்தி வேலையில் பூரண வெற்றி பெறுவதற்கு இதர பல வழிகளிலும் முயற்சிக்க வேண்டியது அவசியமாகிறது.

நூல் இறக்குமதியும் உற்பத்தியும்

இந்தியாவில், வருஷந்தோறும் எத்தனை கஜம் நூல் இறக்குமதியாகிறது, இங்குள்ள மில்கள் எத்தனை கஜம் உற்பத்தி செய்கின்றன வென்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன :—

வருஷம்.	இறக்குமதி லட்சம் கஜம்	இந்தியாவில் உற்பத்தி: லட்சம் கஜம்
1900	19,400	3,500
1907—08	24,700	7,400
1913—14	31,300	10,700
1918—19	10,000	13,100
1927—28	19,400	21,900
1929—30	19,190	22,900

சமஷ்டி அரசியல்

—கே. வி. ராமசுப்ரமண்யம்
B. A., B. L.,

இந்தியாவில் சமஷ்டி அரசியல் சீக்கிரத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறதென்றும், சமஸ்தானாதிபதிகள் கையெழுத்துச் செய்ய வேண்டிய பிரவேச சாசனத்தில் (Instrument of Accesion) என்ன நிபந்தனைகள் காண வேண்டும் என்ற விஷயமாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் சமஸ்தானாதிபதிகளுக்குமிடையே ஏற்பட்ட ஆலோசனைகள் முடிவடைந்து விட்டன என்றும், கூடிய சீக்கிரம் சமஷ்டி அரசியல் அமுலுக்கு வரக்கூடுமென்றும், மாகாண ஆட்சியை காங்கிரஸ் சபை ஒப்புக்கொண்டது போலவே சமஷ்டி அரசியலேயும் காங்கிரஸ் சபை ஒப்புக் கொள்ளுதல் இந்தியாவின் நன்மைக்கும் அபிவிருத்திக்கும் சாதகமானது என்றும் வைசிராய் அவர்கள் சென்ற டிசம்பர் மாதம் கல்கத்தாவில் செய்த பிரசங்கத்தில் கூறினர். இதற்கு எதிரிடையாக சமஷ்டி அரசியலை ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும், காங்கிரஸின் ஆலோசனைகளைக் கருதாமல் சமஷ்டியரசியலை இந்தியாவில் புகுத்தினல் அதை எதிர்க்க வேண்டும் என்றும், காங்கிரஸ் தலைவர்கள் பல இடங்களில் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டின் ஒரு பகுதியான மாகாண ஆட்சியை ஒப்புக்கொண்டு நிருவகித்து வரும் காங்கிரஸ் சபை, மேற்படி ஆக்டின் மற்ருெரு பகுதியான சமஷ்டி அரசியலை இவ்வளவு தீவிரமாக ஏன் எதிர்க்க வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்வதற்காக இந்தியா ஆக்டில் விதிக்கப்பட்டிருக்கும் சமஷ்டி திட்டத்தின் நுட்பங்களை ஆராய வேண்டியது அவசியம்.

பொது ஜனங்கள் எல்லோராலும் அல்லது பொது ஜனங்களின் பெரும்பான்மையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய சட்ட சபையின் ஆதரவைப் பெற்ற பொறுப்பு வாய்ந்த மந்திரிகள் எல்லா விஷயங்களையும் நிர்வகிப்பதே ஜன நாயக ஆட்சியின் முக்கியமான அம்சம். இரண்டு பிரிவுள்ள சட்ட சபைகளில் அதிகப் பிரதிநிதிகள் இருக்கும் சபையே ஜனப் பிரதிநிதி சபையாக ஏற்படுத்தப்பட்டு, இந்தச் சபையின் ஆதரவு உள்ளவர்களே மந்திரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இந்தியா ஆக்ட்படி ஏற்படுத்தப் போகும் சமஷ்டி திட்டத்தில் இந்த அம்சம் அநேகமாகச் சூன்யம் என்று சொல்லலாம். சமஷ்டியைக் காங்கிரஸ் எதிர்ப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

சென்ற இதழில் ராஜாங்க சபையைப் பற்றிக் கூறியுள்ளோம். ஜனப்பிரதிநிதி சபையைப் பற்றி இவ்விதழில் ஆராய்வோம்.

சமஷ்டி ஜனப்பிரதிநிதி சபையில் மொத்தம் 375 மெம்பர்கள். இதில் 250 மெம்பர்கள் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் பிரதிநிதிகள். 125 மெம்பர்கள் சமஸ்தானப் பிரதிநிதிகள். ராஜாங்க சபையில் சமஸ்தானப் பிரதிநிதிகள் எந்த முறையில் நியமிக்கப்படுவார்களோ அதே முறையில் தான் ஜனப்பிரதிநிதி சபைக்கும் நியமிக்கப்படுவார்கள்.

பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் மொத்தம் 250 மெம்பர்களில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் இவ்வளவு ஸ்தானங்கள் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் ஒவ்வொரு மாகாணத்திற்குரிய ஸ்தானங்களும் வகுப்பு வாரியாக மகம்மதியர்களுக்கு இவ்வளவு ஸ்தானங்கள் என்றும், இந்திய கிறிஸ்துவர்கள், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், நிலச்சுவான்தார்கள், தொழிலாளர்கள், ஸ்திரீகள், முதலிய பல வகுப்பார் ஒவ்வொருவரும் இவ்வளவு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்படி விபரங்கள் அடியிற் கண்டிருக்கும் ஜாப்தாவில் துலக்கப்பட்டிருக்கின்றன

மாகாணம்	மொத்தம்	பொதுத் தொகுதிகள்	சீக்கியர்கள்	மகம்மதியர்	ஆங்கிலோ இந்தியர்	ஐரோப்பியர்	இந்திய கிறிஸ்துவர்கள்	வியாபாரிகள்	நிலச்சுவான்தார்கள்	தொழிலாளர்	ஸ்திரீகள்
சென்னை	37	19	—	8	1	1	2	2	1	1	2
பம்பாய்	30	13	—	6	1	1	1	3	1	2	2
வங்காளம்	37	10	—	17	1	1	1	3	1	2	1
ஐ. மாகாணம்	37	19	—	12	1	1	1	—	1	1	1
பஞ்சாப்	30	6	6	14	—	1	1	—	1	—	1
பீகார்	30	16	—	9	—	1	1	—	1	1	1
ம. மாகாணம்	15	9	—	3	—	—	—	—	1	1	1
அஸ்ஸாம்	10	4	—	3	—	1	1	—	—	1	—
வ. மாகாணம்	5	1	—	4	—	—	—	—	—	—	—
ஒரிஸ்ஸா	5	4	—	1	—	—	—	—	—	—	—
சிந்து	5	1	—	3	—	1	—	—	—	—	—
பிரிட்டிஷ்-பலுசிஸ்டான்	1	—	—	1	—	—	—	—	—	—	—
டெல்லி	2	1	—	1	—	—	—	—	—	—	—
ஆஜ்மீர்-மீர்வாரா	1	1	—	—	—	—	—	—	—	—	—
குடகு	1	1	—	—	—	—	—	—	—	—	—
மாகாணங்களில் சேராதது	4	—	—	—	—	—	—	3	—	1	—
மொத்தம்....	250	105	6	82	4	8	8	11	7	10	9

பொதுத் தொகுதி 105 ஸ்தானங்களில் ஷெடியூல் ஜாதியாருக்கு 19 ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் பிரதிநிதிகள் பொது ஜனங்களால் நேர்முகமான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். அந்தந்த மாகாணத்திலுள்ள சட்ட சபை மெம்பர்களால் தேர்தெடுக்கப் படுவார்கள். உதாரணமாக சென்னை மாகாணத்திற்குரிய 37 ஸ்தானங்களை எடுத்துக் கொள்வோம். இதில் 19 பொதுத் தொகுதி ஸ்தானங்களும் 8 மகம்மதிய ஸ்தானங்களும் இருக்கின்றன. சென்னை அசெம்பிளியில் பொதுத் தொகுதிப் பிரதிநிதிகள் ஓட்டர்களாயிருந்து 19 ஸ்தானங்களுக்கும், சென்னை அசெம்பிளியில் இருக்கும் மகம்மதியப் பிரதிநிதிகள் 8 மகம்மதிய ஸ்தானங்களுக்கும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பார்கள். ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், இந்திய கிறிஸ்துவர்கள், ஸ்திரீகள் இவர்கள் ஒவ்வொரு மாகாண அசெம்பிளியிலும் அதிகமாக இல்லையாதலால், மாகாணங்கள் எல்லாவற்றிலுமுள்ள அந்தந்த வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் அனைவரும் ஓட்டர்களாயிருந்து அந்தந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். உதாரணமாக ஸ்திரீகளுக்காகப் பிரத்தியேகப் படுத்தி யிருக்கும் 9 ஸ்தானங்களை எடுத்துக் கொள்வோம். எல்லா மாகாணங்களிலுமுள்ள அசெம்பிளியில் ஸ்திரீ மெம்பர்கள் மொத்தம் 40 பேர்கள். (அதாவது சென்னைக்கு 8, பம்பாய்க்கு 6, வங்காளத்துக்கு 4, ஐக்கிய மாகாணம் 6, பஞ்சாப் 4, பீஹார் 4, மத்திய மாகாணம் 3, அஸ்ஸாம் 1, ஒரிஸ்ஸா 2. சிந்து 2) இந்த 40 பேர்களும் ஓட்டர்களாயிருந்து அந்தந்த மாகாணத்திலிருந்து சமஷ்டி அசெம்பிளிக்கு அனுப்ப வேண்டிய பிரதிநிதிகளைத் தேர்தல் செய்வார்கள். இது போலவே மேலே சொல்லப்பட்ட ஐரோப்பிய வகையராப் பிரதிநிதிகள் தேர்ந்தெக்கப்படுவார்கள். வியாபாரத் தொகுதி, நிலச் சுவான்தார்கள் தொகுதி, தொழிலாளர்கள் தொகுதி இந்தத் தொகுதி ஸ்தாபனங்களைப் பூர்த்தி செய்ய மட்டும் நேர்முகமான தேர்தல் நடக்கும். குறிப்பிட்ட உயர்ந்த யோக்யதாம்சமுள்ள ஓட்டர்கள் இந்த ஸ்தானங்களுக்கு மெம்பர்களைத் தேர்தல் செய்வார்கள்.

ஆகவே இந்திய சமஷ்டி அசெம்பிளியின் மொத்தம் 375 ஸ்தானங்களில், 125 ஸ்தானங்களுக்கு பிரதிநிதிகள் சமஸ்தானாதிபதிகளால் நியமனம் செய்யப்படுவார்கள். 222 ஸ்தானங்களுக்கு மறைமுகமான தேர்தல் மூலம் வகுப்பு வாத முறையை அனுசரித்து பிரதிநிகள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஒரு சமஷ்டி அரசியலில் ஜனப்பிரதிநிதி சபைக்கு இவ்விதம் மறைமுகமான தேர்தல் மூலமும் நியமனம் மூலமும் பிரதிநிதிகளைப் பொறுக்கி எடுக்கும் காட்சியை நாம் வேறு எந்த தேசத்திலும் பார்க்க முடியாது.

இந்த அற்புதமான முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமஷ்டி சட்ட சபைகளில் ஜன நாயக ஆட்சி முறையை எவ்விதம் கையாள முடியும் என்பதை நாம் ஆராய வேண்டியது அவசியம். சமஷ்டி அரசியல் திட்டத்தின் பிற்போக்கான மற்ற அம்சங்கள்—அதாவது கவர்னர் ஜெனரல் அவர்களின் விசேஷ அதிகாரங்கள் அசெம்பிளியின் அதிகாரத்துக்கும் சமஷ்டி மந்திரிகளின் நிர்வாகத்துக்கும் உட்படாத ராணுவம், முதலிய விஷயங்கள், கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு ஆலோசனை கூறும் கவுன்சிலர்கள், இந்த அம்சங்களை யெல்

லாம் நாம் ஒரு க்ஷணம் மறந்துவிட்டு எல்லா விஷயங்களையும் பொறுப்பு வாய்ந்த மந்திரிகள் நிர்வாகம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். பொதுஜன நன்மையும் இந்தியாவின் அபிவிருத்தியையும் உத்தேசித்துச் சில சட்ட திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று மந்திரிகள் நினைத்தால், மந்திரிகளுக்கு எத்தகைய ஆதரவு மேலே கண்ட முறைப்படி அமைக்கப் பட்டிருக்கும் சட்டசபையி லிருந்து கிடைக்கக் கூடும் என்று கவனிப்போம்.

தற்காலம் இந்தியாவில் முதலாளித்துவம்வேரூன்றியிருக்கிறது. எந்தவிஷயத்திலும் முதலாளிகளுக்குச் சலுகைகள் காட்டப் பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்வோம். மேல் நாடுகளிலிருந்து நாம் இறக்குமதி செய்யும் சரக்குகள் கப்பல்களில் கராச்சி அல்லது பம்பாய்த் துறை முகங்களுக்கு வருகின்றன. மேற்படி சரக்குகள் சென்னை அல்லது கல்கத்தாவிற்கு வர வேண்டுமானால் ரயில் மார்க்கமாகவும் வரலாம்; கப்பல் மார்க்கமாகவும் வரலாம். ரயில் மார்க்கமாக வரும் பக்ஷத்தில் மேற்படி சரக்குகளின் கட்டணம் (Freight) மூலம் வரும் லாபம் இந்தியாவைச் சேரும். ரெயில்வே போக்குவரத்துக் கட்டணத்தை கூடியமட்டில் குறைத்தும் மேற்படி சரக்குகள் கப்பல்களிலேயே அனுப்பப்பட்டு வருகின்றன. காரணம் என்னவென்றால், ரயில் கட்டணத்தைவிடக் கப்பல் கட்டணம் குறைவாக யிருக்கிறது. அவ்விதம் குறைவான கட்டணத்தை கப்பல் முதலாளிகள் விதிக்கிறார்கள். இதற்குப்போட்டியாக ரெயில்வே கட்டணத்தைக் குறைக்க முடிகிறதில்லை. ஏனென்றால் சரக்குகள் மேல் நாடுகளிலிருந்து பம்பாய்க்கோ கராச்சிக்கோ கப்பலில் வரவேண்டி யிருப்பதால் முதலாளிகள் அடைய வேண்டிய லாபத்தை யெல்லாம் பம்பாய் அல்லது கராச்சி வரை ஏற்படும் கட்டணத்தில் சேர்த்துவிட்டு, இந்தியாவில் ஒரு துறை முகத்திலிருந்து இன்னொரு துறை முகத்துக்குக் கட்டணத்தை மிகவும் குறைவாகவும் ரயில்வேக்கள் தங்களுடன் போட்டிபோட முடியாததாகவும்விதித்திருக்கிறார்கள். இதனால்தான் இந்தியாவின் கடலோரக் கப்பல் வியாபாரம் சம்பந்தமாக இந்தியர் சட்டசபையில் ஒருசட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று பல வருஷங்களாக இந்தியர்கள் பிரயத்தனப்பட்டும், முதலாளிகள் மற்ற சலுகைக்காரர்கள், பிற்போக்காளர்கள் இவர்களுடைய ஆக்ஷேபணையினால் முடியவில்லை. வியாபாரம், வர்த்தகம் சம்பந்தமாக இந்தியா ஆக்டில் எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன. அவைகளைப் பின்னால் ஆராய்வோம்.

இந்தநிர்ப்பந்தங்களுக்கிடையேஒரு சொல்ப சீர்திருத்தம், அதாவது கடலோரக் கப்பல் வியாபாரத்தில் கட்டண விகிதம் ஒரு மைலுக்கு இவ்வளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்; போட்டியை உத்தேசித்து கட்டணத்தைக் குறைக்கக் கூடாது என்ற விதிகள் அடங்கிய ஒரு சட்டத்தை சமஷ்டி சபையில் மந்திரிகள் கொண்டு வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தச் சட்டத்திற்கு மெஜாரிட்டி ஆதரவு கிடைப்பது துர்லபம். ஒரு மசோதா சட்டமாக வேண்டுமானால் இரண்டு சபைகளும் அதை அங்கீகரிக்க வேண்டும். சபைகளுக்

குள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் இரண்டு சபைகளும் சேர்ந்த ஒரு கூட்டுசபை கூட்டுவித்து அதில் மெஜாரிட்டி மெம்பர்களால் மசோதா அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆகவே ராஜாங்க சபை, ஜனப்பிரதிநிதி சபைஇரண்டிலும் மொத்தம் 635 மெம்பர்கள் இருப்பதால் 318 மெம்பர்கள் மந்திரிகளை ஆதரித்தா லொழிய மசோதா சட்டமாகாது. அடியிற்கண்ட கணக்குப்படி கிட்டத்தட்ட 340 மெம்பர்கள் மேற்படி மசோதாவை எதிர்க்கக் கூடும்.

1. சமஸ்தான பிரதிநிதிகள் 125+104=229. இவர்கள் சமஸ்தானாதிபதிகளால் நியமனம் செய்யப்படுவதால் சமஸ்தானாதிபதிகள் உத்திரவுப்படி ஓட் செய்வார்கள். சமஸ்தானாதிபதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குக் கீழ்ப்பட்டவர்கள். மேலே கூறிய மசோதாவை பிரிட்டிஷ் முதலாளிகளும் சலுகைக்காரர்களும் எதிர்க்கிறார்கள் என்று வைத்துக் கொண்டிருப்பதால், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சமஸ்தானப் பிரதிநிதிகள் மூலம் இதை எதிர்ப்பார்கள் என்பது நிச்சயம்.

2. ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பிய வியாபார வர்த்தகப் பிரதிநிதிகள் 18+8=26

3. முஸ்லீம் மெம்பர்களில் பேர் பாதி—41+26=67

அசெம்ப்ளியில் மொத்தம் 82 முஸ்லிம் மெம்பர்கள். ராஜாங்க சபையில் மொத்தம் மெம்பர்களில் மூன்றில் ஒரு பங்குமெம்பர்கள்முஸ்லீம்மெம்பர்கள் தேர்தல் ஆகும்படி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. தற்காலம் இந்தியாவில் இருக்கும் வகுப்பு வாத உணர்ச்சியையும், காங்கிரஸ் சபையை முஸ்லீம் லீக் எதிர்த்துக் கொண்டிருக்கிறது என்ற விஷயத்தையும், ஆதி முதல் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவில் கையாண்டு வந்த (Divide & Rule) கட்சிப் பிளவு உண்டாக்கி அரசாள வேண்டும் என்ற கொள்கையையும் கவனித்துப்பார்த்தால் மொத்தம் முஸ்லீம் மெம்பர்களில் பாதி பேர்கள் மந்திரிகளுடன் சேருவார்களா என்று சந்தேகிக்கலாம். ஆகையால் குறைந்தது 67 மெம்பர்களாவது ஷை மசோதாவை எதிர்ப்பார்கள் என்று நிச்சயமாகச்சொல்லலாம்.

5. நிலச் சுவான்தார்கள்—7

பலமும், பூமியும், செல்வாக்கும் உள்ள நிலச் சுவான்தார்களே மெம்பர்கள் ஆகும்படி யோக்யதாம்சம் விதிக்கப் பட்டிருப்பதால், இவர்கள் பிற்போக்காளர்களாக யிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

5. கவர்னர் ஜெனரல் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட மெம்பர்கள், ஷெடியூல் ஜாதிபிரதிநிதிகள், மற்றும் விசேஷத் தொகுதி பிரதி நிதிகள்.	இவர்கள் மொத்தம் 50 அல்லது 60 பேர்கள்.

இவர்களில் சுமார் 10 பேர்களாவது பிற்போக்காளர்களாக இருப்பார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

ஆக மொத்தம் 339 மெம்பர்களாவது மேற்படி மசோதாவை எதிர்ப்பார்கள் என்பது நிச்சம். மேலே குறிப்பிட்ட கணக்குப் படி பொதுத் தொகுதிகளுக்குத் தேர்தல் செய்யப் பட்ட மெம்பர்கள் அனைவரும் மந்திரிகளுக்குச்சாதகமாகவே ஓட் செய்

'டாமி'யும் 'ரோஜா'வும்

எஸ். ஆர்.

வசவப்பபுரம் என்ற கிராமத்தில் முனியன் வாழ்ந்து வந்தான். முனியன் ஓர் உழவன். ஒரு சமயம் அவன் காட்டின வழி செல்லுகையில் இரண்டு நாய்க் குட்டிகளைக் கண்டெடுக்க நேரிட்டது. அவையிரண்டும் மிக்க உயர்தரத்து நாய் வகையைச் சேர்ந்தனவாய், உருவத்திலும் சிறந்து விளங்குவனவாய் இருந்ததால், முனியன் நாய்க் குட்டிகளைத் தன் வீட்டிற்கு எடுத்துச்சென்றான். அவைகளுக்கு முறையே டாமி, ரோஜா, என்று பெயர் கொடுத்து சிறிது காலம் வளர்த்து வந்தான். முனியன் பட்டணத்திலுள்ள ஒரு ஜமீந்தாரின் விவசாயி. ஜமீந்தார் வயல்களை இவன் உழுது பயிரிட்டு வந்தான். ஆகவே தன் நாய்க் குட்டிகளிலொன்றை தன் எஜமானனுக்குப் பரிசளிக்கத் தீர்மானித்தான். அங்ஙனமே டாமியை தன்னுடன் பட்டணத்திற்கு அழைத்துச் சென்று ஜமீந்தாருக்கு அதைப் பரிசாகக்கொடுத்துவிட்டுரோஜாவைத் தன் சொந்த வேலைகள் செய்வதற்காகவும் ஆடு மேய்ப்பதற்கும் தானே வைத்துக் கொண்டான்.

இக்கால முதற் கொண்டு அவ்விரண்டு நாய்களின் பழக்க வழக்கங்களும் மாறுபட்டன. டாமி எப்பொழுதும் ஜமீந்தார் அரண்மனையின் சமையலறையிலேயே இருக்கும். அது ஜமீந்தாரின் செல்லக் குழந்தையாயிற்று. டாமி எப்பொழுதும் தன் சாமர்த்திய விளையாட்டுகளினால் ஜமீந்தாரையும் அவர் குடும்பத்தாரையும்

கிறார்கள் என்றுநாம் வைத்துக்கொண்டிருக்கிறோம். சிற்சில சமயங்களில் இவ்விதம் எதிர் பார்ப்பதும் தவறாக முடிந்து விடக்கூடும். இந்த நிலைமையில் மந்திரிகள் பொதுஜன நன்மையையும் இந்தியாவின் அபிவிருத்தியையும் உத்தேசித்துக் கொண்டு வரும் மசோதா ஒரு நாளும் சட்டமாக முடியாது.

சமஷ்டி அரசியலைக் காங்கிரஸ் எதிர்ப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். இதனால் தான் சமஸ்தானப் பிரஜைகளால் தேர்தல் செய்யப் பட வேண்டும் என்று இந்தியர்கள் வற்புறுத்துகிறார்கள். அவ்விதம் சமஸ்தானப் பிரஜைகளால் தேர்தல் செய்யப்பட்ட பிரதிநிதிகள் சமஷ்டி சட்டசபைகளில் மெம்பர்களாக இருக்கும் பக்ஷத்தில், அவர்களில் ஒரு பகுதியாவது பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து ஓட்செய்யக் கூடும். அப்பொழுது சமஷ்டி மந்திரிகளுக்கு மெஜாரிட்டி மெம்பர்களின் ஆதரவு கிடைக்கக் கூடும்.

சமஷ்டி அரசியலை நாம் எதிர்ப்பதற்கு மற்ற காரணங்கள் என்ன என்று அடுத்த இதழ்களில் ஆராய்வோம்.

மிக்க சந்தோஷப் படுத்தியது. ஜமீந்தார் வீட்டு வேலைக்காரர்களெல்லாரும் டாமியிடம் அன்பாயிருந்தனர். ஜமீந்தார் உத்தரவுப்படி டாமி நித்தமும் வாசனை சோப் கொண்டு குளிப்பாட்டப்பட்டு சுத்தமாக இருக்கும். வேலைக்காரர்கள் அதன் சடையை வாரி, முகத்திற்கு வாசனைக்கலர் குங்குமம் இட்டு அழகுபடுத்துவார்கள். சாப்பாடு வேளையில் டாமிக்கு பிரியமான மாமிசம், ரொட்டி, பிஸ்கோத்து முதலியன தாராளமாகக் கிடைக்கும். இத்தியாதி உபசாரங்களினால் டாமி நன்றாகக் கொழுத்து வளர்ந்தது. ஆனால் அளவுக்கு மீறிய உணவு டாமி உட்கொண்டதால் சாதுக் குணமும், தூங்கும் சுபாவமும், சோம்பேறித்தனத்தோடு திருட்டுப் புத்தியும் கொண்டதாயிருந்தது.

ஆனால் இதன் சகோதர நாயான ரோஜாவோ ஒரு கிராமத்தில் தில் ஒரு சிறு குடிசையில் வளர்ந்து வந்தது. அதற்கு அதிக அழகு கிடையாது. தின்று கொழுக்க அதிக உணவுப் பொருள்களும் கிடையாது. டாமிக்குண்டான சாமர்த்திய குட்டி விளையாட்டுக்களும் அதன் திருட்டுச் சுபாவமும் ரோஜா பெறவில்லை. அது எப்பொழுதும் திறந்த வெளியிலேயே அலைந்து திரியும் பழக்கத்தைப் பெற்றது. எவ்விதமான மழைக்கும் பனிக்கும் அஞ்சாது மிக்க தைரியமும் மனோபலமும் தேக பலமும் பெற்றிருந்தது. தவிரவும் தன் எஜமானன் ஆடுகளைத் தின்ன வரும் ஓநாய்களிடம் அடிக்கடி சண்டை செய்து வந்ததனால் உடம்பு முழுவதும் காயத்தழும்புகளைப் பெற்றிருந்தது. ஓநாய் உலகமே இதைக் கண்டு பயப்படும்படி ரோஜா மிக்க பலம் கொண்டதாயிருந்தது. தன் எஜமானன் குடிசையில் இருக்கும் உணவுப் பொருள்களை அது ஒரு பொழுதும் திருடித் தின்னாது. முனியன் தானாகக் கொடுத்த அற்ப உணவையும் மிக்க நன்றியறிதலுடன் பெற்றுக் கொள்ளும். மிக்க பனியோடுகூடிய மாரிக் காலத்தில் ஒரு நாள் ஆற்றில் முழுகி இறக்கப் போகும் தருணத்திலுள்ள ஒரு பெண்மணியை இது கரையேற்றிக் காப்பாற்றினதால் கிராமத்திலுள்ளோர் அனைவரும் இதனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

ஒரு நாள் முனியனின் எஜமானனான ஜமீந்தார், தம் நிலங்களைப் பார்வையிடும் பொருட்டு கிராமத்திற்கு வந்தார். டாமியையும் தன்னுடன் அழைத்து வந்தார். நடுவழியில் காட்டின் பக்கமாகப் போகையில் ரோஜா எதிர்நோக்கி வருவதைப் பார்த்தார். அதன் ஆபாசமான உருவத்தை இகழ்ச்சிக் குறிப்புடன் நோக்கினார். தன் டாமியின் அழகைப் பார்த்து கர்வங் கொண்டார். ஆனால் இவர் தன் அபிப்பிராயத்தை மாற்றும்படி செய்ய பின் வரும் சம்பவம் நிகழ்ந்தது:—

தம் பின்னாலிருந்து ஒரு பயங்கர சப்தம் உண்டாவதைக் கேட்ட ஜமீந்தார் அத்திசையை நோக்கினார். ஹா! கண்களில் தீப்பொறி பறக்க, கலைந்த சடையுடன், பசியால் கோபங் கொண்டு மிக்க கொடூரமாய் உறுமிக் கொண்டே நிற்கும் ஓநாய் ஒன்றைக் கண்டார். உடல் நடுங்கினார். எனினும் தன் நாய் டாமி தனக்கு உதவும் என நினைத்தார். ஆனால் அந்த டாமியோ மிக்க பயத்துடன் உளறிக்

கொண்டு கால்களினிடையே வாலைச் செருகிக் கொண்டு ஓடுவதைப் பார்த்ததும் தமது இறுதிக்காலம் சமீபித்து விட்டதாகவே கருதினார். ஆனால் அதே சமயத்தில் அவருக்குத் தெரியாமல் அவர் பின்னோடேயே வந்து கொண்டிருந்த ரோஜா, நிமிஷத்தில் ஓநாயின் மீது பாய்ந்து விழுந்து அதன் தொண்டையை இறுகக் கவ்விக் கொண்டது. சிறிது நேரம் ரத்தமயமான சண்டை நடந்தது. சீக்கிரத்தில் ரோஜா ஓநாயைத் தன் காலடியில் பிணமாகக் கிடத்தியது. அதே சமயத்தில் அங்கு வந்த குடியானவன் முனியன் தன் நாயை ஆசுவாசப் படுத்தி, காயங்களுக்கு சிகிச்சை செய்து அதைத் தட்டிக் கொடுத்தான்.

ஜமீந்தார் தன் உயிரைக் காப்பாற்றின ரோஜாவை அன்புடன் தட்டிக் கொடுத்து அதைப் புகழ்ந்தார். மிக்க கோழையும், நன்றி கெட்டதுமான டாமியைக் கொல்லும்படி முனியனுக்கு உத்தர விட்டார். பிறகு ரோஜாவைத் தனக்கு கொடுக்கும்படி முனியனிடம் கேட்டுக் கொண்டார். முனியனுக்கு ரோஜாவைக் கொடுக்க மனமில்லை யெனினும் முடிவில் சம்மதித்தான். ஜமீந்தார் ரோஜாவுடன் தன் ஊர் போய்ச் சேர்ந்தார். ரோஜா ஜமீந்தார் வீட்டில் ஒரு வேலையுமின்றி உண்டு உறங்குவதா யிருந்தது. சீக்கிரத்தில் டாமியைப்போல் கொழுத்து வளர்ந்தது. ஆடுகளைப் பாதுகாக்கவோ, வன மிருகங்களுடன் சண்டை செய்யவோ, நதியிற் பாய்ந்து குளிக்கவோ சந்தர்ப்பமில்லாததனால் சோம்பேறித் தனத்துக்கு அடிமையாயிற்று. ஒரு வார்த்தையில் சொல்லப் போவோமானால் முன் டாமி இருந்த நிலையில் இப்பொழுது ரோஜா வந்து விட்டது.

அதிர்ஷ்டங் கெட்ட டாமியை முனியன் கொல்வதற்குக் கூட்டிச் சென்றான். ஆனால் அதன் அழகும் உருவமும் அவன் மனதை இளக்கியது. டாமி அன்புடன் வாலைக் குழைத்துக் கொண்டு சந்தோஷ முகத்துடன் முனியன் காலை நக்கியது. முனியன் இரக்கங் கொண்டு அதற்கு உயிர்ப் பிச்சை அளிக்கத் தீர்மானித்தான். தனக்கு வேலை செய்ய வேண்டி அதைத் தன்னுடனேயே கூட்டிச் சென்றான்.

முன் ரோஜா வளர்ந்த மாதிரி இப்பொழுது டாமி வளர்க்கப்பட்டது. அதற்கு அதிக ஆகாரம் கொடுப்பது கிடையாது. ஆகவே தேகம் மெலிந்து ஊக்கம் கொண்டது. ஒரு சமயத்தில் மழை பெய்யும் போது குடியானவன் குடிசையில் சமையலறையில் வந்து படுத்துக் கொண்டது. ஆனால் முனியன் மனைவி அதை விரட்டி யடித்தாள். அன்று முழுதும் டாமி மழையில் நனைந்தது. இப்படியாக அது சீதோஷ்ண மாறுதல்களுக்குத் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டது. ஆனால் ஓநாய் பயம் மாத்திரம் இதற்குப் போகவில்லை. ஒரு நாள் டாமி காட்டின் வழி செல்லுகையில் ஒரு பசித்த ஓநாய் இதன் மீது பாய்ந்து கவ்விக்கொண்டது. டாமியால் ஓடுவதற்கு முடியவில்லை. சந்தர்ப்பங்கள், கோழைகளையும் தைரியவான்களாக ஆக்குகிற தன்றோ? டாமி தைரியங் கொண்டு வீராவேசத்துடன் தன் உயிருக்காக முனைந்து ஓநாயை எதிர்த்தது. திடீரென்று ஓநாயின் கால் வழுக்கி அது

கீழ் விழவே டாமிக்கு ஆங்காரத்துடன் ஓநாய் கழுத்தை இறுக்கிக் கவ்வி அதை மடியச் செய்தது. இதன் பின் டாமிக்கு ஓநாய் பயமே போய் ஓநாய்களுக்குத் தான் பயத்தை உண்டு பண்ணுவதாய் இருந்தது.

இச்சமயம் ஜமீந்தார் மறுபடியும் கிராமத்திற்கு நிலங்களைப் பார்வையிட வந்தார். ரோஜாவையும் கூட்டிக் கொண்டு வந்தார். ரோஜா ஓநாய்களுடன் சண்டையிடுவதைப் பார்க்க உத்தேசங் கொண்டார். ஆகவே அக்கிராம ஜனங்கள் பக்கத்துக் காட்டில் ஓநாய் இருப்பதை அறிவித்தார்கள். ஆனால் ஓநாயைக் கண்ட மாத்திரத்தில் ரோஜா மிகமிகப் பயந்து ஓடிப்போயதைக் கண்டதும் ஜமீந்தார் அதி ஆச்சரியங் கொண்டார். அதே சமயத்தில் இன்னொரு நாய் ஓடி வந்து அந்த ஓநாயின் மேல் சீறி விழுந்தது. சில நிமிஷ நேரத்தில் ஓநாயைத் தன் காலடியில் இறக்கச் செய்தது. தன் ரோஜாவின் பயங்கொள்ளித்தனத்தை இகழ்ந்தும், அந்த இன்னொரு நாயின் வீரத்தை மெச்சிக் கொண்டும் இருந்த ஜமீந்தார், அந்த நாய் டாமியாக இருப்பதைப் பார்த்த போது அவருக்குண்டான ஆச்சரியம் அளவு கடந்ததாயிருந்தது. 'ஓ, இப்பொழுது அறிந்து கொண்டேன். அசமந்தமான சோம்பேறி வாழ்க்கை நடத்துபவர்களிடம் வீரத்தையும், தைரிய குணத்தையும் எதிர்பார்ப்பது முடியாது. ஒழுங்குடன் கூடிய அன்றாட தேகமனோ பயிற்சியானது உபயோக மற்றவர்களையும் நல்லவர்களாக்குகிறது. ஏ, முனியா? பார்வையினால் ஒன்றையுமே மதிக்கக்கூடாது. நல்ல குணங்களும், வீரச் செயல்களும் பெரிய இடங்களைக் காட்டிலும் குடிசைகளிலேயே அதிகமாக காணப்படுகின்றன. இதை இவ்விரண்டு நாய்களின் செயல் மூலம் அறிந்தேன்' என்றார்.

லண்டனுக்குச் சுமார் 40 மைல் தொலைவிலுள்ள விக்டோரியா போர்ட் என்ற ஒரு ஸ்டேஷன் இருக்கிறது. இதனை ஏழாவது எட்வர்ட் அரசர், அவரது பரிவாரங்களும் உபயோகித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது இந்த ஸ்டேஷனில் மாதம் பன்னிரண்டு பிரயாணிகள் தான் ஏறவும் இறங்கவும் செய்கிறார்கள்.

ஃ ஃ ஃ

போப்பரசருக்கு அறுபது மெய்க்காப்பாளர்கள் இருக்கிறார்கள்.

வென்றி மாலைக் கவிராயர்

(இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை)

—சு. சோமசுந்தர தேசிகர்

அமிழ்தினும் இனிய தமிழின் தெய்வமாகக் கருதப்படும் முருகக் கடவுளது படை வீடுகளுள் ஒன்றாக இருப்பது திருச்சீரலைவாய். இவ்வூர் செயந்திபுரம் என்றும் திருச்செந்தில் என்றும் சிந்துபுரம் என்றும் கூறப்படும். காசி, காஞ்சி, பொன்னம்பலம், காளத்தி, கமலை, தேசுலாவண லக்கிரி, மாசிலாணைக்கா, வண்புருடோத்தமநகரம் இவ் வெட்டுடனும் ஓசைமாக்கடலுடுத்த பாரிடத்தில் ஒன்பதாக வைத் தெண்ணப்படும் செயந்தி நன்னகரம் அருங்குரோசமைந்துடையது. அம் மாநகரியை யடைந்து சுருங்கு கூபமும் வாவியும் குளனும் வான் சுருங்காதிரங்கும் யாறுமாம் புண்ணிய தீர்த்தத்தின் ஆடினால் பரம்புமந்நகர் தருங்கதி யாவரே பகர்வார்?

இத்துணைப் பெருமை பொருந்திய திருச்செந்திலின் கண்ணே திரிசுதந்தரர் என்னும் முக்காணியர் குடும்பு ஒன்றிலே ஒரு பிள்ளை பிறந்தான். அப் பிள்ளைக்கு வென்றிமாலை எனப் பெற்றோர் பெயரிட்டனர். அப்பிள்ளை இளமையிலேயே தங் குலத்துக்குரிய ஒழுக்கமும் கல்வியுமின்றி மூர்க்கனாய்த் திரிந்து வந்தான். கல்வியறிவில்லாதவன் எதற்கு உதவுவான்? நல்ல வேலைகட்கு உதவாதவன் சமையல் முதலாய கீழ்மையான தொழிலை செய்ய வேண்டியவனாவான். இவனும் அவ்வாறே செந்திலாண்டவன் கோயிற் பரிசாரகனாயமர்ந்து மடைத் தொழில் செய்து வந்தான். ஆயினும் தங்குல தெய்வமான முருகப்பிரானிடத்து ஆறாத பக்தியுடையவனாகவிருந்தான். ஒரு நாள் யாது காரணத்தாலோ அவன் செய்ய வேண்டிய மடைத் தொழிலில் முட்டுப்பாடுண்டாக, நித்தியச் சிறப்பு சிறிது காலம் தாழ்க்க நேரிட்டது. இதனைக் கண்ட தலத்தாரும் தானத்தாரும் அம் மடைத் தொழில் செய்துவந்த வென்றிமாலையைக் கசையாலடித்தனர்.

அக் காலத்திலே சிறு பிழைகள் செய்பவர்களைக் கசை யென்ற சாட்டையால் பிழைக்குத் தக்கவாறு அடிப்பது வழக்கம். இது திருநெல்வேலி ஜில்லாவில் மாத்திரமல்ல; தஞ்சாவூர் ஜில்லாவிலும் நடந்த வழக்கமாகும். திருவாரூர்க் கோயில் விசாரணை அரசாங்கத்தாரிட மிருந்த போது, பரிசாரகர்கள் அரிசி முதலாயின திருடுவது வழக்கம். அக் காலத்திலே அரசாங்கத்தார் சுவாமி நிவேதனப் பிரசாதம் முதலாயினவற்றின்

அளவையும் நிறையையும் கவனிப்பது வழக்கம். அவை அளவு, எடை குறைவு மாயின் அதற்குப் பொறுப்புள்ளவர்களைத் தண்டிப்பர். இவ்வாறு பல நாள் நடந்தன. ஒரு நாள் பிழை செய்தவர்களைக் கச்சேரியில் கொண்டு வந்து நெடு நேரம் காக்கவைத்து விட்டனர். நாழிகை யேறுவதையும் கோயிற் காலங்கள் முட்டுப் படுவதையுங் கண்ட கோயில் வேலைக்காரர் எல்லோரும் அதிகாரியிடம் சென்று 'எங்களைத் தட்டிவேண்டிய (அடிக்க வேண்டிய) தட்டல்களைச் சட்டென்று தட்டிக் கொண்டு விடுங்கள்; கோயில் காரியங்களுக்கு நாழிகை யாகிறது' என்றனராம். அச் சொல்லைக் கேட்ட உத்தியோகஸ்தர் அவர்களுக்குக் கடவுளிடம் உள்ள பக்திக்கு வியந்து உடனே அவர்களைப் போக உத்திர விட்டார். இதுபோன்று அந் நாளில் நடப்பதீ இயல்பான காரியம்.

வென்றிமாலை என்றும் கசையடி பட்டவனல்ல னாதலால் அடிகளைப் பொறுக்க மாட்டாது துன்பமடைந்த தோடு தண்டனை பெற்ற பின்னர், இவ் வவமானத்தோடு உயிர் வாழ்த லினும் உயிர் துறப்பதே சாலச் சிறந்த தென்று கொண்டு வள்ளிமணாளன் மேல் பாரத்தைப் போட்டுக் கடலில் விழுந்தான்.

தவிப்பார்க் குறுதுணையாய செந்திலாண்டவன் அஞ்ச மடைந்தவரைக் கைவிட மாட்டானன்றோ? நல்லருள் கிட்டவும் வென்றிமாலையைக் குமாரக் கடவுள் கைபிடித்துக் கரையேற்றி, அவருக்கு இனிய தமிழ்ப் பாடல் பாடும் சக்தியு மளித்தது மன்றி, திருச்செந்தூர்ப் புராணத்தைத் தமிழிற் பாடும்படியும் அருள் செய்தா ரென்று கன்ன பரம்பரைச் செய்தி கூறும்.

வென்றி மாலைக் கவிராய ராஞர், இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடும் சக்தி வாய்ந்தவராக விளங்கினர்.

அக் காலத்திலே ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான உலாந்தாக்காரர் (Holland) இந்தியக் கடல்களில் வாணிபஞ் செய்தனர். அவர்களுட் சில கொள்ளைக்காரரு முண்டு. ஒரு கூட்டத்தினர் திருச்செந்திலிற் சென்று கொள்ளை யடித்தது மன்றி கோயிலுட் சென்று முருகப்பிரானையுந் தூக்கிச் சென்றனர். முருகக் கடவுள் கலத்திற் சேரலும், புயலொன்று உண்டாகிக் காற்று மழையும் உண்டாயிற்று. இதனைக் கண்ட கொள்ளைக் கூட்டத்தினர் இது தெய்வக் குற்றமென் றெண்ணிச் செந்திலையனைத் தூக்கிக் கடலிற் போட்டு விட்டுப் போய் விட்டனர்.

அக் காலத்திலே திருநெல்வேலியின் றென்பாகத்துக்குக் காரியகர்த்தராக விருந்தவர், காவை வடமலையப்ப பிள்ளையன் ஆவர். இவர் கார்காத்த வேளாளர். செந்திலாண்டவனிடம் மாறாத பக்தியுடையவர். "ஆண்டவன் வெளிப்பட்டா ரென்று" செய்தி எட்டியவுடன் திடுக்கிட்டார். மனம் பதறினர். ஆயினும் என் செய்வர். கவலைமேலிட்டுத் தயங்கினர். அன்று இரவு இவரது கனவில் ஆண்டவன் தோன்றித் தான் நீர்வாசஞ் செய்யுமிடத்தைக் குறிப்பிட்டார். உடனே ஏவலாளரைக் கொண்டு குமாரக் கடவுளைக் கொண்டு வந்து சேர்த்து பிரதிஷ்டை பண்ணினர். இச் செய்தியை நமது புலவரான வென்றிமாலைக் கவிராயர் ஒரு அழகிய கீர்த்தனமாகப் பாடியுள்ளார். அதனில் ஒரு பகுதி வருமாறு.

இராகம்—மத்தியமாவதி ஆதி—தாளம்

பல்லவி

இப்போது தேவரீர் எழுந்தருளியது
எல்லோருக்கும் நல்ல காலம்

அநுபல்லவி

செப்பெனும் பூண்முலை வள்ளி பங்காளரே செல்வரே
கல்வி பயிலுஞ் செந்தூரினில்—இப்போது

சரணங்கள்

எண்ணூற் றிருபத் தொன்பதா மாண்டு
இசையும் விசய வருடந் தை மாதத்தில்
நண்ணு மிருபத்து மூன்றாந் தெய்தியில்
நல்ல வெள்ளி வாரத்தில்
புண்ணியஞ் சேருந்த்ர யோதசி யிற்புனர்
பூசத்திற் பூர்வபட்சத்தின் மிதுனத்திற்
விண்ணவர் போற்று மிந்திர நாம
யோகத்தில் மென் மேலுஞ்
செந்தூர்க்கு நன்மை யுண்டாக்கவே—இப்

இதுவன்றி திருச்செந்திற் புராண வாறு குகனடிமையாகப் பதினேழாம் மும் தமிழினாற் பாடினார். இவர் இவ் நூற்றாண்டில் வாழ்ந்து பேறுபெற்றார்.

வான் தரு இன்பம்

தேவி தாசன்

நீலக்கட லென்ன மேலேயம்மா !—வானம்
நீளப் படர்ந்து விரிந்ததம்மா !
சேலென்னச் சுடர்கள் யாங்கணுமே—அந்த
சிதறிக் கிடந்து மின்னு தம்மா ! 1.

துள்ளி யடித்தெழுந் திரையினைப் போல்—வெண்முசெல்
தோன்று தவை தம்மின் இடையினிலே
வெள்ளிக் கலம் போலத் தண்மதியும்—எழில்
விளங்கச் செல்லுதல் பாரடா வோ ! 2.

கலத்தை நடத்தும் மாலுமி போல்—மதிக்
களங்கம் தோன்றுதல் என்னே யடா !
கலத்திற் செல்லுவோம் வாரீரோ—எனக்
கண்கொட்டிச் சுடர் நம்மை யழைத்திடல் பார் 3.

பட்டப் பகற்பட்ட பாட்டயர்வும்—வெள்ளைப்
பாலொளி நிலவினிற் பறந்த தம்மா !
கட்டப் படுத்திடுஞ் சிந்தனைகள்—புயற்
காற்றிடைச் சருகெனப் போயினவே ! 4.

பையவே கையாட்டி நடை பழகும்—இளம்
பாலர்கள் திங்களை நோக்கியே தான்
கைககாட்டி 'வா வா'வென வழைக்கும்—இன்பக்
காக்ஷியில் மனங் கொள்ளை போகு தடா ! 5.

கலத்தைக் கவிழ்க்க வருபுயல் போல்—அதோ
கரிய மேகங்கள் வருது பார் !
நிலவை மறைத்து நிற்குது பார்—இருள்
நீள விரிந்து படர்ந்தது பார் ! 6.

இருண்ட முகில் தகர்ந் தேகு முன்னே—இன்பம்
ஏற்ற நல்லிளங் குழந்தையுளம்
வருந்தும் நிலையினை வகுத்துரைக்க—நானோ
வல்லவன் என்னருந் தம்பியரே ! 7.

சோலை மரங்களில் கூடு வைத்த—புட்
சோடுகள் இறக்கைகள் கொட்டுது பார் !
வேலைது வக்கவி ழைந்தனவோ—அவை
வெளுப்பெலாம் பாலென்றெண் ணுபினவோ 8.



அறிவுத்துறை

சப்தம் தகிக்குமா?

—"விஞ்ஞான போதகர்"

நம்மைச் சுற்றி அனேக விதமான பதார்த்த வகைகள் சூழ்ந்து நிற்கின்றன. நாம் நடமாடும் போது அவைகளில் சிலவற்றை அசைந்தாடச் செய்யாமல் போக முடியாது. நாம் நடக்கும் போது நமது பாதத்தின் கீழ் தரை சிறிது அசைகிறது; மேஜையின் மீது ஒரு பொருளைப் போடும் போது மேஜையும் அசைகிறது. மிருகங்கள் காடுகளில் போகும் போது இலைகள் அசைகின்றன. இவ்வசைவுகள் நமது பார்வைக்கே தோன்ருமலிருக்கலாம். ஆனல் அசைவுகள் இருந்தே தீருகின்றன.

நாம் காற்று சூழ்ந்த சமுத்திரத்தில் வாசம் பண்ணுகிரேம். நாம் அசையும் போது காற்றும் அசைகிறது. காற்றில் ஏற்படும் சக்தியானது தண்ணீரில் உண்டாகும் அலைகள் போல நாலா பக்கமும் ஓடி வெகு தூரம் சென்றதும் அவைகளின் சக்தி குன்றிப் போய் விடுகிறது. ஆகவே கடின பதார்த்தம், ஜல பதார்த்தம், வாயு பதார்த்தம் ஆகமூன்றிலும் அசைவு உண்டாக்கலாம். இந்த அசைவுகளை உணர்ந்து கொள்ள இயற்கையில் நாம் செவிகளைப் பெற்றிருக்கிரேம். நமது காது

கள் வெகு அற்ப அசைவையும் உணர்த்தும் அரிய சக்தி வாய்ந்தவை. அசைவுகள் காற்றில் அலைகள் போன்று பறந்து வந்து காதின் குழல் வழியாகச் சென்று அங்குள்ள மெல்லிய தோலை அசைந்தாடச் செய்வதால் நாம் சப்தத்தை உணருகிறோம். ஆகவே சப்தம் உண்டாவதற்கு ஏதாவதோர் பொருள் அசைந்தாட வேண்டும். ஆனால் எல்லா அசைவுகளையும் கேட்க இயலுமா?

நாம் கடந்த மாத 'ஜோதி'யில் கண்ணுக்குப் புலனாகும் வெளிச்சம் ஓர் சிறிய அலை நீளத்திற்குட் பட்டதென்றும், அவ்வளவுக்குக்குறைந்தோ அதிகரித்தோ விருந்தால் காண முடியாதென்றும் கூறியுள்ளோம். அவ்வாறே ஏதாவதோர் பொருள் ஓர் வினாடிக்கு 20 தடவை முதல் 20,000 தடவை வரை அசைந்தாடினால் அவ்வசைவுகளை நமது செவி உணர்த்த முடிகிறது. 20 தடவைக்குக் குறைந்தோ அல்லது 20,000 தடவைக்கு அதிகரித்தோ ஆடும் அசைவுகளை காது உணர்ந்து கொள்ளும் சக்தியில்லை. தற் சமயம் 20,00,000 தடவைக்கு அதிகமாகக் கூட ஒரு பொருளை அசைந்தாடச் செய்ய முடியும். ஆனால் அது அசைந்தாடிக் கொண்டிருந்தாலும் நாம் நமது செவியால் உணர முடியாது. அசைந்தாடுவதனாலாகிய சக்தி நமது காதுகளை அடைந்தாலும் அதனைச் சப்தமாக உணர முடிவதில்லை. இவ்வித அதிகமான அசைவுகளால் உண்டாகும் சப்தத்திற்கு 'உணராச் சப்தம்' (Ultrasonic) என்று பெயர். இப்பொழுது இவ்வுணராச் சப்தத்திற்குத் தகிக்கும் சக்தியுண்டு. அஃது தெவ்வாறென்றுதான் நாம் தற்சமயம் விரித்துரைக்கப் போகிறோம்.

சாதாரணமாக அசைந்தாடும் பொருளுக்கும் நமது செவிக்கும் ஊடேயாதாவதோர் வாயு பதார்த்தமோ, ஜல பதார்த்தமோ, திட பதார்த்தமோ தங்கியிருக்க வேண்டும். மின்சாரத்தா லடிபடும் மணியை ஓர் கண்ணாடிக் கூடால் மூடி வைத்தாலும் அதினோசை நன்கு புலனாகும். ஆனால் அக்கண்ணாடி மூடிக்குள்ளிருக்கும் காற்றை வெளியேற்றி விட்டால் அம்மணியோசை செவிக்குப் புலனாகாது. பிறகு காற்றைக் கொஞ்சம் கொஞ்சமாக உட் புகுத்தினால் மணியோசை கொஞ்சங்கொஞ்சமாய்ப் புலனாக ஆரம்பித்துகாற்றுகண்ணாடிக்கூட்டில் எப்பொழுதும் போல் நிறைந்துவிட்டால் ஒலி எப்பொழுதும் போல தொனிக்கும். இதனால் ஒலியானது வாயு முதலியவை போன்ற உபகரணமில்லாமல் நமது செவியை வந்தடையாது. சப்தம் காற்றில் ஒரு வினாடிக்கு சுமார் 1120 அடி தூரமான வேகத்துடன் செல்லுகிறது. ஆனால் தண்ணீரில் காற்றை விட நான்கு பங்கு அதிக வேகமாயும், இரும்பு முதலிய உலோகங்களில் சுமார் பதினைந்து பங்கதிக வேகமாயும் செல்லுகிறது. ஆகவே தற் சமயம் நாம் ஆராயப்போகும் 'உணராச் சப்தம்' ஏதாவதோர் உபகரண மில்லாமல் உண்டாகும் சப்தமல்ல. ஆனால் ஜல பதார்த்தம் போன்ற உபகரணமிருந்தும் உணர முடியாத ஒலியைப் பற்றியே வரையப் போகிறோம்.

ஒரு பொருளை வினாடிக்குச் சுமார் 20,000 தடவைக்கு அதிகமாக அசைந்தாடச் செய்ய பல வழிகளுண்டு. அவைகளில் அதிகச் சுலபமானவை இரண்டுள. ஒன்று, குங்கிலியத்தை (Resin)க் கந்தையால்

தொட்டு மெல்லிய உருக்கு (Steel) கம்பியை விரைவுடன் உருவினால் ஆயிரக் கணக்கான அசைவுண்டாகும். மற்றொன்று, குறுகிய உலோகத் தடியின் முனையில் பலமாக சுத்தி கொண்டு தட்டினாலும் உண்டாகும்.

உருக்குத் தடியை மத்தியில் பிடித்து நுனியில் அடிப்பதாலுண்டாகும் அசைவின் அளவு

தடியின் நீளம்		ஒரு வினாடிக்கு அசைவு	
40	அங்குலம்	2,555	தடவை
32	,,	3,204	,,
24	,,	4,283	,,
16	,,	6,385	,,
12	,,	8,580	,,
8	,,	12,800	,,
4	,,	25,900	,,
2	,,	50,150	,,

மேலும் உஷ்ண மின்சாரக் கருவிகளையும் (Thermionic Valves) ஒலி பரப்பும் கருவிகளையும் சேர்த்து புலனாகும் ஒலியையும், புலனாகா ஒலியையும் உண்டாக்க முடிகிறது.

மற்றொரு நவீன முறையையும் இவண் குறிப்பிட வேண்டியிருக்கிறது. நிக்கல், கொபால்ட் என்ற உலோகத் தடிகளை (முக்கியமாய் சிறிய குழாகளாக) மின்சாரக் கம்பிகளால் சுற்றி மின்சாரத்தை விரைவாக நின்று நின்று ஓடச் செய்தால் அவைகள் காந்த சக்தியடைந்தும், காந்த சக்தியற்றும் போய்க் கொண்டேயிருக்கும். அவ்வாறாகும் போது அவைகள் தங்கள் நீளத்தில் குறைந்தும் கூடியும் விரைவாக ஆடிக் கொண்டேயிருக்கும் (Magnetostriction) அவ்வசைவு மின்சாரம் செலுத்தும் நிறுத்தும் வேகத்தைப் பொருத்திருக்கிறது. இதற்காக வெகு சக்தி வாய்ந்த (500 Watts) 'உஷ்ண மின்சாரக் கருவி'யை உபயோகப் படுத்துகின்றனர். இக் கருவியில் பல வித அமைப்புகளால் மின்சார அணுக்களை உண்டாக்கவும் தடைப்படுத்தவும் முடிகிறது. இவ்விதமாக ஒரு வினாடிக்கு சுமார் 1,200,000 தடவை அசைந்தாடச் செய்திருக்கின்றனர்.

ஆனால், மற்றொரு ஆச்சரியமான 'குவார்ட்ஜ்' என்னும் கண்ணாடிப் படிகத்தைக் கொண்டு (Quartz Crystal) வினாடிக்குச் சுமார் 20 லட்சம் தடவை அசைந்தாடச் செய்ய முடிகிறது. இதனையே இவண் விரிவாக விளக்குவோம்.

பிரான்சு தேசத்து விஞ்ஞான நிபுணர்களாயிருந்த க்யூரி (Curie) தம்பதிகள் 'குவார்ட்ஜ' என்னும் இயற்கையாக உண்டான கண்ணாடிப்படிகத் தகட்டை அமிழ்த்தினால் அதன் இரு பக்கத்திலும் இருவித (+ ive-and—ive) மின்சாரம் தானாக உண்டாகிறது. அமிழ்த்தாமல் இழுத்தால் அப் பக்கங்களில் இருவித மின்சாரம் மாறி (+ ive and—ive) உண்டாகிறது.

அவ்வாறு அமிழ்த்தாமலும் இழுக்காமலும் இரு பக்கங்களிலும் இருவித மின்சாரத்தை மாறி மாறிச் செலுத்தினால் 'குவார்ட்ஜ்' படிகம் அகன்றும் ஒடுங்கியும் கொடுக்குமல்லவா? 'குவார்ட்ஜ்' படிகத்தைப் போல் அவ்வளவு இலகுவில் அவ்வளவு விரைவில் அகன்று ஒடுங்கி அதாவது

அசைந்து கொடுக்கும் பொருள் வேறு எதனையும் குறிப்பிட முடியாது. ஆகவே ‘குவார்ட்ஜ்’ படிகத்தின் ஒரு புறத்தை, மாறி மாறி யுண்டாகும் மின்சாரக் கம்பியின் ஒன்றில் நன்றாய்ப் பொருத்தி, மறு பக்கத்தில் மற்ற கம்பி மெதுவாய் தொட்டுக் கொண்டிருக்கச் செய்ய வேண்டும். ஆகவே மெதுவாய் தொட்டுக் கொண்டிருக்கும் பக்கம் மாறி மாறி யுண்டாகும் மின்சாரத்தால் தட்டு தடங்கலின்றி அசைந்தாடும்.

அளவுக்குத் தகுந்தவாறு அசைந்தாடும் சக்தி உண்டாகும். மெல்லிய தகடாயிருந்தால் சுமார் 20 லட்சம் தடவை (வினாடிக்கு) அசைந்தாட வல்லது. ஆனால் அதனால் ஏற்படும் சக்தி அவ்வளவு பலம் பொருந்தியதாயிராது. சுமார் $\frac{2}{25}$ அங்குலம் தடிப்பாயுள்ள ‘குவார்ட்ஜ்’ படிகம் வினாடிக்கு 40 லட்சம் முதல் 80 லட்சம் தடவை அசைந்தாடும் சக்தியுள்ளது. ஆனால் சுமார் $\frac{1}{5}$ அங்குலம் தடிப்பான படிகம் வினாடிக்கு சுமார் 4 லட்ச முதல் 8



ஊடேயிருப்பது குவார்ட்ஜ் படிகத் தகடு. மேலிருப்பது அமிழ்த்தும் தடி. படிகத்தை பலமாக அமிழ்த்தியதும் இருபுறங்களிலுள்ள வளையங்களில் மின்சாரம் உண்டாவதைத் தெரியலாம்.

மாறி மாறி யுண்டாகும் மின்சாரத்தை முன்பு கூறியது போல் மிகுந்த சக்தி வாய்ந்த ‘உஷ்ண மின்சாரக் கருவி’ (Powerful Valve Cricuit—Oscillator) அமைப்புகளால் உண்டாக்கப் படுகிறது. ‘குவார்ட்ஜ்’ படிகத்தின் தடிப்பின்

லட்சம் வரை அசைந்தாடும். இவ்வகையையுடைய ‘குவார்ட்ஜ்’ படிகத்தின் சக்தி மிகவும் பலம் வாய்ந்ததாயிருக்கிறது. பின்னால் கூறிய அளவுடைய படிகத்தினால் பலவித அற்புதமான காரியங்கள் செய்து காட்டப்பட்டிருக்கின்றன. இந்தப்படிகங்

கள் வெகு வேகமாக அசைந்தாடுவதால் அவைகளை காற்றில் ஆடச்செய்தால் திடீரென்று நொறுங்கிப் போகலாம். ஆதலால் 'குவார்ட்ஜ்' படிகத்தைச் சாதாரணமாக எண்ணெய் போன்ற திராவகங்களில் வைத்து அசைவுண்டாக்குவார்கள்.

பட்டு வருவதால் திராவகத்தை சிறிய கதிர் போன்று பல அடி உயரம்வரை வேகமாய் குமிழி போன்று எழும்பச் செய்யும் ஆற்றலுள்ளது.

ஒரு வினாடிக்கு சுமார் 750,000 தடவை அசைந்தாடும் போது மேற்



'குவார்ட்ஜ்' படிகத்தின் இரு புறங்களிலும் மாறி மாறியுண்டாகும் மின்சார அமைப்பில் இரு கம்பிகளால் பொருத்தி படிகத்தை கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள எண்ணெய் திராவகத்தில் வைத்து அசைந்தாடச் செய்வது.

கூறிய விந்தை யுண்டாகும் போது

இவ்வாறு திராவகங்களில் வைத்து 'குவார்ட்ஜ்' படிகம் அசைந்தாடும் போது அதன் மேல் பாகத்திலிருக்கும் திராவகத்தை பல அங்குல தூரம் உயரத்தில் எழும்பச் செய்யும் சக்தி வாய்ந்திருக்கிறதென்றால் அசைந்தாடும் வேகத்தை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். படிகம் தட்டையாயிருந்தால் அவ்விதம்; ஆனால் படிகம் உள் வளைவாக இருந்தால் அதின் அசைந்தாடும் வேகத்தாலுண்டான சக்தி மூனை கூட்டப்

கூறிய விந்தை யுண்டாகும் போது சிறிய ஜீவ ஜந்துக்களுக்கு அவ்வித அசைவைக் கொடுத்தால் என்ன ஆகுமென்று நினைக்கிறீர்கள்? சிறிய மீன் அல்லது தவளையை ஒரு கிளாஸின் தண்ணீரில் விட்டு அக் கிளாஸை அசைந்தாடும் படிகத்தை விட்டு வைத்திருக்கும் திராவகத்தின் மேல் வைத்தால் இரண்டு நிமிஷங்களில் அவைகள் விண்ணுலகை விரைந்து சென்று விடுகின்றன.



குவார்ட்ஜ் படிகம் வேகமாய் அசைந்தாடும் போது அதின் மேற்பாகத்தி லுள்ள திராவகம் பல அங்குலம் உயரம் வரை கொதித் தெழும்புகிறது.



'குவார்ட்ஜ்' படிகம் உள் ளவானதா யிருந்தால் திராவகம் எரிநீர் போன்று கூராகவெகு தூரம் எழும்புகிறது.

வெகு வேகமாய் அசைந்து கொண்டிருக்கும் 'குவார்ட்ஜ' படிகத்தின் சக்தியை அதனைச் சார்ந்திருக்கும் திராவகம் பெற்று தவளையுள்ள கிளாஸுக்குக் கொடுக்கிறது. கிளாஸும் அதிலுள்ள தண்ணீரும் அவ்வேகத்தினால் ஆடி தவளையிலுள்ள இரத்தத்தின் ஜீவ அணுக்களை வெகு வேகமாய் ஆட்டிக் கொன்று விடுகிறது.

சிறிய ஜீவராசிகளை இவ்வாறு கொல்லும் 'உணராச்ச[illegible]கம்' என்னும் வெகு வேகமாய் அங்கு மிங்கும் ஆடும் அசைவு, மிருதுவான செடி கொடிகளையும் ஆட்டி அச்சழிவாக்கவும் செய்கின்றன. தண்ணீர் தடாகங்களில் உண்டாகும் தண்டுகளை பலமான அசைவுகளால் தாக்கினால் அவைகளில் உள்ள அணுக்கூடுகளை அனர்த்தம் செய்து (Disruption of



அசைந்தாடும் படிகமுள்ள திராவகத்தின் மீது உயிருள்ள தவளை யொன்றை விட்டு வைத்திருக்கும் கண்ணாடிப் பாத்திரத்தை வைத்தால் ஓரிரு நிமிஷங்களில் தவளை இறந்து மிதக்கிறது.



தடாகங்களில் உண்டாகும் கள்ளி போன்ற தண்டுச் செடி.

சுமார் விநாடிக்கு 750,000 தடவை பலமாக அசைந்தாடும் படிகத்தால் ஆட்டப் பட்ட பிறகு அத்தண்டுச்செடி தோன்றும் மாதிரி.

Cells) தண்டுகளின் மேற்பாகங்கள் ஆங்காங்கு சுருங்கிப் போகின்றன.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் திராவகத்தை ஊற்றி அதனை 'குவார்ட்ஜ்' படிகத்தின் வேகமான அசைவால் கொதி தண்ணீர் போன்று குதித்துக் கொண்டிருக்கும் எண்ணெயின் மீது வைத்து விட்டால் என்ன ஆகுமென்று நினைக்கிறீர்கள்? கொதிப்புத்தான்! கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள திராவகம் சிறிது நேரத்திற்

படுவதில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இன்னும் இது போன்று அரிய பல செய்கைகளைச் செய்து காட்ட முடிகிறது. அவைகளை இவண் வளர்த்துக் கூற இடமில்லை.

நாம் தலையங்கத்தில் கூறியவாறு 'சுடுகிற சப்'தத்தைப் பற்றி இன்னும் விளக்கவில்லையே யென்று நினைக்கலாம். ஆனால் இதுவரை எடுத்துக் காட்டிய அரிய செய்கைகளிலிருந்து



ஒரு பாத்திரத்திலுள்ள திராவகம் வேகமாய் அசைந்தாடும் படிகத்தால் ஆட்டப்பட்டால் அத்திராவகம் கொதி நீராவி போல வெளிப்போவதைக் காணலாம்.

கெல்லாம் வெகு வேகமான ஆட்டத்தினால் ஆட்டப்பட்டு நீராவிபோன்று வெண்மை நிறத்துடன் காற்றில் கொதி நீர் போன்று பறந்து செல்லுகிறது. ஆனால் ஒன்று. கொதிநீராவி போன்று அவ்வளவு உஷ்ணம் ஏற்

ஒருவாறு சப்தம் எவ்வாறு தகிக்கிறதென்பதை உணர்ந்தேயிருக்க முடியும். நாம் மேலே கூறியவாறு 'குவார்ட்ஜ்' படிகம் வெகு வேகமாய் அசைந்தாடிக் கொண்டிருக்கும் போது, கீழே மூடப்பட்ட குழாயாக

வும் மேலே வெகு கூராக முனை கூட்டியதாகவு மிருக்கும் கண்ணாடிக் கூட்டை 'குவார்ட்ஜ்' படிகமுள்ள திராவகத்தில் வைத்து விட்டால் என்ன ஆகுமென்பதைக் கூறத் தேவையில்லை. அக்குழாய் படிகத்தின் வேகமான அசைவைக் கிரகித்து அசைந்து கொண்டிருக்கு மென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால் அசைவது ஒரு வினாடிக்கு 8 லட்சந் தடவைக்கு அதிகமா யிருப்பதால் நாம் கண்கொண்டு காண்பது கடினம். வீடுகளிலிருக்கும் மின்சார விளக்குகளில் மின்சாரம் வினாடிக்கு 50 தடவை மாறிமாறி ஓடிக்கொண்டிருந்தும் விளக்கு ஒரே தன்மையாக எரிவதாகவே நமக்குப் புலனாகிறது. கேவலம் வினாடிக்கு 50 தடவையைக் கண்டு கொள்ள முடியாத கண்ணுக்கு 8 லட்சம் தடவை அசைந்தாடுவது எவ்வாறு புலனாகும்?

இவ்வாறு அசைந்து கொண்டிருக்கும் கண்ணாடிக் குழாயின் மெல்லிய நுனிப்பாகத்தை நமது இரண்டு விரல்களால் சிறிது நேரம் பிடித்துக் கொண்டிருந்தால் அவ் விரல்கள் அளவுகடந்த உஷ்ணத்தை உணருகின்றன. இறுகப் பிடித்திருந்தால் அப்பாகம் நன்றாய் சுடப்பட்டு கருகிப் போவதைக் காணலாம். வெகு விரைவாக அசைந்து கொண்டிருப்பதால் ஏற்படும் சக்தி அவ்வசைவைத்



அடிப்பாகம் மூடி தடிப்பாகவும், மேற்பாகம் கூரியதாகவு மிருக்கும் கண்ணாடிக் கூட்டை வேகமாய் அசைந்தாடும் படிகத்தினருகில் வைத்து அக் கூட்டின் நுனிப்பாகத்தைப் பலமாகப் பிடித்தால் விரல்கள் தகிக்கப் பட்டு கருகிப் போய் விடும்.

தடுத்துக் கொண்டிருக்கும் விரல்களைத் தாக்கி உஷ்ண சக்தியாக மாறி நமது விரல்களைத் தகித்து விடுகிறது. இப்பொழுது மிருதுவான சிறிய மரத் துண்டை 'அக் கண்ணுடிக் குழாயின் நுனியில் வைத்தால் அம் மரத்துண்டு கருக்கப்பட்டு துவாரம் உண்டாக்கப் பட்டு விடுகிறது. சில சமயம் ஆடிக் கொண்டிருக்கும் கண்ணுடிக் குழாயும் பிளவுபட்டு நொறுங்கிப் போவது முண்டு.

ஆகவே சப்தம் அசைவினுலுண்டாகும் ஒரு செய்கை யென்ருேம். அளவு கடந்த அசைவுண்டானுல் அது 'உணரமுடியா சப்தம்' என்ருேம். இப்பொழுது அவ்வித அளவு கடந்த அசைவு கை, மரம் முதலியவற்றைத் தகிக்கிற தென்றும் காட்டினேம். ஆதலால் 'சப்தம் சுடும்' என்று கூறுவது மிகையாகா தல்லவா? இதனை வலியுறுத்தவே பிரம்பினுல் அடிபட்ட காயம் மாறு மென்றும் ஆனுல் நாவினுல் (சப்தத்தினுலுண்டான புன்சொல்) உண்டான வடுமாரு தென்பர்.

தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியில் 'உணரமுடியா ஒலி' என்னும் அளவிலா அசைவு அநேக புதிய மார்க்கங்களைத்திறந்துவிட்டிருக்கிறது. அமோகமான அசைவை திராவகங்களிலும், திடபதார்த்தங்களிலும் தாக்கி அவைகளின் தன்மைகளை ஆராய்ந்துவருகின்றனர். முக்கியமாய் ஜலபதார்த்தங்களின் பலவற்றை தெற்றெனப் புலப்படுத்தி யிருக்கிறது.

திராவகத்தினுள் வைக்கப்பட்டு 'குவார்ட்ஜ்' படிகம் வேகமாக அசைந்தாடச் செய்யப் படுகிறதென்ருேம். படிகம் அசைந்தாடாமலிருக்கும்போது அத்திராவகத்தினூடே அசைவு செல்லும் மார்க்கத்தின் குறுக்காக நீண்ட கூரிய வெளிச்சக் கதிரை அனுப்பிப் பிறகு 'குவார்ட்ஜ்' படிகத்தை வேகமாக அசைந்தாடச் செய்தால் அக்கூரிய நீண்ட வெளிச்சம் தற்சமயம் அடுக்கடுக்காய் அநேக நீண்ட வெளிச்சக் கதிர்களாகத் தோன்றும். இப்புதிய, விநோதமான செய்கையைக் கொண்டுதான் தற்சமயம் உலகத்தில் பலபாகங்களில் பலவித ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர். இதனை எழுதிவரும் 'விஞ்ஞானபோதக'ரும் கடந்த இரண்டாண்டுகளாய் இப்புதியமாதிரியான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கிருர். அவர் உபயோகிக்கும் 'குவார்ட்ஜ்' படிகத்தின் அளவு $\frac{4''}{5} \times \frac{4''}{5} \times \frac{2''}{25}$. படிகத்தை அசைந்தாடச் செய்யும் மின்சார ஆட்டத்தை யுண்டாக்கும் அளவை சுருள் கம்பியால் கூட்டக் குறைக்க முடிகிறது. அதனுல் படிகத்தை பலவித அசைவுகளைக் கொண்டு ஆடச்செய்யலாம். நமது 'விஞ்ஞானபோதகர்' தமது சிறிய படிகத்தை திராவக நீர் மட்டத்திற்குக் கீழ் அமிழ்த்தி 40 லட்ச முதல் 70 லட்சம் வரை அசைந்தாடச் செய்து அவ்வசைவுகளை திராவகத்தில் கீழ் நோக்கிச் செல்ல செய்ய முடிகிறது. அவ்வாறு செல்லும் சப்த அலைகளுக்குக் குறுக்காக ஒரு மட்டமான நீண்ட கூரிய வெளிச்சக் கதிரை அனுப்பி அவ்வொரு கதிர் அநேகமான கதிர்களாக அடுக்கடுக்காய் பிரிந்து நிற்கச் செய்ய முடிகிறது. அவ்வாறு பலவித திராவகங்களில் புகைப் படமெடுத்து அநேக ஆராய்ச்சி செய்ய ஏதுவாயிருக்கிறது. அவைகளில் ஒரு திராவகத்தில் (Xylol) 42 லட்சம் அசை

விலும் 72 லட்சம் அசைவிலும் ஏற்பட்ட தோற்றத்தைப்படத்தில் காணலாம். அசைவின் கணக்கை அலை அளக்கும்கருவி (Wave meter)யால் அளவிட முடிகிறது



42 லட்சம் அசைந்தாடும் வேகத்தால் பிரிந்து காணும் வெளிச்சக் கோடுகள்.

72 லட்சம் அசைவால் பிரிந்து காட்டும் வெளிச்சக் கதிர்கள். இவண் வெளிச்சக் கதிர்களின் சாரம் அதிகரித் திருப்பதைக் காண்க.

சராசரி துணி உபயோகம்

இந்தியாவில் சராசரி ஒரு நபருக்கு ஒரு வருஷத்திற்கு எத்தனை கஜ நீளம் துணி உபயோகத்திற்குத் தேவையாயிருக்கிற தென்பதைப் பற்றிய விவரம் வருமாறு:—

வருஷம்	ஒரு நபருக்கு சராசரி கஜம்
1900	7—79
1907—08	10—39
1913—14	13—29
1918—19	7—26
1927—28	12—11
1929—30	12—04

சிறு கதை

குமுதம்

—எஸ். கிருஷ்ணன்

கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே.

தினகரன் மேஜைமீதிருந்த காகிதங்களை அடுக்கிக் கட்டிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான். எதிரே சுவரில் மாட்டியிருந்த 'போட்டோ'வில் அவன் பார்வை பட்டது. அந்தப் படம் சென்றுபோன நாட்களையும் நிகழ்ச்சிகளையும் நினைவூட்டிற்று.

பத்து வருஷங்களுக்கு முன் வீட்டில் இருந்தாள்; தந்தை இருந்தார். ஆனால் தெய்வ இச்சையால் இருவரும் ஒரே நாளில் சிவனடியை அடைந்துவிட்டனர். அவர்கள் போனதுடன் தன்மீது பாரம் அதிகமாக ஏற்றப்பட்டது. அந்தச் சுமை—குமுதம்—அதை எவ்வளவு எளிதில் சுமந்து கொண்டு வந்தான்! ஆயிற்று. இன்னும் கொஞ்சம் நாள்; அப்புறம் அவளை யாரிடமாயினும் ஒப்படைத்துவிட்டு நிச்சிந்தையாய் இருக்கலாம். இப்படியே தினகரன் மனம் கற்பனையுலகில் உலாவிற்று.

குமுதம் கையில் காப்பியுடன் அறைக்குள் நுழைந்ததுகூட தினகரன் அறியவில்லை.

'அண்ணா! என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?' என்று குமுதம் தினகரனைத் தோளைப் பிடித்து அசைத்ததும் தினகரன் பெருமூச்சு விட்டுக் கொண்டே குமுதத்தினிடமிருந்து காப்பியை கையில் வாங்கினான்.

'என்ன அண்ணா? காப்பி சாப்பிடு!' என்று குமுதம் சொன்னதும் காப்பியை மேஜைமேல் வைத்தான். அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே பேச ஆரம்பித்தான்— 'குமுதம், அதோ இருக்கிறாள் பார், போட்டோவில். அவளும் குமுதம் தான். நீயும் குமுதமே. ஆனால் அன்றையிலிருந்து இன்றுவரை எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டன. எலி வால்போல் தலைமயிரும் அழுத முகமும் போயே போய்விட்டது. இப்போ பார் குமுதத்துக்கு ஸோப் 'பட்ஜட்' ரூபாய் ஒன்று மாதத்துக்கு. ஆம்; எல்லாம் காலத்துக்கு ஏற்ற கோலம். வேண்டியதுதான்—. குமுதம், 'போதும் அண்ணா, காப்பியைச் சாப்பிடு' என்று குறுக்கிட்டாள்.

காப்பியைக் குடித்துவிட்டு மறுபடியும் தினகரன் ஆரம்பித்தான்—'இன்னும் முக்கியமாக ஒரு மாறுதல் ஏற்

படும். உன்னை அம்மா என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றாள். சென்ற பத்து வருஷங்களாய் குமுதம், உன்னை நானே வளர்த்தேன். இனி உன்னை யாரிடமாயினும் ஒப்படைக்க வேண்டும். பத்து வருஷங்கள் மாயமாய்ப் பறந்தோடிவிட்டன. தலை வாரிப் பின்னி பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போனேன். இனி உனக்கு கலியாணமாய்—'

தினகரனுடைய கையிலிருந்து டம்ளரை வாங்கிக் கொண்டு குமுதம் கூடத்தில் போய் உட்கார்ந்தாள். ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி விட்டாள்.

'என்ன யோசிக்கிறாய் குமுதம்?' என்று கேட்டுக்கொண்டே தினகரன் கோட்டை எடுத்து அணிந்து கொண்டான்.

குமுதம் விழித்தெழுந்தவள்போல் 'அண்ணா!' என்று அழைத்தாள்.

'அண்ணா! முதலில் நீ கலியாணம் பண்ணிக் கொள். அப்புறம் என்னைப் பற்றி யோசி. இனி அண்ணா, வீட்டில் தனியே இருக்க முடியாது. உனக்கு யார் இருக்கிறார்கள் அண்ணா? படுத்துக் கொண்டால்—'

'ஆஸ்பத்திரி இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே தினகரன் ஆபீசுக்குப் போய்விட்டான்.

ஃ ஃ ஃ

இது நடந்த ஒரு மாதத்துக்கெல்லாம் மணம் நடந்தது.

'மதனி பெயர் என்ன?' என்று குமுதம் தினகரனைக் கேட்டாள்.

'உனக்குத் தெரியாதா? கமலம்' என்றான்.

'கமலா?' என்று திகைப்புடன் குமுதம் கேட்டாள்.

'அண்ணா! மதனி பேரை மாற்றி விடு. வாத்தியார் சொல்லியிருக்கிறார்—குமுதத்துக்கும் கமலத்துக்கும் ஆகவே ஆகாதாம். கமலம் மலர்வதும் குமுதம் குவிவதும் ஒரே காலத்திலாம்' என்று முடித்தாள்.

'அசடு வழியாதே' என்று சொல்லிக் கொண்டு தினகரன் எழுந்தான்.

'அண்ணாவுக்குக் கோபம் வந்துவிட்டது' என்று குமுதம் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவனைச் சாந்தப் படுத்துவதற்காக—'அண்ணா! மதனி ரொம்ப அழகாயிருக்காள். மதனி எப்படி யிருபபாளோ என்று முதலில் பயந்தேன். ஆனால் அவள் ரொம்பப் பிரியமாயிருக்காள். மதனி!' என்று அழைத்தாள்.

'நீயும் மதனி கிட்டப் பிரியமாயிருக்கணும்' என்று சொல்லிவிட்டு தினகரன் எங்கோ சென்றான்.

ஃ ஃ ஃ

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ஒருநாள் காலை தினகரன் குமுதத்தினிடம் கோபமாய் சொன்னான்—நீ மதனி கூட எப்போ பார்த்தாலும் சண்டை போடுகிறாயாம். இன்னும் கொஞ்ச நாள் நீ இங்கே இருப்பாய். ஏன் இப்படி சண்டை போடுகிறாய்?'

'இல்லை அண்ணா. மதனி என்கிட்ட மாட்டைக் கறக்கச் சொன்னாள். 'எனக்குத் தலை வலிக்கிறது; கறக்க முடியா' தென்றேன். அதுக்கு அவள் என்ன சொன்னாள் தெரியுமா? நான் செல்லக் குரங்காய் விட்டேனாம்; நீதான் அப்படி உருப்பிடிக்காமல்

பண்ணினுயாம். நேற்று வந்த இவள் என்னை வைய்ய என்ன அதிகாரம் அண்ணு?'

'ஏது நீங்கள் சண்டை போட்டுக் கொண்டு என் மானத்தைக் கெடுத்து விடப் போகிறீர்கள்' என்ருன் தின கரன். அவனுக்கு முதன் முறையாக வீட்டுச் சண்டையின் அனுபவம் ஏற் பட்டது.

குமுதம், 'அண்ணு' நான் சண்டை போடவில்லை. இனிமேல் மதனி சொல்கிறது போல் நடந்து கொள்கி றேன்' என்ருள். அண்ணனுடைய மானத்தைக்காப்பாற்ற வேண்டாமா?

குமுதம் பிறகு ஒரு மாதம் வரை சண்டைக்கிடம் கொடுக்கவே யில்லை. ஒரு மாதம், இரண்டு மாதங்கள் சென்றன.

ஃ ஃ ஃ

ஒரு நாள் மாலை, 'குமுதம்' என்று அழைத்துக் கொண்டே தினகரன் வீட்டுக்குள் நுழைந்தான். கையில் ஒரு பந்து ஜவந்திப் பூவிருந்தது.

கையில் காப்பியுடன் வந்து கொண் டிருந்தாள் கமலம். அவளைப் பார்த் ததும் தினகரன், 'குமுதம் எங்கே? அவளுக்குப் பூ வாங்கி வந்திருக்கி றேன். வரச் சொல்லு' என்ருன்.

'கழுதை எங்கே போச்சோ?' என்று அலக்ஷியமாய் பதில் வந்தது. 'கழுதையா? யாரு? என்ன சமா சாரம்?' என்று திகைப்புடன் தின கரன் கேட்டான்.

'உங்களுடைய அருமைத் தங்கை'. —தினகரன் குறுக்கிட்டு—'வர்ணனை யில்லாமல் சமாசாரத்தைச் சொல்லு 'பார்க்கலாம்' என்ருன்.

கமலத்தின் முகம் சிவந்தது. கண் ணீர் ஓட ஆரம்பித்தது. விக்கி அழுது கொண்டே சொன்னுள்—உள்ளத் தைச்—சொ—ன்னுல் உடம்பு எரிச் சல். அடிபடணும்; வசைவதை எல் லாம் பட்டுக் கொண்டு வாயையும் திறக்கக் கூடாது?'

'பொறுக்க முடியவில்லை தொந் தரவு. எங்கேனும் தொலைந்து போய் விடட்டுமா?' என்று தலையில் கையை வைத்துக் கொண்டான் தினகரன்.

கமலம் அவன் முன் காப்பியை வைத்தாள். 'பொன்னூசி என்ருல் கண்ணில் குத்திக் கொள்வதா? வாயில் வந்தபடி 'தேவடியாள், கொலைகாரி' என்று அவள் வைது கொண்டிருப்பாள். நான் பேசாமல் கேட்டுக் கொண்டிருக்கணுமாக்கும்? ஏன்? உங்கள் தங்கை உங்களுக்கு, எனக்கு யாருமல்ல?' என்று சொல்லி முடித்தாள். தினகரன் கையிலிருந்த டம்ளரை வீசி காப்பியைக் கொட்டி ஞன். டம்ளர் கீழே விழுந்து நசுங் கிற்று.

இதற்குள் குமுதம் வந்து சேர்ந் தாள். 'அண்ணு' என்று கூப்பிட் டுக் கொண்டே அறைக்குள் நுழைந் தாள்.

'என் மனுஷாள் எங்கிருக்கிருளோ அங்கே போய் விடுகிறேன் அண்ணு. அம்மா இல்லாததால் தானே இப்படி நடக்கிறது.—'

'அம்மா இல்லாததால்' என்ன குறைந்து விட்டது உனக்கு? பண் ணுவதெல்லாம் பண்ணி விட்டு நீலிக் கண்ணீர் வேறு!' என்ருன் கடிந்த குரலில்.

அவன் இப்படி கோபித்துப் பார்த்ததே இல்லை. குமுதம் கண் சிவக்கப் பார்த்தது கூட இல்லை. ஆனால் இன்று திடீரென்று இப்படி ஏன் கோபிக்கிறான்? தாய் இல்லாததால் என்னை எல்லாரும் அசட்டை செய்கிறார்கள்' என்று குமுதம் தானாகவே முடிவு செய்து கொண்டாள்.

தினகரன், 'இது வரை பத்து வருஷ காலமாய் நான் குமுதத்துக்காகச் செய்ததெல்லாம் வீண்; தாய் சொன்னது போல் செய்து காட்ட முடியாமல் போய் விட்டதே. இந்த அவலம் ஏற்படும் என்று தெரிந்தால் கலியாணமே பண்ணிக் கொண்டிருக்க மாட்டேன். சீ! நான் பைத்தியக்காரத்தனமல்லவா செய்தேன்!' என்று மனம் கலங்கினான்.

மறுபடியும் குமுதம் யோசித்தாள். 'நான் தவறல்லவா நினைத்தேன்? இவ்வளவுக்கும் காரணம் நான்தான். அண்ணன் செய்ததை எல்லாம் மறந்து அவனை தூஷிப்பதா? மதனி பேரில் தவறில்லை' என்று குமுதம் தன்னை நொந்து கொண்டாள்.

'அவமானம்! தன் தங்கையைச் சொன்னதால் இவ்வளவு கோபம்! நான் குமுதத்தின் முன் மதிப்பற்றவள் ஆகிவிட்டேன்' என்று எண்ணினாள் கமலம்.

'நீ மறுபடியும் பழைய குமுதமாய் விடம்மா. இந்தச் சண்டை-சச்சரவை மறந்து விடு. என்னால் பொறுக்க முடியவில்லை. ஏன் என் மனதைப் புண்படுத்தி நீயும் வருத்தப்படுகிறாய்? முன் போல் என் தங்கையாகி விடு. கமலத்தை உன் அக்காள் போல் நினைத்துக்கோ. நீதானே என்னைக்கலியாணம் பண்ணிக்கச் சொன்னாய். நாம் சந்தோஷமாயிருந்தால் தானே நம்மைப் பிரிந்து போன அம்மாவுக்கு மனச் சாந்தி ஏற்படும்?' என்று கெஞ்சினான் தினகரன்.

குமுதம் தன் அண்ணன் முன் வந்து நின்றாள். எதிரே மாட்டியிருந்த பெற்றோரின் போட்டோவைப் பார்த்துக் கொண்டே பேச ஆரம்பித்தாள் :—

'மதனி, புல்காரன் புல் கொண்டு வர வில்லை; கொஞ்சம் புல் கொத்திப் போடலாம் மாட்டுக்கு' என்று சொன்னேன். முடியும் முடியாது என்று சொன்னால் போதாதா? நான் அநாதையாம். இந்த வீட்டில் இருந்து பிழைப்பதற்கு எனக்கு ஆசை இருந்தால் அடங்கி ஒடுங்கி கிடக்கணுமாம். அவளைப் புல் பிடுங்க யாரும் கூட்டிக் கொண்டு வரவில்லையாம். மாடு எப்படிப் போனாலும் கவலையும் இல்லையாம். இப்படிச் சொன்னால் எனக்குக் கோபம் வருமா வராதா? நம்ப நலத்துக்காகச் சொன்னால் கூட கெடுதலாய் நினைத்தால் நான் என்ன செய்வது அண்ணா?'

'இந்த வீட்டில் எப்படித் தான் இருந்து பிழைப்பதோ!' என்று சொல்லிக் கொண்டு தினகரன் எழுந்தான்.

'நான் போய் விட்டால் எல்லாம் சரியாகும்' என்றாள் கமலம்.

'போய்விடு' என்று சுருக்கமாய் தினகரன் சொன்னான்.

'போனால் ஒரு நாள்தான் திரும்பி வருவேன்' என்று சொல்லிக் கொண்டே கமலம் உள்புறம் சென்றாள்.

மறுநாள் கமலம் தன் பிறந்தகம் சென்றாள்.

ஃ ஃ ஃ

'குமுதம்!' என்று அழைத்தான் தினகரன். அவனுடைய வாடிய முகத்தைப் பார்த்துக்கொண்டே குமுதம் சொன்னாள்—

'அண்ணா, நான் மதனிக்கு எழுதுகிறேன்'.

'என்னாலே, அவள் பேச்சுப் பேசக் கூடாது' என்று ஆத்திரமாய் தினகரன் சொன்னான்.

குமுதம் பயந்து போய் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்................

தினகரன் வெகுதூரத்தில் தெரிந்த நீல வானைக் கவனித்துக் கொண்டே யோசனையில் ஆழ்ந்தான்.

திடீரென்று மழை மேகம் தென்பட்டது. தினகரன் கண்களை மூடிக் கொண்டான்.

'குமுதம், அதோபார், பளிச்சென்றிருந்த நீல வானம் திடீரென்று கருத்து விட்டது பார். ஆம்; நம் வாழ்க்கையிலும் அப்படித் தானே. நிலாப் பூத்த அந்த நாட்கள் வந்து விட்டனவே' என்றான் மெல்லிய குரலில். குமுதம் பதில் சொல்லவில்லை.

தினகரன், 'எனக்கு மதனியை அழைக்க ஆசையில்லை என்று நினைக்கிறாய் குமுதம்? மறுபடியும் சண்டை சச்சரவு! இதைப் பொறுக்க முடியாது. அம்மா உன் முகம் வாடக் கூடாது என்று சொன்னாள். ஆனால் கமலம் வந்தால்................' என்று சொல்லிப்பேச்சை அரை குறையாய் நிறுத்தினான்.

குமுதம்....'அண்ணா! என்னை யாருக்காவது கலியாணம் பண்ணிக் கொடுத்து விடு சீக்கிரம். நான் போய் விடுகிறேன்' என்றாள்.

சுவரில் மணி 'டிங் டிங் டிங்' என்று மூன்றடித்தது.

'மணி கூட அடிக்கிறது பார்த்தாயா அண்ணா' என்றாள் குமுதம்.

ஃ ஃ ஃ

தினகரனுக்கு 'டைபாயிட்' ஜுரம். குமுதம் வெயிலில் வாடிய மலர் போல் துவண்டு போய் விட்டாள். மூன்று வாரம் இரவு பகல் தூக்கமில்லாமல் உழைத்தாள். கடன் வாங்கி மருந்து கொடுத்து தினகரனை காப்பாற்றினாள். மாடு தீனியில்லாமல் கவனிப்பாரில்லாமல் எங்கோ போய் விட்டது.

'தானும் படுத்துக் கொண்டு விட்டால் என்ன ஆகும்?' என்று கேள்விக்குப்பதில் அறிய குமுதம் முயன்றாள்.

'அண்ணா இட்ட ஆணை வாய்ப் பூட்டாகி இருந்தது. மதனியைப் பற்றிப் பேசுவதா;

ஃ ஃ ஃ

குமுதம் படுத்து விட்டாள். படுக்கையிலிருந்த படியே சொன்னாள்— அண்ணா! நானும் படுத்து விட்டேன். இனி?........மதனியில்லாமல் முடியவே முடியாது. உன்னை நான் காப்பாற்றினேன். மதனி உன்னைக் காப்பாற்றுவாள். அவளில்லாமல் முடியாது. அவளை எனக்காக நீ அழைக்க மாட்டாயா?' என்று கெஞ்சினாள்.

ஃ ஃ ஃ

'என் குமுதம் ஜுரமாய் படுத்திருக்கிறாள். அவளை நீ தான் காப்பாற்ற வேண்டும். உன்னைப் பார்க்க ஆசைப் படுகிறாள். உடன் புறப்பட்டு வந்து சேரவும்.

உன் தினகரன்'

ஃ ஃ ஃ

கமலம் மூன்று மாதமாய் கணவனுடைய அழைப்புக் கடிதத்தை எதிர் பார்த்தாள். கோபம் நாளடைவில் சாந்தமாய் விட்டது. ஆனால் அபிமானம் குறுக்கே நின்றது. 'அழைக்காமல் போவதாவது?' என்று கமலம் தன்னைப் பன்முறை உபதேசித்தாள். கடிதம் கிடைத்ததும் உடன் புறப்பட்டுச் சென்றாள்.

கணவன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்துத் திகைத்துப் போய் ஸ்தம்பித்து நின்றாள்.

'உங்க உடம்புக்கென்ன?' என்று மெதுவாய் கேட்டாள்.

'டைபாயிடாக இருந்தது'...........

கட்டிலில் குமுதம் படுத்திருப்பதைக் கண்டாள். சுய நினைவில்லை. ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தாள் குமுதம். குமுதம் வாடும். கமலம் மலரும். நிஜந்தான். அன்றைக்கு வாத்தியார் அப்படித்தானே சொன்னார். அப்படியே தான் நடக்குமோ? என்னமோ, நடப்பதை யாரால் தடுக்க முடியும்? ஆம். நம்ப மாடு தான் எங்கே போயிற்று? மாட்டுக்காகச் சண்டை போட்டேன் மதனி கிட்ட. அவள் கிட்ட மன்னிப்புக் கேட்டு விட்டால் போகிறது. நான் அவளைவிடச் சின்னவள் தானே!

திடீரென்று குமுதம் கண் திறந்து திரும்பிப் பார்த்தாள். 'மதனி' என்று வெறி பிடித்தவள் போல் கூப்பிட்டாள். 'நீ ஒரு நாள் வருவேன்' என்று சொல்லி விட்டுப் போனாய். அந்த நாள்தான் வந்து விட்டது. இனி உன்பாடு; அண்ணா பாடு. நான் ஒன்றும் சொல்ல மாட்டேன் அம்மா!' என்று முடித்து விட்டுத் திரும்பிப் படுத்தாள்.

குமுதம் மறுமுறை கண்ணைத் திறந்தாள். கமலத்தின் கைகளைத் தன் நெற்றியில் எடுத்து வைத்துக்கொண்டு குமுதம் கண்களை மூடினாள். பேச ஆரம்பித்தாள்............'மதனீ, நான் சின்னவள் தானே. என் வார்த்தைக்கு இவ்வளவு கோபம் வரலாமா? சரி, நீ வந்து விட்டாயே. என்னை மன்னித்து விடு. அண்ணா மூன்று வாரமாய் ஆச்சுப் போச்சு என்று கிடந்தான். நான் அவனைக் காலன் வாயிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்து உன் கையில் கொடுத்திருக்கிறேன். இனி நீ அவனை விட்டு விட்டுப்போகாதே. எனக்கு ஒரே அண்ணா. அவனுக்கு உன்னைத் தவிர வேறு யாருமில்லை.'

தினகரன், 'குமுதம், டாக்டர் சொன்னார் பார். அதிகமாப் பேசாதேயம்மா!' என்று இடறிய குரலில் சொன்னான்.

குமுதம் திரும்பிப் படுத்தாள்........
காலையில் கடிகாரம் 'டிங் டிங்' என்று ஏழு முறை அடித்து விட்டு மௌனமாயிற்று.

'குமுதத்துக்கு மருந்து கொடு.வழடித்து விட்டது' என்று தினகரன் கமலத்தினிடம் சொன்னான்.

'குமுதம்!' என்று அழைத்துக் கொண்டே கமலம் அவளைப் புரட்டிப் பார்த்தாள்.

மறுகணம் 'ஐயோ' என்று தரையில் சாய்ந்தாள்.

நமது நிருபர்களுடன்

காங்கிரஸ் தலைவர்

அன்புள்ள ஆசிரியரவர்களே!

1. இவ்வருடம் காங்கிரஸ் மகா சபைக்கு யார் தலைவராக வரக்கூடும்? இதை நமது 'ஜோதி'யின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2. அஹிம்சையை அனுஷ்டிககும் விதிகளைப் பற்றி ஏதாவது நூல்கள் வெளி வந்திருக்கின்றனவா? வந்தி ருந்தால் அவைகள் என்னென்ன? இதை நமது 'ஜோதி'யின் மூலம் தெரியப்படுத்துவீர்களாக.

—ஈ. திருஞானம்

1. நமக்கு ஜோதிடத்தில் புலமை யில்லை. ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸும் டாக்டர் பட்டாபி சீதா ராமய்யாவும் தலைவர் பதவிக்கு அபேட்சகர்களாய் நிற்கிறார்கள் என்பது மட்டும் தெரியும். இன்னும் சில நாட்கள் பொறுத்தால் விஷயம் தெளிவாகி விடுகிறது.

2. இதே மாதிரியான கேள்வியை வேறோர் அன்பர் கேட் டிருக்கிறார். அதன் விடையைக் காண்க.

—ஆசிரியர்.

கம்பிச் செய்தி

ஐயா,

1. பர்மாவுக்கும், இந்தியாவுக்கும் போக்குவரத்தாயுள்ள தந்திச் செய்தி கள் சமுத்திரக் கரையின் ஓரமாய் போய்க் கொண்டிருக்கிறதா? சமுத் திரத்தினுள் போய்க் கொண்டிருக்கி றதா? என்று நண்பர்கள் கேட்டார் கள். அதற்கு, நான் சமுத்திரக் கரையின் ஓரமாய்த்தான் போய்க் கொண்டிருக்கிற தென்று சொன னேன். நண்பர், 'அப்படியல்ல. சமுத் திரக் கரையினுள்தான் போய்க் கொண்டிருக்கிற' தென்று சொன்னார்.

2. டெலிப்போன் எதன் மூலம் இந்தியாவுக்குப் போகிற தென்று கேட்டேன். நண்பர் மேலெழுதிய படி சமுத்திரத்தினுள்ளே தான் போகிற தென்று சொன்னார். நான் அவைகளை மறுத்துக் கூறினேன். அதற்கு நண்பர் தங்கட்கு எழுதிக் கேட்டால் அதன் உண்மை விளங்கும் என்று சொன்னார்.

தாங்கள் மேலெழுதிய இரண்டு விடைகட்கும் நம் 'ஜோதி'யின் மூலம் பதில் தரவேணுமாய்க் கேட் டுக் கொள்கிறேன்.

—ஏ. இராமநாதன்

இரங்கூனிலிருந்து சென்னைக்குத் தந்திச் செய்திகள் 'ஒயர்லெஸ்' என்று கூறப் படும் கம்பியில்லாத் தந்தி மூல மாக அனுப்பப் படுகின்றன.

ஆனால் இரங்கூனிலிருந்து கல்கத் தாவுக்குத் தந்திச்செய்திகள் தரைமார்க் கமாகக்—கம்பித் தந்தி மூலமாக—அக் யாப் நகர் வழியாக அல்லது அஸ்ஸாம் வழியாக—அனுப்பப் படுகின்றன.

2. இரங்கூனிலிருந்து சென்னைக்கு 'டெலிபோன்' செய்திகள் தந்திச் செய்திகளைப் போல கம்பி யில்லாத் தந்தி மூலமாகவே நடை பெறுகின்றன. ஆனால் இரங்கூனுக்கும் கல்கத்தாவுக்கும் நேரடியாக 'டெலிபோன்' தற் சமயம் கிடையாது. வேண்டுமென்றால் சென்னை வழியாகத் தான் பேச முடியும்

குறிப்பு: 'கேபில்கிராம்' (Cablegram) எனப்படும் சமுத்திரத்தின் வழியாக அனுப்பப்படும் கம்பிச் செய்திகள் சாதாரண காலங்களில் கையாளப் படுவ தில்லை.

—*ஆசிரியர்.*

சாரதா சட்டம்

ஐயா,

இப்பொழுது இந்தியாவில் சாரதா சட்டத்திற்கு விரோதமாகத் தெரியாத இடத்தில் ரகசியமாக விவாகம் செய்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அது நமக்குத் தெரிகிறது. அதை யாருடைய உதவியினால் கல்யாணம் நடக்கவொட்டாமல் தடுக்கலாம்? இதற்குக் கவர்ன்மெண்டார் ரகசியமாக தனிஸ்தாபனம் வைத்து வேலை செய்து வருகிறார்களா?

—K. P. K. R.

வெறும் ஊகத்தின் பேரில் தான் அன்பருக்கு இந்தச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிற தென்று, இந்தக் கடிதத்தின் முதல் வாக்கியத்திலிருந்து தெரிகிறது. சமூகக் கட்டுப் பாட்டினால் இந்த மாதிரியான விவாகங்களைத் தடுக்கலாம். இதற் கென்று அரசாங்கத்தார் எவ்வித ரகசிய ஸ்தாபனத்தையும் வைத்து நடத்த வில்லை.

—*ஆசிரியர்.*

சமஸ்தானங்கள்

அன்பு நிறைந்த ஆசிரியரே!

கீழ்க்கண்ட என்னுடைய கேள்விக்குத் தங்கள் பத்திரிகையின் மூலம் பூரணமாக ஆதரித்து விளக்குமாறு வணங்குகிறேன்.

அகில இந்தியாவிலுமுள்ள சமஸ்தானங்களின் பெயர், விஸ்தீரணம், ஜனத் தொகை, வருமானம், சர்க்காருக்குச் செலுத்தும் வரி, ஒவ்வொரு சமஸ்தானத்திலும், தற்சமயம் உள்ள ஆட்சி முறையைப் பற்றிய விபரம் தெரிவிக்கும்படி கோருகிறேன்.

—*ப. இ. ராமநாதன்*

நண்பர் கேள்வி கேட்க வில்லையே. ஒரு பெரிய நூலன்றோ எழுதும்படிச் சொல்கிறார். 'மின்னொளி பிரசுர' வரிசையில் 'சமஸ்தான இந்தியா' என்ற இரண்டணா விலையுள்ள ஒரு புஸ்தகத்தை அன்பர் படித்துப் பார்க்குமாறு சிபார்சு செய்கிறோம்.

—*ஆசிரியர்.*

ஆச்சரியமான சந்தேகங்கள்

அன்புள்ள ஐயா!

1. *உலகத்தின் முக்கிய பாஷைகளைத் தோண்டெடுப்பது யார்?*

2. *ஜெர்மனி டாக்டர் எச். பெய்த் தான் அவர்களின் முழு விலாசம்*

'ஜோதி'யின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

3. 'ஜோதி'க்குக் கட்டுரைகள் முதலியன எழுதினால் பரிசு வழங்கப் பெறுமா?

—பழ. முத்தையா

1. இதற்கென்று சர்வாதிகாரி ஒருவர் இருப்பதாக அன்பர் கருதுகிறாரா என்ன? இல்லை, இல்லை. எல்லாம் பாஷா விற்பன்னர்கள் செய்கிற விஷமந்தான்.

2. தனிப்பட்ட நபர்களுடையவிலாசத்தை பகிரங்கமாகத்தெரிந்து கொள்ள நண்பர் ஏன் இவ்வளவு ஆவல் கொள்ள வேண்டும்?

3. பரிசு வாங்குவதை விட, பரிசு கொடுப்பது மேலல்லவா? நண்பர் இந்தக் கொடையாளர் வரிசையில் ஏன் சேர்ந்து கொள்ளக் கூடாது?

—ஆசிரியர்.

அர்ஜுனன்

அன்புமிக்க ஆசிரியரவர்களே!

அர்ஜுனனுக்கு எத்தனை பெயர் என்பதை தயவு செய்து நமது 'ஜோதி'யின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

—வேங்கடசாமி

பற்குனன், பார்த்திபன், கிரீடி, ஸ்வேத வாகனன், விஜயன், காண்டீபன், சவ்விய சாசி, தனஞ் செயன், முதலிய பெயர்களுண்டு. அர்ஜுனனுடைய இத்தனை பெயர் களையும் தெரிந்து கொண்டு நண்பர் என்ன செய்யப் போகிறார்? அவனுடைய வீரத்தை அறிந்து கொண்டு அதனை நமது அன்றட வாழ்க்கையிலே கொண்டு புகுத்த முயற்சி செய்யலாகாதா?

ஆசிரியர்.

பத்திரிகைகள்

பேரறிஞர் அவர்களே!

1. பொதுவாகப் பத்திரிகை ஆசிரியர் தொழிலுக்கு ஒருவர் எந்தெந்த முறையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்?

2. இந்தியாவில் தமிழ் பத்திரிகைகள் மொத்தம் எத்தனை உள்ளது?

3. மஹாத்மா காந்தியின் அஹிம்சையைப் பற்றி விபரமான புத்தகம் ஏதாவது வெளி வந்திருக்கிறதா?

—சுந்தரம்

பொதுவாக ஒரு பத்திரிகாசிரியர், தம்முடைய நாவை விட எழுதுகோலைத் தடிப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். உரலுக்கு ஒரு புறம் இடி; மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி; பத்திரிகாசிரியருக்கு நான்கு பக்கமும் இடி. இந்த நான்கு பக்கத்து இடிகளையும் தாங்கிக் கொள்ளும் சக்தி பெற்றுக் கொள்ள வேண்டும். உலகத்தை ஆழ்ந்து பார்க்க வேண்டும். ஆனால் நம்மையும் உலகம் ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருக்கிற தென்பதை மறந்துவிடக் கூடாது. எல்லாம் தெரிந்திருக்க வேண்டும், ஆனால் ஒன்

றுந் தெரியாதவன் போல் அடங்கியிருக்க வேண்டும். ஒரு செங்கோலுக்குள்ள செல்வாக்கை விட ஓர் ஆசிரியனுடைய எழுதுகோலுக்கு அதிக செல்வாக்கு உண்டென்பதை உணரும் சக்தி பெற வேண்டும். இப்படியே பத்திரிகாசிரியர்களுடைய தகுதிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் நண்பர் பத்திரிகாசிரிய பீடத்தில் அமர விரும்புகிறாரா? 1938ம் வருஷ ஜூன் மாதத்து "ஜோதி" யை (71ம் பக்கம்) அன்பர் இது சம்பந்தமாகப் படித்தல் நலம்.

2. இந்தியாவில் பத்திரிகைகள் தினந்தோறும் பிறந்தும் இறந்தும் வருகின்றன. இதற்குக் கணக்கு எப்படி எடுத்து வைக்க முடியும்?

3. காந்தியடிகளின் அஹிம்சைத் தத்துவத்தை விளக்கி விவரமான புத்தகம் தமிழில் ஒன்றும் வெளி வந்ததாகத் தெரியவில்லை. நண்பருக்கு ஹிந்தியில் நல்ல பயிற்சியிருக்குமானால் வார்தாவினின்று வெளியாகும் 'சர்வோதயா' என்ற ஹிந்தி மாதப்பத்திரிகையை வரவழைத்துப் பயன் பெறலாம்.

—ஆசிரியர்.

ஹரிஜன ஆலயப் பிரவேசம்

அன்புள்ள ஐயா,

ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயம் சநாதனிகளிடம் மிக்க பரபரப்பை உண்டாக்கி வருகின்றது. பாமர மக்களும் தீண்டாமையை அனுஷ்டித்தே வருகிறார்கள். இப்படியிருக்க, சட்ட மூலம் கட்டாயமாகக் கோயில்கள் தீண்டத் தகாதவர்களுக்கு திறக்கப் படுவது சரியா என்னும் கேள்வி எழுப்பப் படுகிறது. இவ் விஷயமாக "ஜோதி"யின் அபிப்ராயம் தேவை.

—ஸ்ரீ ரா.

சட்ட மூலம் கட்டாயப் படுத்த வேண்டுவது மிகவும் அவசியம். குழந்தையின் வயிற்றினுள் இருக்கும் கல்மஷங்களைப் போக்க, அதனைக் கட்டாயப் படுத்தித்தான் விளக்கெண்ணெய் போட்டுகிறோம். தேகத்திலே யுள்ள புண்ணை ஆற்றிக் கொள்ள வேண்டுமானால், டாக்டரின் கட்டாய ஆபரேஷனுக்குத்தான் உட்பட வேண்டும். மலையாள ஜில்லா சம்பந்தப் பட்ட மட்டில் ஹரிஜன ஆலயப் பிரவேசம் அநுமதிக்கப்படுவதன் சம்பந்தமாக சென்னை அஸெம்பளியில் வாதம் நடைபெற்றபோது பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியார் நிகழ்த்திய அருமையான சொற்பொழிவை அன்பர் மீண்டும் படித்துப் பார்க்கக் கோருகிறோம்.

—ஆசிரியர்.



1938

டிசம்பர்

30 இன்று பம்பாயில் மிதவாதிகளின் இருபதாவது மகாநாடு பி. என். சாப்ரு என்பவருடைய தலைமையில் கூடியது.

31 பிரான்ஸின் நிருவாகத்தின் கீழிருக்கும் டுனிஸ் பிரதேசத்தைத் தன்னிடம் கொடுத்துவிட வேண்டுமென்று இத்தலி கேட்கிறது. அது சம்பந்தமாக ரோமாபுரியில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தலி ஆகிய நான்கு வல்லரசுகளின் மகாநாடு நடக்குமென்று சொல்லப்படுகிறது.

எதியோப்பியாவில், இத்தாலிய அரசாங்கத்தை எதிர்த்து நிற்கிறவர்கள் கைது செய்யப்பட்டு உயிரோடு கொளுத்தப்படுகிறார்கள் என்று லண்டனில் பலத்த வதந்தி.

ஜனவரி

1 இத்தலியின் ஆதிக்கத்திற்குட் பட்ட லிபியா, எரீட்ரா, சோமாலி லாண்ட் முதலிய நாடுகளிலுள்ள சுமார் இரண்டாயிரம் முஸ்லீம்களை மெக்காவுக்கு புண்ணிய ஸ்தல யாத்திரைக்காக இத்தாலிய அரசாங்கத்தார் இலவசமாக அனுப்புகின்றனர். அராபியர்களுடைய நட்பைச் சம்பாதித்துக் கொள்வதற்காக இங்ஙனம் செய்வதாகச் சொல்லப்படுகிறது.

பாலஸ்தீன் சண்டையில் ஆண்டர்ஸன் என்ற ஒரு போலீஸ் அதிகாரி அராபியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பிரெஞ்சு அரசாங்கத்தின் 1939ம் வருஷத்து வரவு செலவுத்திட்டத்தை 1938ம் வருஷம் முடிவதற்குள்ளேயே நிறைவேற்ற வேண்டுமென்ற விதி காரணமாக, 1939ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி பிறப்பதை இருபது மணி நேரம் தள்ளி வைத்தனர்.

2 குஜராத் மாகாணத்திலுள்ள ஓரிடத்தில் தங்கம் ஏராளமாகக் கிடைப்பதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை கூறுகிறது.

கிறிஸ்தவர்கள் அனைவரும் காங்கிரஸில் சேர வேண்டுமென்று சென்னையில் டாக்டர் முகர்ஜி என்ற ஒரு கிறிஸ்தவ அறிஞர் பிரசங்கம் செய்தார்.

ஜெர்மனியில் 25 வயதுக்குட் பட்ட எல்லா ஸ்திரீகளும் ஒரு வருஷ காலம் அரசாங்கத்தார் விதிக்கிற வேலையைக் கட்டாயம் செய்ய வேண்டுமென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

ஸ்பெயினில் பிராங்கோ கட்சியினர் இன்று பிரிட்டிஷ் ஸ்தானிகரையும் அவருடைய மனைவியையும் கைது செய்து விட்டனர். மேற்படி ஸ்தானிகர், பிராங்கோ கட்சிக்கு விரோதமான சதியாலோசனையில் கலந்து கொண்டார் என்பதே இதற்குக் காரணம்.

3 சென்னை அரசாங்கத்தின் சிறைச்சாலை மந்திரியாயிருந்த கே. ராமன் மேனன் இன்று காலமானார்.

பாலஸ்தீனத்தில் ஓர் அராபியனைச் சுட்டுக் கொன்றதற்காக நான்கு பிரிட்டிஷ்

கான்ஸ்டேபில்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இன்று பிரெஞ்சு பிரதம மந்திரி யாகிய டலாடியர் டூனிஸுக்கு விஜயஞ்செய்தார். அங்குள்ள அராபியர்கள் உற்சாகத்தோடு வரவேற்று உபசரித்தார்கள்.

பாலஸ்தீனத்தில் தற்போது 2045 அராபியர்கள் காப்பில் வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

4 அமெரிக்க காங்கிரஸை இன்று பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் திறந்து வைத்த போது, உலகத்திலெங்கணும் யுத்தச் சூறாவளியடிப்பதாகக் கூறினார்.

ஸ்பெயின் யுத்தத்தில், சாலமாங்கா போர் முனையில் இன்று பிராங்கோ கட்சியினருக்குப் பெரிய வெற்றி. குடியரசுப் படையில் 1250 பேரைக் கைதி செய்தனர்.

பிரின்ஸ் கோனோயியைத் தலைமையாகக் கொண்ட ஜப்பான் மந்திரிச் சபை இன்று ராஜீநாமா செய்து விட்டது.

நியுயார்க் நகரத்தில் 11,000 வாடகை மோட்டார் ஓட்டிகள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கிறார்கள்.

பம்பாய் நகர சபைக்கு நடைபெறும் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கே. எப். நாரிமானை அபேட்சகராக பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியார் நியமனம் செய்திருக்கின்றனர்.

5 ஜப்பானில் ஹீராநூமா தலைமையில் புதிய மந்திரிச் சபை அமைந்து விட்டது.

சைப்ரஸ் தீவிலுள்ள ஜனங்கள் சுய ஆட்சி உரிமையைக் கேட்கிறார்களென்றும், அவர்களுக்கு அதனைக் கொடுப்பதுவே நியாயமென்றும் ஜெர்மானியப் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்கின்றன.

ஒரிஸா சமஸ்தானங்களின் ஏஜெண்டாகிய தளபதி பாஸெல் கெட்டி என்பவர், ரணபூர் சமஸ்தானத்தில் பொது ஜனங்களால் கொல்லப்பட்டார்.

6 போலந்தின் பிரதம மந்திரியான தளபதி பெக்கும் ஹிட்லரும் இன்று சந்தித்துப் பேசினார்கள்.

டூனிஸ் நகரத்தில் இத்தாலியக் கொடிக்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாக ரோமாபுரிப் பத்திரிகைகள் பெரிய கிளர்ச்சி செய்கின்றன.

1939ம் வருஷம் லிபியாவுக்கு 20,000 இத்தாலியர்கள் அனுப்பப் பெற்று குடியேற்றப்படுவார்களென்று ஒரு செய்தி கூறுகிறது.

ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் ஹங்கேரிக்கும் இடையிலேயுள்ள எல்லைப் புறத்தில் இரு நாட்டுப் படைகளுக்கும் சிறிய சச்சரவு ஏற்பட்டது.

இந்தியா காட்டும் அநுதாபத்திற்கு நன்றி பாராட்டி சீனாவிலிருந்தும் ஸ்பெயினிலிருந்தும் பண்டித ஜவஹர்லாலுக்கு செய்திகள் வந்திருக்கின்றன.

டேராடூன் தொகுதியில் காங்கிரஸ் பிரதிநிதி ஸ்தானத்திற்கு அபேட்சகராக நின்ற எம். என். ராய் தோல்வியடைந்தார்.

7 சென்னை மந்திரிச் சபையில், ஸி, ஜே வர்க்கி கல்வி மந்திரியாக நியமனம் செய்யப் பெற்றார். கல்வி மந்திரியா யிருந்த டாக்டர் சுப்பராயன் கோர்ட், சிறைச்சாலை மந்திரியாக மாற்றப் பட்டார்.

உலகத்தையே மாற்றியமைக்கும் நோக்கத்துடன்தான், சீனா மீது இப்பொழுது ஜப்பான் போர் தொடுத்திருக்கிறதென்று ஜப்பானிய ராணுவ தளகர்த்தர் ஒருவர் கூறுகிறார்.

யூதர்களின் குடியேற்ற விஷயமாக ஏதேனும் ஒரு வித சமரஸம் செய்து வைக்குமாறு அமெரிக்க பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் முஸோலினிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

லண்டன் துறைமுகங்களைப் பாதுகாக்கும் விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பந்தோபஸ்து அதிகமாகச் செய்திருக்கின்றனர்.

9 தொழுகை நடை பெறுங் காலங்களில் மசூதிகள் முன் மேளம் வாசிக்கக் கூடா

தென்ற கொள்கையை ஒப்புக்கொண்டு அஸ்ஸாம் அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

ஏனங்சயூங் பி. ஒ. சி. கம்பெனியில் வேலை செய்து பின்னர் வேலை நிறுத்தஞ் செய்த சுமார் 2500 தொழிலாளர்கள் இன்று ரங்கூனுக்கு ஊர்வலமாக வந்து சேர்ந்தார்கள். நகரப் பாதுகாப்புக்காக பிரிட்டிஷ் துருப்புகள் நகரத்தைப் பாரா கொடுத்த வண்ணமிருந்தன.

ஒரிஸா சமஸ்தானங்களின் ஏஜெண்ட் கொலை செய்யப் பட்டதன் காரணமாக ஒருபோலீஸ்உத்தியோகஸ்தர் சஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்.

ஹிட்லருக்கென்று வாசஸ்தலமும் உத்தியோகஸ்தலமுமாகக் கட்டப் பெற்ற பெரிய கட்டிடத்தில் இன்று கிரகப் பிரவேசஞ் செய்தார்.

சிந்து மாகாணத்தின் மாஜி பிரதம மந்திரிஸர் குலாம் ஹிதாயதுல்லா முஸ்லீம் லீக் அங்கத்தினர் பதவியை ராஜீநாமா செய்துவிட்டார்.

ஸ்பெயின் யுத்தத்தில் பிராங்கோவுக்கு வெற்றி கிடைத்து வருவதைக் கண்டு இத்தாலியப் பத்திரிகைகள் பெரிதும் மகிழ்ந்து எழுதுகின்றன.

கல்கத்தாவிலுள்ள பாட்டா நகர் பூட்ஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருந்தார்கள். இது சம்பந்தமாக இன்று போலீஸார் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி நேரிட்டது.

பாலஸ்தீனத்தில் அமைதியை நிலை நாட்டும் பொருட்டுப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் செய்து வரும் முயற்சிகளை விளக்கிக் காட்டி லண்டனிலிருந்து ஓர் அறிக்கை பிறந்திருக்கிறது.

10 சிந்து மாகாண மந்திரிச் சபையின் மீது இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் பட்டது.

இன்று, ராஜப் பிரதிநிதியான லார்ட் லின்லித்கௌ, தமது பரிவாரங்களுடன் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு விஜயஞ் செய்தார்.

பிராங்கோ கட்சியினர், அந்நியருடைய துணையை எவ்வளவு பெற்றிருந்தாலும் ஸ்பெயினை எளிதில் வெற்றி கொண்டு விட முடியாதென்று பண்டித ஜவஹர்லால் நேரு கூறுகிறார்.

கூடிய சீக்கிரம் உலக யுத்தம் ஏற்படுமென்றும் ஜெர்மனி உக்ரேனையாவது, இத்தலி டுனிஸையாவது தாக்குமென்றும், லண்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானீகர் கூறுகிறார்.

11 காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராகிய சங்கர ராவ்தவே, மஹாராஷ்டிரத்தில், காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தலில் அபேட்சகராக நின்று தோல்வியடைந்தார்.

இன்று காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டம் பார்தோலியில் கூடியது. பதினெட்டு வருஷத்திற்கு முன்னர் ஒரு முறை கமிட்டி கூட்டம் இங்குக் கூடியது.

சீனாவிலிருந்து வந்த இளைஞர்களின் பிரதிநிதிக் கூட்டமொன்று. இன்று மஹாத்மா காந்தியையும் பண்டித ஜவஹர்லால் நேருவையும் பேட்டி கண்டு பேசின.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி நெவிலவி சேம்பர்லேனும் லார்ட் ஹாலி பாக்ஸூம் இன்று ரோமாபுரிக்கு விஜயஞ் செய்தார்கள்.

போபால் சமஸ்தானத்தின் ஜனப்பிரதிநிதி சபையில், ஜனப்பிரதிநிதி ஸ்தானங்கள் இரண்டு அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

12 ஹவுரா-டேராடூன் எக்ஸ்பிரஸ் ரெயில் வண்டி, தான்பாட் என்ற ஸ்டேஷனுக்கு 60 மைல் தொலைவில் கீவிழ்ந்து விட்டதால் ஆறு பேர் மரணமடைந்தனர். 49 பேருக்குக் காயம்.

இன்று ரங்கூனில் பல தொழிற்சாலைகளிலும் வேலை நிறுத்தம் நடைபெற்றன. சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இன்று ரோமாபுரியில் முஸோலினியும் சேம்பர்லேனும் சந்தித்துப் பேசியதில்,

மன ஒற்றுமை ஏற்பட வில்லை யென்று சொல்லப் படுகிறது.

இன்று பார்தோலி காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் ஹிந்து-முஸ்லீம் சமரஸப் பிரச்னை வாதிக்கப் பட்டது.

அமெரிக்க ஐக்கிய மாகாண அரசாங்கம் யுத்த முஸ்தீபுக்காக 5200 லட்சம் டாலர் செலவழிக்கத் தீர்மானித்திருக்கிறது.

13 இன்று இராஜப் பிரதிநிதி லார்ட் லின்லித்கௌ மைசூருக்கு வந்து சேர்ந்தார்.

ஸ்பெயினில் பிராங்கோ கட்சியை ஆதரித்து, ஜெர்மானியர்களாலும் இத்தாலியர்களாலும் 19 ஆகாய விமான நிலையங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்று, அமெரிக்காவிலுள்ள ஸ்பெயின் குடியரசாங்க ஸ்தானிகர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஆம்ஸ்டர்டாம் நகரத்திலுள்ள ஜெர்மன் ஸ்தானிகர் மீது இன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

துருக்கியின் அந்நிய நாட்டு மந்திரியாக இருந்த ருஸ்டு அராஸ் லண்டனில் துருக்கிய அரசாங்கத்தின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சிந்து மாகாண சட்ட சபையில் மந்திரிச் சபையின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று தோல்வியுற்றது.

இத்தலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் இப்பொழுது ஹங்கேரியும் சேர்ந்து கை யெழுத்திட்டது.

ஸ்பெயின் யுத்தத்தில், எப்ரோ நதியின் முகத்து வாரத்திலுள்ள டோர்ட்டோஸா நகரத்தை பிராங்கோ கட்சியினர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

ரோமா புரிக்குச் சென்றுள்ள சேம்பர்லேனும், லார்ட் ஹாலிபாக்ஸும், இன்று போப்பரசரைப்பேட்டிகண்டுபேசினார்கள்.

14 பம்பாயில், காங்கிரஸ் மந்திரிகளின் நிருவாகத்தின் கீழ் முஸ்லீம்களுக்குப் பல குறைகள் இருக்கின்றனவென்று அகில இந்திய முஸ்லீம் லீக் கூறியதை மறுத்து, பம்பாய் அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

15 டாக்டர் கிச்சுலுவின் தலைமையில் அகில பஞ்சாப் முஸ்லீம் மாணாக்கர் மகாநாடு கூடியது. அப்பொழுது, சமூக வாரியாக உத்தியோகங்கள் கொடுக்கப் படக்கூடாதென்றும் திறமையை முன்னிட்டே கொடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

மகாத்மா காந்தியும் கனம் ஆகாகானும் இன்று பார்தோலியில் சந்தித்துப் பேசினார்கள். அப்பொழுது, சர்தார் படேல் மட்டும் பிரசன்னமா யிருந்தார்.

சீனாவில் ஜப்பான் அநுஷ்டித்து வரும் முறையைக் கண்டு தான் பெரிதும் வருத்தப் படுவதாகப் பிரிட்டன், ஜப்பானுக்கு ஓர் அறிக்கை பிறப்பித்திருக்கிறது.

சேம்பர்லேனும் லார்ட் ஹாலி பாக்ஸும் இன்று ரோமா புரியிலிருந்து லண்டனுக்குத் திரும்பி விட்டார்கள்.

16 சிறு பான்மையோர் பிரச்னையை காங்கிரஸ் ஒழுங்காகக் கவனித்துக் கொள்ளுமென்று ஸர் வாஜிர் ஹுஸேன் ஜப்பல்பூரில் ஒரு கூட்டத்தில் பேசினார்.

வட மேற்கு எல்லைப் புற மாகாணத்தில் கொள்ளைகளும் கொலைகளும் அதிகமாயிருக்கின்றன. இன்று ஷிங்கி என்ற கிராத்தில் இரண்டு ஹிந்துக்களை, எல்லைப் புற ஜாதியினர் தூக்கிக் கொண்டு போய் விட்டனர்.

ஐக்கிய மாகாணத்தில் கல்வி ஞானத்தைப் பரப்பும் பொருட்டு, அரசாங்கத்தார் இன்று ஒரு பெரிய விழா கொண்டாடினர். கல்வி யறிவைப் பரப்புவதாகப் பலர் ஓர் உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டனர். இதில் மேற்படி மாகாணக் கவர்னரும் கையெழுத்திட்டார்.

சீன ஜப்பானிய யுத்தத்தில் சூங்கியாங் என்ற ஊரில் ஜப்பானியர்கள் ஆகாய விமானக் குண்டுகள் போட்டனர். சுமார் 300 பேருக்குச் சேதம்.

ஸ்பேயினில், பார்ஸிலோனு நகரத்திற்கு 50 மைல் தொலைவில் பிராங்கோ துருப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

பாலஸ்தீன சம்பந்தமாக லண்டனில் நடைபெறும் மகாநாட்டிற்கு, பாலஸ்தீன அராபிய பெரிய கமிட்டியார் எட்டு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

கல்கத்தா பாட்டா பூட்ஸ் தொழிற்சாலை வேலை நிறுத்தம் சமரஸமாக முடிந்தது.

யூதர் குடியேற்றநாட்டு சம்பந்தமாக பெர்லினில் டாக்டர் ஷாஷ்ட்டுக்கும் யூதர் பிரதிநிதிகளுக்குமே நடைபெற்று வரும் சம்பாஷணைகள் சமரஸமாக முடியுமென்று நம்பப் படுகிறது.

லண்டனிலும் அதனைச் சுற்றிலுமுள்ள ஒன்பது இடங்களில் மின்சார ஸ்தாபனங்கள் தாக்கப்பட்டன.

17 பம்பாயில் எவ்வாறு மது விலக்குத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதென்பதைப்பற்றி பம்பாய் மந்திரிகளும் மகாத்மா காந்தியும் இன்று கலந்து பேசினார்கள்.

இன்று சென்னை அஸெம்ப்ளி கூடியது.

இன்று ராஜப் பிரதிநிதி மைசூரினின்று புறப்பட்டு விட்டார்.

அபிசீனியாவில் யூதர்கள் குடியேறக் கூடாதென்று அகில உலக யூதர் மகாநாட்டின் நிருவாகக் கமிட்டியார் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

பாலஸ்தீனப் பிரச்னையைக் கவனிக்க அராபிய மகாநாடொன்று கெய்ரோவில் இன்று கூடியது.

ஜப்பானுக்கு ஆகாய விமானங்களும் பெட்ரோலும் அனுப்பக்கூடாதென்று இன்று சர்வதேச சங்கக் கவுன்சில் கூட்டத்தில் சீனாவின் பிரதிநிதியாகிய டாக்டர் வெல்லிங்க்டன் கூறினார்.

18 சென்னைச் சட்ட சபையில் இன்று பொதுஜன சுகாதார மசோதா வாதத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்று வங்காள அரசாங்கக் காரியாலயத்தில் நெருப்புப் பற்றிக் கொண்டது.

கனம் ஆகாகானுடைய வேண்டுகோளுக்கிணங்க சர்தார் படேலை கிழக்காப்பிரிக்காவுக்கு பிரசார நிமித்தம் அனுப்ப மகாத்மா காந்தி இசைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

போர்த்துகலுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளில் ருஷ்யாவிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாதென்று போர்த்துகேசிய அரசாங்கத்தார் ஓர் அறிக்கை பிறப்பித்தனர்.

சர்வ தேச நிலைமையைப்பற்றி வாதஞ் செய்ய, பார்லிமெண்டை உடனே கூட்ட வேண்டுமென்று, பார்லிமெண்டில் எதிர்க் கட்சித் தலைவரான ஆட்லி பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதினார். அப்படி கூட்ட முடியாதென்று பிரதம மந்திரி தெரிவித்தார்.

இன்று பர்மா அரசாங்கப் பிரதம மந்திரி டாக்டர் பாமாவின் மோட்டார் வண்டியின் மீது வெடிகுண்டுகள் போடப்பட்டன. ஆனால் உயிர்ச் சேதம் ஒன்றுமில்லை.

19 பிரிட்டிஷ் பிரதம மந்திரி, உலக சமாதானத்தைக் காப்பாற்றும் பொருட்டு சர்வாதிகாரிகளிடத்தில் கெஞ்சுகிறார் என்று லாயிட் ஜார்ஜ் ஒரு கூட்டத்தில் பேசினார்,

அத்லாந்திக் மகா சமுத்திரத்திலும் பசிபிக் மகா சமுத்திரத்திலும் கப்பற் படை ஸ்தலங்களைக் கட்டுவதென்று அமெரிக்கா அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறதைக் குறித்து ஜப்பான் மிகக் கவலை கொண்டு, இது தனக்கு விரோதமான ஏற்பாடா என்று கேட்கிறது.

ஒன்பது வல்லரசுகள் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி ஜப்பான் நடந்து கொண்டு வருகிறதென்று பிரான்ஸ் ஜப்பானுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறது.

ஏடனைக் கைப்பற்றி நூறு வருஷங்களாயின. இதன் 100-வது வருஷக் கொண்

டாட்டம் இன்று கொண்டாடப் பெற்றது.

20 ரீஷ்பாங்கின் பிரசிடெண்டாகவும் ஜெர்மன் அரசாங்கத்திற்குப் பொருளாதார விஷயங்களில் ஆலோசனை சொல்பவராகவும் இருந்த டாக்டர் ஷாஷெட் இன்று தமது பதவியி லிருந்து விலக்கப்பட்டார். இவருடைய ஸ்தானத்தில் டாக்டர் புங்க் என்பவர் நியமிக்கப்பட்டார்.

ருஷ்யாவின் பிரதம மந்திரி பெயர் மோலோடோவ் என்பது. இவருடைய மனைவி இப்பொழுது அரசாங்க மீன் இலாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரிபுரி காங்கிரஸின் தலைமைப்பதவிக்கு மௌலானா அபுல் கலாம் அஸாத்தின் பெயர் பிரேரிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவர் இன்று தம் பெயரை வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டார்.

21 ஜெர்மனியில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் கட்டாய ராணுவச் சேவை யுண்டு. இனி, இந்தக் கட்டாய ராணுவ சேவை செய்தவர்கள், நாஜி கட்சியின் சூறாவளிப் பிடையில் சேர்ந்து கொள்ள வேண்டு மென்று இன்று ஹிட்லர் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

லண்டன் போலீஸார் இன்று பரிசோதனை செய்து வெடி மருந்துச் சாமான்கள் பலவற்றைக் கைப்பற்றினர்.

பெல்ஜியத்தில் புதிய மந்திரிச் சபை அமைக்கப்பட்டது.

ஹிட்லரும் ஜெக்கோ ஸ்லோவேகியாவின் அந்நிய நாட்டு மந்திரியும் இன்று பெர்லினில் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

22 ஜெர்மனியும் இத்தலியும் சேர்ந்து சில புதிய நாடுகளைக் கைப்பற்றப்போகின்றன வென்று பிரெஞ்சுப் பத்திரிகைகள் இன்று முழக்கஞ் செய்தன.

இன்று அவுந்த் சமஸ்தானத்தில் புதிய சீர்திருத்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. பம்பாய் பிரதம மந்திரி ஆஜரா யிருந்தார்.

23 இத்தலி மன்னரின் புதல்விக்கு இன்று விவாகம் நடைபெற்றது.

பிரிட்டனின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டு மென்ற முயற்சியில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டுமென்று இன்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரேடியோவில் பேசினார்.

24 சென்னை அஸெம்பிளி அங்கத்தினர்கள் பலர் ஒரு பிரதிநிதிக் கூட்டமாக இன்று சென்னைப் பிரதம மந்திரியைப் பேட்டி கண்டு, பர்மா நிலைமையைப்பற்றிப் பேசினார்கள். பூரா கலகங்களையும் தெரிவிக்குமாறு இந்தியா அரசாங்கத்தாருக்கும் பர்மாவிலுள்ள இந்தியா கவர்ன்மெண்ட் ஏஜெண்டுக்கும் எழுதி யிருப்பதாகப் பிரதம மந்திரி கூறினார்.

பர்மா அரசாங்கம், தற்போது ஏற்பட்டுள்ள கலவரங்கள் சம்பந்தமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன வென்பதைப்பற்றி பிரதம மந்திரி டாக்டர் பாமா ஓர் அறிக்கை விடுத்தார்.

இத்தலியில், சில ரிசர்வ் பட்டாளத் துருப்புகள் யுத்த சந்நத்தராக இருக்கும் படி உத்திர விடப்பட்டிருக்கின்றன.

யூதர் பிரச்னை விஷயமாக போலந்துக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் சமரஸமாக முடிவு பெற்றது.

25 பிரிட்டிஷ் தொழிற்கட்சியில் ஒரு முக்கிய அங்கத்தினரா யிருந்த ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், விலக்கப்பட வேண்டுமென்று மேற்படி கட்சியின் நிருவாக சபையார் ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றனர்.

தென்னமெரிக்காவிலுள்ள சில்லி பிரதேசத்தில் ஒரு பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டது. 15,000 பேர் மரணம்.

1—2—30 லிருந்து 90,000 பேர் யுத்த சந்நத்தராக இருக்கும்படி இத்தாலிய அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.



சொற்பன உலகம்

ஆசிரியர்; ஸ்ரீ வி. இராமநாதன், தேவகோட்டை; புத்தகம் கிடைக்குமிடம்: ஆசிரியரிடம்; டபிள்கிரவுன் அளவு 1x16; 92 பக்கங்கள்; விலை: பன்னிரண்டணு.

இந்த நவீனத்தைப் படிக்க விரும்பும் அன்பர்கள், முதலில் 91 பக்கத்திலுள்ள கடைசி பாராவைப் படித்து விட வேண்டும்.

'ஓர் விசேஷம்! எதிர்பாரா விதத்தில் பிரசுர நிலயம் இப்புத்தக விலையை அதிகமாக்கி விட்டது. ஆகவே, வாசகர்களுக்கு ஒரு 'அன்பளிப்பு' செய்ய முன்வந்துள்ளோம். அதில் தனவணிக வாலிப எழுத்தாளர்களில் ஒரு சிலரின் கட்டுரைகளைத் தொகுத்திருக்கின்ரும். 'சொற்பன உலக'த்தில் அதற்கென ஏற்படுத்தியுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து எமக்கு அனுப்பும் வாசக நேயர்களுக்கு அப் புத்தகப் பிரதிகள் இனுமாக அனுப்பப் பெறும். பயன் பெறுக!

இலங்கையில் பஞ்சத்திற்கு, பரிகாரந் தேடிக்கொடுப்பதற்காக இலங்கை சட்ட சபையினர் இருபது லட்சம் ரூபாய் அநுமதித்திருக்கின்றனர்.

ஹிட்லர், ஜெர்மன் ராணுவ தளகர்த்தர்களோடு இன்று கலந்து பேசினுர்.

துருக்கிய மந்திரிச் சபை இன்று கலைந்து விட்டது. ரெபிக் சையாடம் என்பவரைப் பிரதம மந்திரியாகக் கொண்ட மந்திரிச் சபை அமைந்திருக்கிறது.

26 இன்று இந்தியா வெங்கணும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

ஸ்பெயின் யுத்தத்தில், ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தின் தலை நகராயிருந்த பார்ஸிலோனு நகரம், பிராங்கோ துருப்புகளால் கைப்பற்றப்பட்டது.

பிரான்ஸ், இன்று புதிய படைகளைத் திரட்ட உத்திர விட்டிருக்கிறது.

ஸ்பெயினில் பிராங்கோ கட்சிக்குப்பூரண வெற்றி கிடைத்ததைப்பராட்டி, முஸோலினி ரோமாபுரியில் ஒரு பிரசங்கம் செய்தார்.

பிராங்கோ படையினர். பார்சிலோனுவைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு, மேலும் முன்னேறிச் சென்று இன்னும் சில நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டனர்.

27 இன்று பிரிட்டிஷ் மந்திரிச் சபைகூடி, பாலஸ்தீன விஷயமாக ஆலோசித்தது.

தற்போதைய மந்திரிச் சபையில் பூரண நம்பிக்கை இருப்பதாக பிரெஞ்சு பார்லிமெண்டில் ஒருதீர்மானம் நிறைவேறியது.

ஆகையால் முக்கால் ரூபாய் கொடுத்து ப்ரூப் தாளில் அச்சிடப் பெற்று 92 பக்கங்களே யுள்ள இந்தப் புஸ்தகத்தை வாங்கினீர்களானல் உங்களுக்கு நிச்சயம் ஓர் அன்பளிப்பு கிடைக்கும். சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட வேண்டாம்.

இந்த நவீனத்திற்கு 'சொற்பன உலகம்' என்று பெயரிடப்பட்டதன் காரணம் என்னவோ நம்மால் அறியக்கூட வில்லை. ஆனல் கடமையை முன்னிட்டு, மிகுந்த சிரமத்துடன் இந்த நாவலைப் படித்து முடித்தவுடன், நாம் இதுகாறும் சொற்பன உலகத்தில்தான் இருந்தோமோ என்ற சந்தேகம் எமக்கு உண்டாயிற்று. உடனே, அப்படி யில்லை, நனவு உலகத்திலேயே இருக்கிறோமென்று தீர்மானித்து, 'தமிழ்த் தாயே! நீ காப்பாற்றப்பட வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தோம்.

திருவாரூர்ப் பள்ளு

கமலை ஞானப்பிரகாசர் இயற்றியது; பதிப்பாசிரியர்: ஸ்ரீ சோமசுந்தர தேசிகர், 16 நாச்சியப்ப செட்டி தெரு, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் 1x16 அளவு; 34 பக்கங்கள்; விலை: நான்கு அணு.

புராதனத் தமிழ் நாட்டின் கிராம வாழ்க்கையை—சிறப்பாக விவசாயிகளின் வாழ்க்கையை—அறிந்து சுவைக்க வேண்டுமானல், இந்த மாதிரியான பள்ளுக் கிரந்தங்கள் பெரிதும் உதவியா யிருக்கும். இடைக் காலத்துப் புலவர் பலர், பள்ளுப் பிரபந்தங்கள் பலவற்றைப் பாடி யுள்ளனர். இவை, சமீப காலம்வரை நாடகமாகவும் நடிக்கப்பட்டு வந்தது. திருவாரூர்ப் பள்ளு என்ற இந்த நூலும், இந்த இனத்தைச் சேர்ந்ததே. ஸ்ரீ தேசிகருடைய இந்தப் பதிப்பு மிகச் சுத்தமாக இருக்கிறதென்று சொன்னல், அதில் ஆச்சரியமோ விசேஷமோ ஒன்று மில்லை. தமது வாழ்க்கையையே தமிழாராய்ச்சியாகப்பண்படுத்தி அமைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ தேசிகருடைய பதிப்பு வேறெவ்விதமாகத்தான் இருக்க முடியும்?

தமிழ் நாட்டில் எத்தனை வகை நெல்கள் உற்பத்தி செய்யப்பட்டன தெரியுமா?

அரிய நாயகங் குறுவை பொற்சாலி
யருச்சுன மென்று மரியா துணங்கு
திருவ ரங்க னழகிய வாணன்
தில்லை நாயகன் சீரகச் சம்பா
இரண வாரிகர்ப் பூரம்பொற் பாளை
யிரங்க மீட்டான் குறுவைக் கிளையான்
சுருணை வாலன் கருவாலன் சம்பா
சொரிகு ரும்பை விதைவகை யாண்டே.

சில்ப ஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்த தொரு மாதப் பத்திரிகை. டபிள் கிரவுன் 1x8 அளவில் 64 பக்கங்கள் கொண்டது. பல அறிஞர்களின் கட்டுரைகள் தாங்கி வருவது. இதன் ஆசிரியர் ஸ்ரீ கா. வெ. ராமச்சந்திரன். இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூ 4/-. தனிப்பிரதி விலை 6 அணு. சில்ப ஸ்ரீக்கு நமது மனப்பூர்வமான வாழ்த்து. இது, சென்னை மயிலாப்பூரி னின்று வெளியாவது.

நாகரிகக் கல்வி

—"வருணன்"

எழும்பூர் 'அரைவல் பிளாட்' பாரத்தில் ஒரு நாள் காலை ஆறே முக்கால் மணிக்கு ஒரு 'டாக்ஸி' (வாடகை மோட்டார் வண்டி) வந்து நின்றது. அதிலிருந்து இரண்டு யுவர்களும், மத்திய வயதுடைய ஒருவரும் வந்திறங்கினார்கள். மூவரில் ஒருவர், ஆல்பாகா சில்க் கோட், நிஜார் முதலியவையோடு கூடிய 'யூனி பாரம்' அணிந்திருந்தார். தலையிலே சரிகை பேட்டு போட்ட வெல்வெட் டொப்பி; கையிலே தங்கப் பூண் போட்ட சிறு பிரம்பு; கையில் ரிஸ்ட்வாச்; காதிலே வைரக்கல் கடுக்கன். இவைகளைப் பார்த்த எவரும் இவர் ஒரு ஜமீன்தார் அல்லது ஜமீன்தார் மைனர் என்று உடனே தெரிந்து கொள்வர். பக்கத்தில் சில்க் ஜூப்பா தரித்தும் மேலே பட்டு உருமால் போட்டுக் கொண்டும் கிளாஸ்கோ மல்லை ஒற்றைச்சுத்தாகக் கட்டிக் கொண்டும் ஒருவர் நின்றார். இவர்களுக்குச் சிறிது ஒதுங்கினாற் போல், வேஷ்டி, நீண்ட அங்கி, தலையிலே 'பித்டர்பன்', மேலே உத்தரியம் இத்தியாதி அலங்கிருத சோபிதமான ஒருவர் இடுப்பிலே கையைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தார். இவருடைய சடைத் தலைப்பாகையில் பேன், மூட்டைப் பூச்சி முதலிய ஜீவ கோடிகள் தஞ்சமடைந்திருந்தன. ஒரு வருஷமா, இரண்டு வருஷமா, இருபத்தேழு வருஷகாலமாக, இத் தலைப்பாகை, இவருடைய தலையை அலங்கரித்து வந்திருக்கிறது. சில இடங்களில் சடையும் வெளியில் தெரியும். ஆயினும் 'ஆவி' வந்த தலைப்பாகையல்லவா? தூர எறிய மனம் வரவில்லை. இவர் அணிந்திருக்கும் 'லாங்கோட்' இவர் மெட்ரிகுலேஷன் பரீட்சை பாஸ் செய்ததும், உத்தியோகம் தேடுவதற்குப் பிரயத்தனப்பட்ட போது தைத்துக் கொண்டது. அதுவும் இவரைவிட வில்லை; இவரும் அதைவிட வில்லை. வண்ணானுக்குப் போனால் நம்மை சின்னாபின்னப்படுத்தி விடுவான் என்று பயந்தோ என்னவோ, அந்த அங்கி இவரை விட்டுப் பிரியாமலிருக்கிறது. இவருடைய தேகத்தில், பாலியம் முதல் இதுவரை எவ்வளவு வியர்வை கொட்டியிருக்கிறதென்று யாரேனும் கணக்குப் பார்க்க வேண்டுமென்று விரும்பினால், இந்த நீண்ட அங்கியை ஒரு தரம் ஜலத்தில் நனைத்துப் பிழிந்து பார்த்தால் எளிதில் தெரிந்து விடும். இவரைப்பற்றிப் பின்னால் அதிகம் பேச வேண்டியிருப்பதால் இதனுடன் நிறுத்திக் கொள்ளலாம்.

இம் மூவரும் பிளாட்பாரத்தில் வந்து நின்ற இரண்டு நிமிஷத்திற்

கெல்லாம், போட் மெயில் வந்தது. வந்து நின்றதும், இவர்கள் இரண்டாவது வகுப்புக் கம்பார்ட்மெண்டுகளண்டை வந்து பார்த்தார்கள். இவர்களுடன் ஏழெட்டு போர்ட்டர்கள் வந்து இவர்கள் நின்ற இடத்தைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு கம்பார்ட் மெண்டுக்குள், வெல்வெட் குல்லாய் அணிந்து கொண்டிருக்கிற இளைஞர் தலையைப் விட்டுப் பார்த்தார். சிறிது புன்முறுவலுடன் 'நாயனு' என்றார். இதைக் கேட்டதும் படுத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய ஆத்மா, மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டு 'தம்பி' என்று சொல்லிய வண்ணம் கண்ணைத் துடைத்துக் கொண்டது. 'எழுந்திருங்க. மதராசுக்கு வந்திருக்கிங்களே' என்றார் இளைஞர். 'அப்படியா? அடே வேனு! வெற்றிலைப் பாக்குப் பெட்டியைக் கொண்டுவாடா' என்று நிதானமாகச் சொல்லிக்கொண்டே கொட்டாவி விட்டார் வண்டியிலுட்கார்ந்து கொண்டிருக்கப்பட்டவர்.

இளைஞர்:—'இறங்கிய பிறபாடு போட்டுக் கொள்ளலாம். வண்டியைப் பின்னுக்குத் தள்ளி விடுவார்கள்' என்று சொல்லிவிட்டு போர்ட்டர்களைச் சாமான்களை இறக்கி வைக்கும்படிச் சொன்னார்.

பேரியவர்:—'அப்படியானல் கீழே இறங்கி விடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டே ஆசனத்தினின்றும் எழுந்தார். சோம்பல் முறித்தார்; கொட்டாவி விட்டார். தலையை முடி போட்டார். கழன்று போயிருந்த பொத்தானைப் போட்டுக் கொண்டார். இவர் தமது கிராமத்திலேயே இருந்தால், இவ்வேலைகளை எல்லாம் வேலைக்காரர் செய்து விடுவது வழக்கம். பிறகு வண்டியிலிருந்து இறங்கப் பிரயத்தனப் பட்டார். அது இலேசில் ஆகிற காரியமா? இவருடைய தேகச் சுற்றளவைக் கணக் கெடுத்துக் கொள்ளாமல், ரெயில்வே கம்பெனியார், இரண்டாவது வகுப்புக் கம்பார்ட் மெண்டுகளின் நுழை வாயில்களைச் செய்து விட்டார்கள்! இப்பொழுது அதைப் பற்றிப் புலம்புவதில் என்ன பயன்? கம்பார்ட் மெண்டுக்குள் இரண்டு போர்டர்கள் சென்று, பெரியவரை ஒருக்களித்தாற் போற் நிற்க வைத்து, அங்கிருந்து வெளியில் மெது மெதுவாக, வளையல் காரன் கையை அழுத்தி அழுத்தி ஸ்திரீகளுக்கு வளையல் போடுவதைப் போல் தள்ளவும், வெளியிலிருந்து இரண்டு போர்டர்கள் மற்றொரு கையைப் பிடித்து இழுக்கவும், எந்த தெய்வம் செய்த அநுக்கிரகமோ பெரியவர் மெதுவாகப் பிளாட்பாரத்திற்கு வந்து சேர்ந்தார். ஒரு வேலைக்காரன் தயாராக வைத்துக் கொண்டிருந்த டம்ளர் காபியை அப்படியே சாப்பிட்டார். வெற்றிலைப் பாக்குப் போட்டுக் கொண்டு இரண்டு தரம் துப்பினர். பிறகுதான் இவருக்குச் சிறிது தெளிவு உண்டாயிற்று. இவருடைய உருவத்தையும், இவர்வண்டியிலிருந்துஇறங்குவதற்குப்பட்ட சிரமத்தையும் பார்த்த போர்ட்டர்கள் தனியாக ஓரிடம் சென்று, தங்கள் வயிறு நோகுமட்டும் சிரித்துத் தீர்த்து விட்டார்கள். இந்தப் பெரியவருடைய தலை தேங்காய்க் குறும்பி; அதில் பன்னீர்ச் செம்பு குடுமி. கண்களிரண்டும் நாகதாளிப் பழத்தைப் போல் சிவந்திருந்தன. பாணக்குழாய் மூக்கு. நாளைக்கு ஒரு பலம் பொடிக்குக்குறையாமல் இந்தக் குழாயில் ஏற்ற வேண்டும் என்பது

இவருடைய வேலையாட்களுக்குக் கட்டளை. கழுத்திலே கண்டிகை. இவருடைய தொப்பை, இவருக்குக் கட்டியங் கூறிக் கொண்டு, எப்பொழுதும் முன்னே சென்று கொண்டிருந்தது. ஒரு கையில் சங்கிலியும், மற்றொரு கையில் தோடாவும் அணிந்து கொண்டிருந்தார். இவரைப் பார்த்ததும் இவர் ஒரு பெரிய ஜமீன்தார் என்றும் வரவேற்க வந்திருப்பாருள் ஒருவர், இவருடைய பிள்ளை யென்றும் நன்கு கத் தெரிந்தன. மெதுவாக ஜமீன்தார் வாடகை மோட்டார் வண்டியிடம் அழைத்துக் கொண்டு போகப்பட்டார். ஆனால் 'டாக்ஸி'க் காரன் ஜமீன்தாரைத் தனது வண்டியில் ஏற்றிக் கொள்ள முடியாதென்றும், அதற்காகப் போலீஸ் கமிஷனரிடம் 'ஸ்பெஷல் லைசென்சு' வாங்க வேண்டுமென்றும் சொல்லிவிட்டு, தான் வந்த வரைக்கும் சார்ஜ் வாங்கிக் கொண்டு போய் விட்டான். பிறகு இரட்டைக் குதிரை கோச் வண்டி யொன்றைப் பார்த்துக் கொண்டுவரச் சொல்லி அதில் மெதுவாக ஜமீன்தாரை ஏற்றினார்கள். இந்த ஜமீன்தார் யார்? இவரை வரவேற்க வந்திருந்த மூவரும் யார்?

II

கொட்டையூர் கோவிந்த ராஜப் பிள்ளை என்றால் அலர்ந்த தாமரையும் குவிந்து விடும்; ஏற்றியிருந்த தீபமும் அணைந்து விடும். கொட்டையூர் ஜமீனிலே யுள்ள சகல ஜீவராசிகளும், ஜமீன்தாருடைய மனப் போக்கின்படி நடந்து கொள்ள நன்றாகப் பழகியிருக்கின்றன. ஏன்? அவருடைய அதிகாரப் பிரதேசத்திற்கு அப்பால் கூட அவருடைய ஆணை செல்லுவதைக் கண்டு, அவருடைய குடி ஜனங்கள் ஆச்சரியமடைந்திருக்கிறார்கள். 'கிராண்ட் டிரங்கு எக்ஸ் பிரஸ்' வண்டியில் ஏறி ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பிரயாணம் செய்தால் தக்க பிரசாதங்கள் கிடைக்கும். கண்ணிலே ஒரு மூட்டை கரி; மூக்கிலே இரண்டரை வீசை கரித்தூள். துணிமணி முதலிய எல்லாம் கரிவேஷம் போட்டுக் கொள்ளும். ஆனால் நமது கொட்டையூர் பிள்ளை, என்றேனும் மேற்படி வண்டியிலேறிச் சென்றால், அன்று, இஞ்சின்கூட கரியை வாரி வீசாது; ஆடி மாதத்துச் சமுத்திர அலைபோல் அலறிக் கொண்டு ஓடாது. நெடுங்காலமாக ஊருக்குச் சென்றிருந்து திரும்பி வந்த கணவனை எதிர் கொண்டழைக்க ஆவலோடு செல்லும் பத்தினியைப்போல் ஆனந்தமாக ஓடும். அன்று ரெயிலானது, ஆடாது; அசங்காது. இவையெல்லாம் ஆச்சரிய மல்லவா?

இதனால், கொட்டையூர் ஜமீன்தார் கெட்டவர் என்று எவரும் கருதிவிட வேண்டாம். அவர் பலாப் பழத்தைப் போன்றவர். இதன் மேல் தோல் உறுதியாயும், கரடு முரடாயும் இருக்கும். ஆனால் உள்ளே இனிப்பான பழம் இருக்கும். அதைப்போலவே இவருடைய சுபாவமும். இவரைப் பார்த்தால் பயமாயிருக்கும். ஆனால் சரள புருஷர். அது மாத்திர மல்ல. இவர் முகமும் பலாப் பழத்தைப் போல் இருக்கும். பலாப் பழத்திற்கு முட்கள் மேல் நோக்கிக் கொண்டிருக்கின்றன. இவருடைய முகத்தில் பள்ளம் பள்ளமாய் இருக்கும். மற்றும் இவருக்குப் பலாப் பழத்தில் அதிகப் பிரியம். இந்த ஊரில் முற்காலத்தில் பலாக் கொட்டை வியாபாரம் மிக

அதிகமாக நடந்து கொண்டு வந்ததி லேயே இதற்குக் கொட்டையூர் என்று வந்ததாக ஒரு வழக்கும் உண்டு.

நமது ஜமீன்தாருக்கு இப்பொழுது 45 வயது பூர்த்தியாகி விட்டது. 46 வயது முதல் இவருக்கு நல்ல தசை வரப்போகிற தென்று சமஸ்தான் ஜோஸியர்கள் சொல்லி யிருக்கிறார் கள். இதைச் சொன்னவர்களுக்குத் தகுந்த சன்மானங்களும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இப்பொழுது நான்காவது மனைவியாக ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொண் டிருக்கிறார். முதல் தாரத்துக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த ஏழாவது நாள், தாயார் ஜன்னி கண்டு இறந்து விட்டாள். பிறகு இரண்டா வது, மூன்றாவது மனைவியர்களைக் கலி யாணம் செய்து கொண்டார். ஆனால் அவர்கள் கொட்டையூருக்கும் வைவ சுவத பட்டினத்திற்கும் என்னென்ன ஒற்றுமை வேற்றுமைகள் இருக்கின் றன வென்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக, இயதர்ம ராஜனு டைய உதவியை நாடிச் சென்றிருக் கிறார்கள். கடைசியில் வேண்டா வெறுப்பாகப் பலருடைய பலவந்தத் தின் மேல், ஒரு பெண்ணின் மீது வைத்த கருணையினால் நான்காவது முறை விவாகஞ் செய்து கொண்டார். பணமிருந்தால் எத்தனை தரம் வேண்டு மானாலும் விவாகம் செய்து கொள் ளலாமல்லவா? முதல் தாரத்து மக னான சிரஞ்சீவி இராமசாமிப் பிள்ளைக்கு இப்பொழுது வயது இரு பத்து மூன்றாவது முடிந்து இருபத்து நான்காவது நடக்கிறது. சென்னையில் கிறிஸ்டியன் காலேஜில் சீனியர் பி. ஏ. வகுப்பில் படிக்கிறான். அவனைப் பார்த்து விட்டுப் போவதற்காகவே நமது ஜமீன்தார் அவர்கள் சென்னைக்கு வந்தார்.

சிரஞ்சீவி இராமசாமி சென்னைக்கு வந்து ஆங்கிலக் கல்வி கற்றுக் கொள்ள தொடங்கியது முதல், தனது இந்தியப் பெயரை மாற்றிக் கொண்டு 'மிஸ்டர் ராம்ஸே' என்று வைத்துக் கொண்டான். இங்கிலீஷ்காரரைப் போல் உடை தரித்துக் கொள்ளவும் ஆங்கிலேயரைப்போல் பேசவும் நன் றாகக் கற்றுக் கொண்டிருக்கிறான். தனது 'நாயனுவைப்' பார்க்க வந்த தனால் டொப்பி அணிந்து கொண்டு வந்தானே தவிர சாதாரணமாக அவன் 'ஹாட்' போடுவதே வழக்கம். இவனுக்கு 'டியூடராக' இருந்து உலக விவகாரங்களில் பழக்கி வைக்க உலக அனுபவ முள்ள ஒருவரை ஜமீன்தார், தமது பிள்ளையுடன் சென்னைக்கு அனுப்பி யிருந்தார். அவரே, நீண்ட அங்கி தரித்துக் கொண்டு ஸ்டேஷனில் நின்றிருந்த பேர்வழி. மிஸ்டர் ராம்ஸேவுக்கு— இராமசாமிப் பிள்ளை என்று கூப்பிட் டால் இளைய ஜமீன்தாருக்குக் கோபம் வந்துவிடு மல்லவா?— பல நண்பர்கள் உண்டு. இந்த 'பல' என்ற சொல்லுக்கு அக ராதியில் விரிவான பொருள் எழுதப் படாதது விசனிக்கத் தக்கது. இந்தப் 'பல'ரும் மிஸ்டர் ராம்ஸேயின் பங்க ளாவுக்கு எப்பொழுதும், எந்நேரத் திலும் தாராளமாக வர உரிமை பெற் றிருக்கின்றனர். இவரும் மேற்படி 'பல'ருடைய வீட்டுக்கு எந்நேரத்தில் வேண்டுமானாலும் செல்லலாம். எத் தனை மணி நேரம் வேண்டுமானாலும் பேசலாம். இந்தப் 'பல'ரில் இவ ருடன் ரெயில்வே ஸ்டேஷனுக்கு

வந்திருந்தவரும் ஒருவர். இவர் பெயர் மிஸ்டர் ஆடிய பாதம். மிஸ்டர் ராம் ஸேயின் சூத்திரதாரியாக இவர் விளங்கினர். தன் பெயரவரை இவர் 'ஆட்டும் யாதம்' என்று மாற்றி வைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும். ஆயினும் அதைப்பற்றி நமக்கென்ன கவலை?

'டியூடரா'க அனுப்பப் பட்ட ஸ்ரீ மெய்ஞ்ஞான தேசிகர், ஸ்ரீ ராம் ஸேக்கு லட்சியமேயில்லை. மூன்றும் பசலியைச் சேர்ந்தவர் என்றும் ஐம்பத்தேழாவது தேசத்தில் வசிக்கவே இவர் லாயக்குள்ளவர் என்றும் கருதப்பட்டு வந்தார். என்ன செய்வார் பாவம்! தேசிக பரம்பரையில் பிறந்த இவர் ஆங்கிலம், வடமொழி, தென் மொழி ஆகிய மூவற்றிலும் நிரம்பிய புலமையுடையவர். இவருடைய முன்னோர், கொட்டையூர் ஜமீனிலேயே ஊழியஞ்செய்து காலங் கழித்தவர். ஆதலின் இவரும் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியதும் வெளியிடங்களில்—முக்கியமாக ரெவினியூ போர்டாபீசில்—பகீரதப் பிரயத்தினஞ் செய்து வேலை யகப்படாமையினால் தமது முன்னோருடைய வழக்கத்திற்கு மாறுபடாமல், ஜமீன்தாரிடத்தில் உத்தியோகத்திற்கமர்ந்தார். ஜமீனில் திறமையாக ஊழியஞ் செய்து ஜமீன்தாருடைய விசுவாசத்தைப் பெற்றதன் பயனாகவே, இளைய ஜமீன்தாருடைய 'டியூடரா'கச் சென்னைக்கு அனுப்பப் பட்டார். இவருடைய திருநீற்றுப் பெருமையையும், சைவ சித்தாந்த நுட்ப திட்பங்களையும் தேவாரப் பதிகங்களில் சொட்டி வழியும் பக்திரசத்தையும் நமது இளைய ஜமீன்தார் கவனிக்கிறாரா? இவைகளைப்பற்றி இங்கிலீஷ் பாஷையில் எடுத்துக்கூறிய போதிலும் மிஸ்டர் ராம்ஸேவுக்கு இவை, எட்டிரசம் போலிருந்தன. 'எளிய வாழ்க்கை; உயரிய எண்ணம்' என்பார் தேசிகர். 'டாம் நான்சென்ஸ்: இந்த மாதிரி சொல்லிச் சொல்லித் தான் இந்தியாவை 'ஸ்பாயில்' (கெடுத்து) பண்ணி விட்டீர்கள். உங்களுடைய தலைப்பாகையும் சொக்காயும் உங்கள் உயர்ந்த எண்ணங்களுக்கு நிதர்சனங்களாக விளங்குகின்றன' என்று எதிர்த்து விழுவார் மிஸ்டர் ராம்ஸே.

'அமெரிக்காவைப் பார்த்தீர்களா? மாதம் ஒவ்வொருவனுக்கும் சராசரி 300 ரூபாய்க்குக் குறையாமல் செலவாகிறது. நமக்கு மாதம் மூன்று ரூபா வந்தால் கூட போதும் என்று திருப்தி யடைந்து விடுகிறோம். மனிதனுக்கு ஆம்பிஷன் (அவா) இருக்க வேண்டாமா? உலகத்தில் அமெரிக்காவுக்கு இப்பொழுது செல்வாக்கு இருக்கிறதா? நமக்கு இருக்கிறதா' என்று சில சமயங்களில் தேசிகருடன் தர்க்கம் செய்ய ஆரம்பித்து விடுவார் நமது இளைய ஜமீன்தார்.

மிஸ்டர் ராம்ஸேக்கு 'இங்கர்சால்' என்னும் பெரியாரிடத்தில் நிரம்பிய பக்தியுண்டு. (இங்கர்சால் என்பார் நிரீச்சுர வாதக் கட்சியைச் சேர்ந்த ஓர் அறிஞர்) இந்தியா நற்கதியடைய வேண்டுமானால் இங்கர்சாலின் கொள்கைகளை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்பது இவர் நம்பிக்கை.

III

கொட்டையூரில் ஜமீன்தாரின் நிலையைக் கவனிப்போம். தமது மகனைச் சென்னைக்கு அனுப்பியது முதல்,

மாதம் ஆயிரம் ரூபா வீதம் அனுப்பிக் கொண்டு வந்தார். ஜமீன்தார் பிள்ளையல்லவா? அதற்குத் தகுந்த அந்தஸ்துடன் வாழ்ந்து வரும் படியும் கூறியிருந்தார். கால நிலை சரியாயில்லாமலிருந்த போதிலும், தமது நான்காவது மனைவி எவ்வளவு முணுமுணுத்துக் கொண்ட போதிலும், மாதம் இரண்டாந் தேதி யன்றே ஆயிரம் ரூபாய்க்கு ஓர் உண்டியல் அனுப்புவதில் தவறுவதே யில்லை. இதற்காக இவர் மகத்தான தியாகம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. தமது தூர பந்துக்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த சிலருக்கு மாதந் தோறும் இரண்டு அல்லது மூன்று ரூபாய் கொடுத்து வந்தார். அவைகளை இப்பொழுது நிறுத்தி விட்டார். கொட்டையூரிலுள்ள கும்ப மூர்த்தி சுவாமி கோயிலுக்கு வாரத்திற்கொரு முறை ஒரு மரக்கால் அரிசியைச் சமைத்து, நைவேத்தியம் செய்து அதை ஏழைகளுக்கு உணவாக அளிக்க வேண்டுமென்று கட்டளை ஏற்படுத்தி யிருந்தார். கும்பமூர்த்தி சுவாமி வாயிலும், அவர் மூலமாக ஏழைகள் வாயிலும் மண் விழுந்தது. பரம்பரை தர்மத்தை அநுசரித்து, தமது ஜமீனில் சமஸ்தான தமிழ்ப் பண்டிதர், ஜோசியர், விகட கவி மூவரையும் மாதம் ஒரு வராகன் சம்பளத்தில் அமர்த்தி யிருந்தார். அவர்களுக்குச் சீட்டுக் கொடுத்தாய் விட்டது. தமது நான்காவது சம்சாரத்திற்கு, வைர அட்டிகை யொன்று செய்து போடுவதாக விவாககாலத்தில் கொடுத்த வாக்குறுதியைத் தமது ஜமீனுக்கருகாமையில் ஓடும் காணாற்றிலே மிதக்க விட்டு விட்டார். இன்னும் இங்கெடுத்து இயம்பொணாத் தியாகங்களை அவர் செய்திருக்கிறார். எப்படியாவது பையன் பி. ஏ. பாஸ் செய்து விட்டு ஐ. சி. எஸ். பரீட்சைக்குச் செல்ல வேண்டு மென்பது இவர் பேரவா. ஆனால் பையனுக்கு வயது அதிகமாகி விட்டதேயென்பதைப்பற்றி இவருக்கு நினைவே இல்லை. நினைவிருந்து, 'எக்ஸெம்ஷன்' (விலக்கு) வாங்கி விடலாமென்று கருதி யிருந்தாரோ என்னவோ நாமறியோம்.

கொட்டையூர் ஜமீன் மிகச் சிறியது. அதிலிருந்து மாதம் ஆயிரம் ரூபாய் அனுப்புவதென்றால் அஃதெப்படி சாத்தியப்படும்? ஆனால் இந்த ஆயிரம் ரூபாயும் மிஸ்டர் ராம்ஸேவுக்குப் போதவில்லை. அடிக்கடி தனக்குப் பணம் போதவில்லை யென்று கடிதம் வரும். 'ட்ரெஸ் வாங்கிக் கொண்டேன்; கார் 'ரிபேர்' செய்தேன்; 'டாக்டர் பீஸ்' கொடுத்தேன்' என்று ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, அதிகப் படியாக ஐந்நூறு ரூபாய்க்கு குறையாமல் வாங்கிவிடுவார் மிஸ்டர் ராம்ஸே. என்ன செய்வார் ஜமீன்தார்! ஒரு பக்கம் பி. ஏ. படிப்பு! மற்றொரு பக்கம் 1500 ரூபா செலவு! திக்குமுக்காடினார்! பி. ஏ. வகுப்புப் படிக்கு ஒருவனுக்கு மாதம் இவ்வளவு செலவு ஏன் என்று இவரை யறியாமலே இவருக்குச் சில சமயங்களில் ஏக்கம் பிடித்து விடும். தூக்கம் வராது. இச்சமயத்தில் நான்காவது மனைவி, தலையணை மந்திரோபதேசத்திற்கு ஆரம்பித்து விடுவாள். போதும் இந்தப் பிழைப்பு என்றாகிவிடும் ஜமீன்தாருக்கு! பிள்ளையின் படிப்பை நிறுத்திவிடலா மென்றால், அது முடிகிற காரியமா? வயதுவந்த பிள்ளை யல்லவோ? தவிர படிப்பை நிறுத்த

லாம்! பணச் செலவை நிறுத்த முடியுமா?

பார்த்தார் ஜமீன்தார்! ஒன்றும் முடியவில்லை. பாங்கி சுகுணலைய செட்டியாரிடம் தஞ்ச மடைந்தார். தமது ஜமீனை அடகு வைத்து நூற்றுக்கு ஒன்றரை வட்டி விகிதம் கடன் வாங்கினார். செட்டியாருக்கு வலிக்கிறதா? சந்தோஷத்துடன் கொடுத்தார். இப்படிச் சுமார் ஒன்றரை வருஷ கால மாக மாதம் இரண்டாயிரத்திற்குக் குறையாமல் கடன் வாங்கிக் கொண்டு வந்தார். செட்டியாரும் வருஷத்திற்கொருமுறை சேரும் வட்டியை அசலுடன் கூட்டி கணக்கிடத் தொடங்கினார். ஜமீன்தாருக்கு ஏக்கம் பிடித்து விட்டது. ஆயினும் தேகம் கரையவில்லை என்பதை வாசகர் மறந்து விடக்கூடாது. செலவைச் சுருக்கும்படி பிள்ளைக்குப் பல முறை கடிதம் எழுதினார். தன்னால் எவ்வளவு செலவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொள்ள முயல்வதாகவும், வாங்க வேண்டிய புஸ்தகங்களைக் கூட வாங்காமல் 'லைப் ரெரியில்' சென்று படிப்பதாகவும் பணிவுடன் எழுதி வந்தார் திருமகனார். ஆயினும் ஜமீன்தாருக்கு சந்தேகம் தீரவில்லை. மெய்ஞ்ஞான தேசிகருக்கு இரகசியமாக ஒரு கடிதம் எழுதி, மிஸ்டர் ராம்ஸேயின் உண்மை நிலையினைத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தார். தேசிகருக்கு மிஸ்டர் ராம்ஸே மீது எவ்வளவு கோபம் இருந்த தென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. 'இவனுடைய துரைத்தன மெல்லாம் எத்தனை நாள்?' என்று தன்னுள் நகைத்துக் கொண்டு தேசிகர், ஜமீன்தாருக்கு, இங்கே நடக்கும் அக்கிரமங்களை யெல்லாம் விரிவாக எழுதியனுப்பிவிட்டார். இதைக் கேட்ட பிறகுதான் ஜமீன்தார் சென்னைக்கு வரத்தீர்மானித்தார். தாம் எழுதிய கடிதத்தைப் பற்றி, இளைய ஜமீன்தாரின் எதிரிலேயே பெரிய ஜமீன்தார் எங்கு பிரஸ்தாபித்து விடுகிறாரோ என்ற அச்சத்தினாலேயே அவருடன் மெய்ஞ்ஞான தேசிகர் எழும்பூர் ஸ்டேஷனில் பேசாமல் மௌனஞ் சாதித்தார். தான் செய்யும் செலவுக்கு ஓர் ஆதாரம் காட்டும் பொருட்டே, மிஸ்டர் ராம்ஸேயும் தனது மோடார் வண்டி ரிப்பேருக்கு போயிருக்கிறதென்று சொல்லி விட்டு 'டாக்ஸி' யுடன் ஸ்டேஷனுக்கு வந்தார். இது மெய்ஞ்ஞான தேசிகருக்கும் தெரியும்.

IV

இங்கர் சால் பக்தரான மிஸ்டர் ராம்ஸே, சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள 'லிலிலேக்' என்ற பங்களாவில் வசித்து வந்தார். இந்த பங்களாவுக்கு முதலில் 'ரத்னாகரம்' என்று பெயர் இருந்தது. ஆனால் அஃது இந்தியப் பெயராயிருக்கிறதென்றும் அதனால் அழகாயில்லையென்றும் வீட்டுச் சொந்தக்காரரிடம் கூறி'லிலிலேக்' என்ற ஆங்கிலப் பெயரை வைத்தார். தன் பெயரையே மாற்றிக் கொண்ட மிஸ்டர் ராம்ஸே பங்களா பெயரை மாற்றியதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? பங்களாவுக்குள் நுழைந்தால் அங்குள்ள எல்லாம் ஆங்கில தோரணையிலேயே இருக்கும். தவசுப் பிள்ளை பட்லராகவும், வேலைக்காரன் பாய் ஆகவும் இந்த மாளிகையில் விளங்கினார்கள். வந்தவரை வாவென்றழைக்க ஒருவருமில்லா விட்டாலும், குரைத்து விரட்டியடிக்க நுழைவாயிலண்டை இரண்டு பெரிய நாய்கள்

கட்டப்பட்டிருந்தன. இந்தப் பங்களாவைச் சுற்றியிருந்த தோட்டத்தை மிஸ்டர் ராம்ஸே புதுப்பித்தார். எப்படி? இவர் வாசத்திற்கு முன்னர் இங்கு, மல்லிகை, முல்லை, ரோஜா, சம்பங்கி வில்வம், துளசி முதலிய புஷ்ப, பத்திர தினுசுகள் இருந்தன. அவைகளை யெல்லாம் எடுத்து விட்டு, நல்ல குரோடன்ஸ்களை வைத்தார். இந்தக் குரோடன்ஸ்களின் பலவிதமான பெயர்களைக் கற்றுக்கொள்வதில் அதிக சிரத்தையுங் காட்டினார். இவருடைய தினசரி வாழ்க்கை வாசகர்களுக்கு மிகவும் ருசிகரமாக இருக்குமல்லவா?

காலையில் சரியாக எட்டு மணிக்கு எழுந்திருப்பார். கோட்டுவாய் பெருக, கண்ணை மூடிக் கொண்டே ஸ்நான அறைக்குச் செல்வார். அங்கு, டூத் பேஸ்டும், ப்ரஷூம் தயாராக வைக்கப்பட்டிருக்கும். சீமையிலிருந்து தருவிக்கப்பட்ட டூத்பேஸ்டைத் தவிர வேறெதையும் இவர் உபயோகிப்பதில்லை. தந்த சுத்தியானதும் நேரே கண்ணாடியண்டை போய் நிற்பார். 'பாய்' வந்து தலையில் 'ஹேர் ஆயில்' தடவி ஒழுங்காய் வாரி விடுவான். அப்படியே 'டீ ரூமுக்கு'ச் செல்வார். அங்கே 'சோட்டாஹாஸ்ரி' சாப்பிட்டுவிட்டு 'டிரெசிங் ரூமுக்கு'ச் சென்று ஆங்கில உடைகளை தரித்துக் கொண்டு, இரண்டொரு புஸ்தகங்களுடன் தயாராயிருப்பார். இதற்குள் மணி ஒன்பதாகி விடும். உடனே கார் வந்து நிற்கும். அதில் ஏறிக் காலேஜுக்குச் செல்வார். பத்தரை மணிக்குக் காலேஜானாலும், தன்னுடைய 'காலேஜ் மேட்டு'களை யெல்லாம் அழைத்துக் கொண்டு போவதற்காக, இவர், ஒன்பது மணிக்குப் புறப்படுவது வழக்கம். புறப்படு முன், எதை மறந்தாலும் மறப்பார். சிகரெட் டின்னையும், 'மாச் பாக்ஸை' (தீப்பெட்டி)யும் மறக்க மாட்டார். பகல் பன்னிரண்டு மணிக்குக் காலேஜிலிருந்து திரும்பி வந்ததும் 'கலர்' ஒன்று சாப்பிட்டு விட்டு, சிறிது நேரம் சிரமபரிகாரம் செய்து கொண்டு, பின்னர் சிற்றுண்டி அருந்தி விட்டு, காலேஜுக்குச் செல்வார். மாலை, டாக்கீஸ், பீச். சிநேகிதர் 'பல'ர் வீடுகள் முதலியவற்றைப் பார்த்து விட்டு எட்டு மணிக்கு மேல் வந்து விடுவார். இரவு பன்னிரண்டு அல்லது ஒரு மணி வரை, ஆட்டம், பாட்டம், சீட்டுக் கச்சேரி முதலியன ஆடம்பரமாக நடக்கும். மிஸ்டர் ராம்ஸேயின் தினசரி வாழ்க்கை இப்படி நடைபெற்று வந்தது என்று சுருக்கமாகச் சொல்லலாம். ஆனால் இவர் படிப்பது எப்பொழுது என்று நண்பர்கள் கேட்கலாம். பரீட்சா காலத்தில் யாராரைப் பார்த்து எப்படி எப்படி சரிப்படுத்த வேண்டுமோ, அப்படிச்செய்வதில் இவர் மிகச்சமர்த்தர். படிக்காமலே பரீட்சையில் பாஸ் செய்வது விசேஷமல்லவா?

மிஸ்டர் ராம்ஸேவுக்குக் குளிர்ந்த தென்றல் காற்று பிடியாது; மின்சார விசிறிக்காற்றே பிடிக்கும். சூரிய வெளிச்சத்தில் படிப்பதைவிட, மின்சார வெளிச்சத்தில் படிப்பதற்கு ஆவல் கொள்வார். தண்ணீரைவிட சோடா, கலர் இவைகளைப் பருகுவதிலேயே இவருக்குப் பிரியம், ஆம்! இவைகள் யாவும் நாகரிகக் கல்வியின் விளைவுகள்! இது நிற்க.

V

ஜமீன்தார் மெதுவாக ரெயில்வே

ஸ்டேஷனிலிருந்து 'லிலிவேக்'குக்கு வந்து சேர்ந்தார். இவர் வருவா ரென்று தெரிந்து, மிஸ்டர் ராம்ஸே வீட்டு அமைப்பை, இந்திய சம்பிர தாயத்திற்குத் தகுந்தபடி சரிப்படுத்தி வைத்திருந்தார். தன்னுடைய டியூட ரையும் பயமுறுத்தி, தான் ஒழுங் காக, குலதர்மம் தவறாமல் நடந்து கொண்டு வருவதாகத் தகப்பனாரிடம் சொல்லச் சொல்லியிருந்தார். ஜமீன் தார் வந்த தினத்தன்று மிஸ்டர் ராம்ஸே, சிரஞ்சீவி இராமசாமிப் பிள்ளையாகத் திருநீறு தரித்துக் கொண்டு தகப்பனாருடன் தரையில் உட்கார்ந்து உண்டார். என்ன அதிச யம்! வேலைக்காரர்கள் ஆச்சரியப் பட்டார்கள்! ஆனால், 'நாயனா' நம்மீது சந்தேகங் கொண்டு வந்திருக் கிறார் என்று அவருடைய முகஜாடை யிலேயே மிஸ்டர் ராம்ஸே நன்கு தெரிந்து கொண்டார்.

ஜமீன்தார் கோவிந்தராஜப் பிள்ளை உண்டபின் சிறிது களைப்பாறினார். பிறகு தகப்பனாருக்கும் பிள்ளைக்கும் பின் வரும் சம்பாஷணை நடந்தது:—

தகப்:—தம்பி! எப்படி யிருக்கிறது உன் படிப் பெல்லாம்?

பிள்ளை:—இந்த வருஷம் கட்டா யம் எனக்குப் பாஸ் கிடைக்கும் என்று சொல்லி இருமினார்.

தகப்:—என் தம்பி! உடம்பு நிரம்ப இளைத்திருக்கிறதே. என்ன காரணம்?

பிள்ளை:—ஒன்று மில்லை; இராத் திரியில் கண் விழித்துப் படிக்க வேண் டியதா யிருக்கிறது.

தகப்:—இல்லை; மார்கூண்டு கட்டி யிருக்கிறது; கன்னத்தில் குழி விழுந் திருக்கிறது; உதடு கறுத்திருக்கிறது.

மிஸ்டர் ராம்ஸேவுக்கு இதைக் கேட்டதும் மிகுந்த கோபம் வந்து விட்டது. 'என்ன நாயனா! என்னை அவமானப் படுத்தத்தான் இங்கே வந்தீர்களோ?' என்று கடுகடுத்துக் கேட்டு விட்டு, இடத்தை விட்டு எழுந் தார். அச் சமயத்தில், தெருப் பக்கம் ஒரு சைகிள் மணி சப்தம் கேட்டது. 'கொட்டையூர் ஜமீன்தார்—டெலிகி ராம் சார்!' என்ற குரல் உண்டா யிற்று. மிஸ்டர் ராம்ஸே சென்று தந்தியை வாங்கித் தகப்பனாரிடம் கொடுத்தார். 'நீதான்' படி என்றார் பெரியவர். மிஸ்டர் ராம்ஸே தனக் குள் படித்துக் கொண்டார். அவர் முகம் உடனே வெளுத்துப் போயிற்று. 'என்ன? உரக்கச் சொல்' என்றார் தகப்பனார். 'நீங்கள் சுகுணாலய செட்டியாருக்குக் கொடுக்க வேண்டிய முப்பத்தேழாயி ரம் ரூபாவுக்கு ஜமீனை 'அட்டாச் மெண்டு' செய்யப் போகிறாராம்' என்றார், நாகரிகக் கல்வி பயின்று வரும் திருக்குமாரர். பெரியவர் அப்ப டியே நாற்காலியில் சாய்ந்தார். மிஸ்டர் ராம்ஸே உள்ளே சென்று முகத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு கட்டில் மீது படுத்தார்.

பகழிக்கூத்தரின் பாடற் பணி

—வ. மு. இரத்தினேசுவரையர்

—பண்டிதர்

சங்க காலத்துப் புலவர் பெருமக்களைப் பற்றியும், இடைக் கால வித்துவான்களைப் பற்றியும், அன்பர் இரத்தினேசுவரையர் போன்ற பண்டிதர்கள் வாயிலாகக் கேட்டு இன்புற வேண்டுமென்ற அவா, எம்போன்று இன்னும் பலர்க்கு முண்டு. ஆனால் ஸ்ரீ ஐயரைப் போன்ற பண்டித சிகாமணிகள், தங்கள் நடையைச் சிறிது தளர்த் திக் கொடுத்தால் எவ்வளவோ உபகாரமா யிருக்கும்; படிப்போர் எண்ணிக்கையும் அதிகமாகும்.

செந்தமிழ் மன்றல் சந்ததம் வீசும் பாண்டி நாட்டில் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு சற்புத்திரர் பிறந்தார். அவருக்குப் பகழிக்கூத்தர் என்பது பெயர். தந்தையார் பெயர் தர்ப்பாதனர் என்பது. அவர் சிறந்த பக்தர். சந்நாசிக் கிராமத்தில் வசித்து வந்த அத்தந்தையார் மகிழ இலக்கிய இலக்கணப் புலமையும் பகழிக் கூத்தருக்கு உண்டாயிற்று. பகழிக் கூத்தர் செங்குந்த மரபினர் என்றும் வைணவ ரென்றும் ஒரு சாரார் கூறுவர். தமிழ்ப் புலவர்கள் வரலாறுகள் செம்மையுற எழுதப் பெறுமையால் இக் காலம் ஒரு தலை துணிதல் இயலாதாகின்றது.

பகழிக்கூத்தருக்கு வயிற்றுவலிஉண்டாயிற்று. அந் நோய் அகலுமாறு பல வகை மருந்துகளை அவர் அருந்தினர். நோய் வலி மிக்கது. பகழிக்கூத்தர் செந்திலம்பதி சேர்ந்து செவ்வேளை இடையீடின்றி வழிபட்டு வந்தார். சாமகானப் பிரியரான சிவ குமாரர் மீது பகழிக்கூத்தர் இனிய சொல்லும் பொருளும் சிவணிய பிள்ளைத்தமிழ் என்ற ஒரு பிரபந்தம் பாடினர். அது 'திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்' என்னும் பெயருடன் இன்றும் நின்று நிலவுகின்றது. இப் பிள்ளைத்தமிழைச் சுவாமி சந்நிதானத்தில், பல புலவாணரும் அடியார்களும் சூழப் பகழிக் கூத்தர் அரங்கேற்றினர். பாடல்களின் சிறப்பு நோக்கி யாவரும் மகிழ்ந்தனர். பகழிக்கூத்தர் நோயும் அகன்றது. அவரும் குமரநாயகன் அருட்கடலுட் படிந்து களிதுளும்பினர். அரிய பிரபந்தம் அரங்கேற்றப் பெற்ற பின் பல வரிசைகள் புலவருக்கு அளிக்கப்படுதல் அக் கால வழக்கு. ஆனால், பகழிக்கூத்தருக்குப் பரிசு யாதும் அப்போது அளிக்கப் படவில்லை. பகழிக்கூத்தர், சபையார் செய்யும் மரியாதைகளை மதித்திலர்; குமரனருள் நினைந்து தமது இருப்பிடம் போய்த் துயின்றனர். அப்போது, குமரன் தமது திருவுருவில் அணியப் பட்டிருந்த மாணிக்க மிழைத்த பதக்கத்தைப் பகழிக்கூத்தர் மார்பில் இட்டு மறைந்தருளினர்.

விடியற்காலம் கோயிலிற் பூஜை செய்ய வந்தவர்கள் சுவாமி மீது

பதக்கம் இல்லா திருத்தலைக் கண்டார்கள். ஒருவரோடொருவர் பலவாறு பேசினர். கள்வனைத் தேடினர். ஊர் முழுதுந் தேடியும் கள்வன் அகப்பட்டிலன். ஆனால், பகழிக்கூத்தர் மார்பில் பதக்கம் பிரகாசித்தது. முதல் நாளில் நடந்தவை கொண்டு உயிருக்குயிராய் விளங்கும் செவ்வேளே, பக்தராகிய பகழிக்கூத்தரை மதித்துப் பரிசிலீந்தாரென யாவரும் நிச்சயித்தனர். இறைவன் இன்னருள் கூட்டின் வெறுப்பவர் யாவர்? உடனே பகழிக்கூத்தரைப் பல்லக்கி லேற்றிப் பல விருதுகளுடன் குமரநாயகன் ஆலய மடைந்து, தீர்த்தம் விபூதி மாலை பரிவட்டம் ஆதியன கொடுத்து அப்பெரியார் அகமகிழும்படி உபசரித்து அனுப்பினர்.

பகழிக்கூத்தர், கடவுள், உயிர், கட்டு என்ற மூன்று பொருள்கள் அநாதியானவை என்றும், குமரநாயகன் முழுத்தன்மை யுடையவரென்றும், சத்துரு சங்கார வேற்கராகிச் செந்தூரில் சாந்நித்தியராக விளங்குகின்றார் என்றும், ஆன்ம நாயகர் அவரே என்றும் நம்பி வழிபாடாற்றிய உத்தமர். பாடல் நலங் காண்பார்க்கும், பாடல் புதுவதாகப் புனைவார்க்கும் அப் பிள்ளைத்தமிழ் முது தமிழ்ச்சுவை யூட்டுவதாகும். ஒரு பா வருமாறு:—

கந்தல் பொருந்திய தவளைக் குழியிற்
கழியிற் பழனத்தில்
கரையிற் கரைபொரு திரையில் வளைத்த
கவைக்கால் விரியலவன்
பொங்கு தருந்துளி வாடையி னொந்து
பொறுதே வெயில்காயும்
புளினத் திடரிற் கவரிற் றுவரிற்
புன்னை நறுந்தாழில்
கொங்கு விரிந்த மடற்பொதி தாழைக்
குறுமுட் கரியபசுங்
கோலச் சிறிய குடக் காயிற் புயல்
கொழுதிய செய் குன்றில்
சங்கு முழங்கிய செந்திற் பதியாய்
தாலோ தாலேலோ
சமய விரோதிகள் திமிர திவாகர
தாலோ தாலேலோ



வந்துவிட்டது! வந்துவிட்டது!!

ஊக்கத்தைக் கொடுக்கக்கூடியது!
உற்சாகத்தைத் தரக்கூடியது!!
மனோவியாகூலத்தை ஒழிக்கக்கூடியது!!! } எது?

இரண்டு யானை மார்க் ஈரான் அத்தர்.

நம் தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்றதும், தமிழ்நாட்டு நிபுணர்களின் பெருமுயற்சியால் தயாரிக்கப்படுவதும், அன்னிய நாட்டு திராவகங்கள் சேர்க்கப்படாததும், எது? எங்கள் ஈரான் அத்தரே!!

2 யானை மார்க்கு ஈரான் அத்தர்	1 தோலா புட்டி	ரூ.	3-0-0
,, ,,	கால்தோலா	,,	1-0-0
,, ,,	குயீன் ஆப் நைட்	,,	1-0-0
,, ,,	மஸ்க்	,,	1-0-0
,, ,,	லிலிஜாஸ்மின்	,,	1-8-0
,, ,,	லிலிரோஸ்	,,	1-8-0
,, ,,	ஜாஸ்மின்	,,	0-12-0
,, ,,	ரோஸ்	,,	0-12-0
,, ,,	சந்தன அத்தர்	,,	1-0-0

கிடைக்குமிடம்:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,
119 மொகல் வீதி, இரங்கூன்.

நேர்த்தியான பைண்ட்! அழகான அட்டை!

"ஜோதி"

"ஜோதி"யின் முதல் வருஷத்துப்
பன்னிரண்டு இதழ்களும்
இரண்டு வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

விலை. ரூபா 4-8-0

தபாற் செலவு

பர்மாவுக்கு 1—6—0 இந்தியாவுக்கு 1—8—0
மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ... 2—0—0

தபாற் செலவையும் சேர்த்து மணியார்டரில்
முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,
47, 31-வது வீதி, இரங்கோன்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ௵ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு :	ரூ.	4-0-0
பர்மா :	ரூ.	4-8-0
வெளி நாடு :	ரூ.	6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ்.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது

பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது

கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

'மணிக் கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

	வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	3—0—0	0—2—0
வெளிநாடு	4—8—0	0—4—0

மானேஜர்:—'மணிக் கொடி' ஆபீஸ்,

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதராஸ்.